www.padippakam.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஏப்ரல் 2004 ■ ரூ.6
Volume : 1 - Issue : 6



## அம்பேத்கர் தேசம்

படிப்பகம்

www.padippakam.com



# தீண்டத்தகாதவர்களை தனித்த அரசியல் சக்தியாக அங்கீகரிக்காதது ஏன்? - I

தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு, நாடு முழுவதும் ஒரே மாதிரியான அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதன் மூலம், சில வகுப்பினரைத் தீண்டத்தகாதவர்கள் வரிசையிலிருந்து அப்புறப்படுத்தவும் - அதன் மூலம் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் இந்துக்கள் விரும்புகின்றனர். தீண்டாமை என்பது, ஒரு குறிப்பிட்ட நபரின்மீது ஒரு இந்துவுடைய மனதில் இருக்கும் வெறுப்பின் வெளிப்புற அடையாளமேயாகும். இந்த வெறுப்பின் வெளிப்புற வடிவம் - இடத்துக்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடலாம். சுருக்கமாகச் சொன்னால், இந்த வடிவம் வெறுப்பின் அளவையே குறிக்கிறது. எங்கெல்லாம் இந்த வெறுப்பு நிலவுகிறதோ, அங்கெல்லாம் தீண்டாமை நிலவுகிறது. இந்த எளிமையான உண்மையை இந்துக்கள் நன்கு அறிவர்.



அப்படியிருந்தும் தீண்டத்தகாதவர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு, நாடு முழுவதும் ஒரே மாதிரியான அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்துக்கள் வலியுறுத்தியதற்குக் காரணம் என்ன? எப்படியேனும் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அதன் மூலம் அரசியல் பிரதிநிதித்துவத்தின் பெரும்பங்கை, தாங்கள் அபகரித்துக் கொள்ள அவர்கள் விரும்பியதே இதற்குக் காரணம். இந்துக்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையேயான போராட்டமே - பிரதான போர்க்களமாக அமைந்திருந்தது என்பதில் அய்யமில்லை. எனினும், இந்தப் போர்க்களத்திற்குள்ளும் மற்றொரு போர்க்களம் உருவாகி இருந்தது. அது சிறிய போர்க் களமாக இருப்பினும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தீண்டத்தகாதவர்களுக்கும் இடையிலான போராட்டத்தையே இங்கு குறிப்பிடுகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பிரிவில் தீண்டத்தகாதவர்கள் மட்டுமின்றி, பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியிருக்கும் வகுப்பினரும் சேர்க்கப்பட வேண்டும் என்று - பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் வாதிட்டனர். தீண்டத்தகாதவர்களுக்கு மட்டுமின்றி, பொருளாதாரத்திலும் கல்வித் துறையிலும் பின்தங்கி இருப்பவர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களின் நோக்கம் பாராட்டுதற்குரியதே.

1920இல் நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பம்பாய், சென்னை ஆகிய இரண்டு மாகாணங்களிலும் - பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியிருக்கும் வகுப்பினருக்கு, இந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டது. இந்த வகுப்பினருக்கு சிறப்புப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றால், பார்ப்பனர்கள் போன்ற சிறுபான்மை உயர் சாதி இந்துக்களால், அவர்கள் அரசியல் ரீதியில் ஒடுக்கப்படக் கூடும் என்று அஞ்சப்பட்டது.


இதே நிலையிலுள்ள பிற வகுப்பினர்களும் மற்ற மாகாணங்களில் இருக்கின்றனர். அவர்கள், மேல் சாதியினரால் ஒடுக்கப்படுவதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு சிறப்பு அரசியல் பிரதிநிதித்துவம் அளிப்பது அவசியம். அவர்களது கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமானால், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மொத்த எண்ணிக்கை, பிரம்மாண்டமான பரிமாணத்தை எட்டியிருக்கும். ஆனால், தீண்டத்தகாதவர்களும் சரி, உயர் சாதி இந்துக்களும் சரி, அவர்களை ஆதரிக்கவில்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட முயற்சி என்று இந்துக்கள் இதனை எதிர்த்தனர். உண்மையில், தீண்டத்தகாதவர்களாக இல்லாதவர்களை - தங்கள் அணியில் சேர்த்துக் கொள்வதைத் தீண்டத்தகாதவர்கள் விரும்பவில்லை. தீண்டத்தக்க இந்துக்களை முன்னேறியவர்கள் என்றும், பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து, பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கோரியிருக்க வேண்டும்; இதுவே முறையானதாக இருந்திருக்கும். அவ்வாறு செய்திருந்தால், அவர்களது முயற்சிக்குத் தீண்டத்தகாதவர்கள் தங்கள் ஆதரவை அளித்திருப்பார்கள்.

ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இதற்கு இணங்கவில்லை; தங்களைத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் பிரிவில் சேர்க்க வேண்டும் என்றே அவர்கள் பிடிவாதமாக வலியுறுத்தி வந்தனர். ஆனால், தீண்டத்தகாதவர்கள் இதனை எதிர்த்ததால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் திசை திரும்பி இந்துக்களுடன் சேர்ந்து கொண்டனர். அதுமட்டுமல்ல, தீண்டத்தகாதவர்கள் என்ற வகுப்பினரே இல்லை என்று - இந்துக்களை விட மிக உக்கிரமாக மறுக்கவும் முயன்றனர். தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையே நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் - தீண்டத்தகாதவர்களுக்கு, முகமதியர்களிடமிருந்து எத்தகைய ஆதரவும் கிடைக்கவில்லை.

தீண்டத்தகாதவர்களை ஒரு தனித்த அரசியல் சக்தியாக அங்கீகரிப்பது, முகமதியர்களின் நலன்களுக்கு உகந்ததாக இருந்திருக்கும். தீண்டத்தக்கவர்களுக்கும், தீண்டத்தகாதவர்களுக்கும் இடையிலான - இந்த வேறுபாடு, அவர்களுக்குதான் நன்மை பயக்கக் கூடியது. அவ்வாறிருக்கும்போது, இந்த எண்ணிக்கைப் போராட்டத்தில் அவர்கள் தீண்டத்தகாதவர்களை ஏன் ஆதரிக்கவில்லை?

**“இந்துக்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையிலான போராட்டமே - பிரதான போர்க்களமாக அமைந்திருந்தது என்பதில் அய்யமில்லை. எனினும், இந்தப் போர்க்களத்திற்குள்ளும் மற்றொரு போர்க்களம் உருவாகி இருந்தது. அது சிறிய போர்க் களமாக இருப்பினும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தீண்டத்தகாதவர்களுக்கும் இடையிலான போராட்டத்தையே இங்கு குறிப்பிடுகிறேன்.”**



*பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 5 பக்கம் : 243*

படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி



பயங்கரத்தின் இருள்
படிந்து கொண்டிருக்கிறது
தேசமெங்கும்

மதப்பீடங்களின் மேல்
கட்டி யெழுப்பப்படுகின்றன
ஆட்சிப் பீடங்கள்

எதை இடித்தாவது
எதை வெடித்தாவது
எதை கொளுத்தியாவது
தொடர்கின்றன
உயிர்களின் அறுவடை

மதத்தின் சூலக்கைகளில்
கோர்க்கப்பட்டன
அரசியலின் அக்கிரமக் கைகள்

பின்னொரு நாளில்
மனிதர்களை அழித்த
இந்தியப் பெருநில மெங்கும்
மண்டையோடுகளின் மேல்நின்று
கெக்கலித்துச் சிரிக்கலாம்
ரத்தக் காவியேறிய பற்கள் நெளிய


எச்சரிக்கை



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்




நினைவுகளில் சீறியெழும் பறை இடியோசை - **பேரறிவாளன்**........8

அம்பேத்கர் தேசம் - **அழகிய பெரியவன்**........10

பயங்கரவாதிகளை உருவாக்கும் 'பொடா' - **க. ராசேந்திரன்**........14

பூர்வகுடிகளின் ஆளுமை ஜோதி அம்மாள் - **ஏபி. வள்ளிநாயகம்**........18

மனித உரிமைகளில் முரண்படும் கட்சிகள் - **கே. சந்துரு**........22

டாக்டர் அம்பேத்கருக்கு நோபல் பரிசு - **வ. கீதா**........28

கொத்தடிமை முகாம்களாகும் சேரிகள் - **அன்பு செல்வம்**........32

யார் ஆட்சிக்கு வரக்கூடாது - **எழில் இளங்கோவன்**........34

அதிகார வலை - **கவுதம சன்னா**........38

எது சாதியை ஒழிக்கும்? - **டாக்டர் அம்பேத்கர்**........42

தலித்துகள் × ம.க.இ.க. - **சமரன்**........46

மரண தண்டனையை முற்றாக நீக்குக - **பூங்குழலி**........48


---


- *அட்டை வடிவமைப்பு* : **யாக்கன்**
- *பின் அட்டைப் புகைப்படம்* : HRFDL
- *இதழ் வடிவமைப்பு* : **ஜெமிமா ஆலிஸ், பிரேமா**
- *அலுவலக ஒருங்கிணைப்பு* : **ஆர். ஜோன்ஸ், சி. ராமன், மு. ரமேஷ் குமார்**




படிப்பகம்

www.padippakam.com


தலித் முரசு

Volume 1 Issue 6

ஏப்ரல், 2004

8 - 3

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்

அழகிய பெரியவன்

யாக்கன்

காவ்யா

விழி.பா. இதயவேந்தன்

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ.100/- |
| நூலகக் கட்டணம் | : | ரூ.200/- |
| வாழ் நாள் கட்டணம் | : | ரூ.1000/- |

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்

9, சூளைமேடு நெடுஞ்சாலை

சென்னை - 600 094

தொலை நகல் / பேசி : 2374 65 11

E-mail : ambedkar@md4.vsnl.net.in


# எது நன்றிக் கடன்?

புரட்சியாளர் அம்பேத்கரின் 114 ஆவது பிறந்த நாள் விழாவை - ஏப்ரல் 14 அன்று, அம்பேத்கர் தேசம் கொண்டாட இருக்கிறது. அண்ணலுடைய 100 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குப் பிறகு, தலித் எழுச்சி உத்வேகம் பெற்றதாக சொல்லத் தொடங்கினோம். இன்று 14 ஆண்டுகள் கழிந்து விட்டன. விழிப்புணர்வு பெற்ற இந்தக் காலகட்டத்தில், அம்பேத்கரின் லட்சியப் பாதையை நோக்கிதான் நாம் செல்கிறோமா என்று, சுய விமர்சனத்திற்கு நம்மை ஆட்படுத்திக் கொள்ளுவதற்கு இதுவே சரியான தருணம்.

'தலித்துகளாக தலைநிமிர்வோம்' என்று சூளுரைத்து தொடங்கப்பட்ட நமது பயணம் - இன்று உட்சாதிகளாகப் பிரிந்து வெட்கித் தலைகுனியும் நிலைக்கு வந்துள்ளது. அம்பேத்கர் பாதையில் அணிவகுக்கத் தொடங்கிய நாம், இன்றைக்கு ஆரியத்தின் நோக்கத்தை நிறைவேற்று கின்றவர்களாக மாறிப்போனது எப்படி? ''ஒவ்வொரு உட்சாதியும் தனித் தனி சாதிகள். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனி கலாச்சாரம், வாழ்வியல் உண்டு. நாம் ஒரே அணியில் 'தலித்' தாகவோ, அட்டவணைப்படுத்தப்பட்ட சாதியினராகவோ, தொல்குடிகளாகவோ இணையவே முடியாது'' என்று அருவருக்கத்தக்க வகையில் - 'கருத்தியல்'களை உருவாக்கி வருகிறோம்.

சுருங்கச் சொன்னால், ஆரியம் பிரித்து வைத்த இலக்கணப் படி நின்று கொண்டு - பார்ப்பனியத்தை ஒழிப்போம் / சாதியை வேரறுப்போம் / இந்துத்துவத்தை வீழ்த்துவோம் என்று எல்லோரும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறோம் - அவ்வளவுதான். நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். அம்பேத்கர் சொன்னாரே, ''நான் சிரமேற்கொண்டு நகர்த்திய ஊர்தியைப் பின்னோக்கித் தள்ளி விடாதீர்கள்'' என்று. அவை வெறும் 'மேற்கோள்' அல்ல. அண்ணல் நமக்கு விடுத்த எச்சரிக்கை.

ஒருபுறம் 'தலித்துகள் சாதியற்றவர்கள்' என்று முழங்கிக் கொண்டு, மறுபுறம் நம்மை தனித்த சாதிகளாகக் கற்பனை செய்து கொண்டு, இந்துக்களின் சூழ்ச்சிக்கு இரையாகிக் கொண்டிருக்கிறோம். இதைவிட அவமானமும் ஆபத்தும் வேறில்லை. நம்மீது வீசப்பட்ட மலத்தை (ஜாதியை) எப்போது நாம் ரசித்து நுகரத் தொடங்கினோமோ - அன்றே நாம் தோல்வியுற்ற மக்களாகி விட்டோம். அம்பேத்கரின் பிள்ளைகள் நாங்கள் என்று தம்பட்டம் அடிப்பதற்கு - நமக்கு மயிரளவும் அருகதை இருக்கிறதா? சுரணையுள்ள ஒவ்வொரு தலித்தும் நிலைக் கண்ணாடி முன் நின்று கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது.

தன்னுடைய ஒவ்வொரு மணித்துளியையும், நம்மின விடுதலைக்காக, இனிவரும் தலைமுறைக்காக, அணுஅணுவாகத் தன்னை வதைத்துக் கொண்டு - நெருப்பாற்றில் நீந்திய அம்பேத்கருக்கு - நாம் செலுத்தும் நன்றிக் கடன் இதுதானா?

இன்று, அறிவுஜீவிகள் முன்னிறுத்தும் 'தலித்தியம்' எந்த நோக்கமும், வரையறையும் இல்லாததால், நீர்த்துப் போகத் தொடங்கியிருக்கிறது. காரணம், அம்பேத்கரியம் அதன் முதுகெலும்பாக இல்லை. தலித்துகள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; எதிரியுடனும் அணிசேரலாம் (இந்த தேர்தலில் மகாராட்டிரத்தில் இந்து மதவெறி அமைப்பான 'சிவசேனா' வுடன் இந்திய குடியரசுக் கட்சி கூட்டணி வைத்துள்ளது.) என்றொரு அவல நிலைக்கு வந்து விட்டோம். ஆம், இது அழிவின் தொடக்கமே. அதன் வெள்ளோட்டமாக, தமிழகத்தில் சங்கர மடம் இனிக்கத் தொடங்கியிருக்கிறது. அது, இனிப்புத் தடவிய நஞ்சு என்பதைப் புரிந்து கொள்ள, 14 ஆண்டுகள் போதாதா?

'தலித்தியம்' இனி இதன் போக்கிலேயே சென்றால், அது அம்பேத்கரியத்திற்கு எதிராகச் சென்றுவிடும் ஆபத்தை - யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் உரைகல், அம்பேத்கரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும். திறந்த மனதுடன், 14 ஆண்டுகளில் நம்முடைய செயல்பாடுகளை உரசிப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் நிற்கிறோம்.

குறிப்பாக, அம்பேத்கருடைய நூல்கள் இந்த 14 ஆண்டுகளில் விற்பனையானதைவிட, தலித் அறிவுஜீவிகளின் எண்ண ஓட்டங்கள்தான் விற்பனைச் சரக்காகி வருகின்றன. 1992 இல் தனஞ்செய்கீர் எழுதிய 'அம்பேத்கரின் வாழ்வும் பணிகளும்' 900 பக்கங்கள் கொண்ட நூல், மிக அருமையாக மொழி பெயர்க்கப்பட்டு, தோழர் வே. ஆனைமுத்து பல்வேறு நிதிச்சுமைகளுக் கிடையே 1200 படிகள் வெளியிட்டார். ஆனால், 12 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஓராண்டுக்கு 1,000 படிகள் அச்சடித்திருந்தாலே 10,000 நூல்கள் மக்களிடையே சென்றிருக்கும். ஆனால், நம் எண்ணிக்கை 1 கோடிக்கும் மேல் இருக்கிறது. தலித் இயக்கங்களும் அமைப்புகளும் இதைச் செய்யத் தவறியது ஏன்?

நம்மிடையே எந்த வகையிலும் கூட்டுச் செயல்பாடு என்பதே, அற்றுப் போய்விட்டது. புரட்சியாளர் அம்பேத்கரின் 114 ஆவது பிறந்த நாளில், நமது லட்சியங்களை நோக்கி - சரியான வரையறையுடன் அண்ணல் காட்டிய வழியில் அணிவகுப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்




அத்வானியின் ஞானோதயம்

விஎச்.பி., பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளின் தேசியவாதத்தை நான் குறை சொல்ல மாட்டேன். ஆர்.எஸ்.எஸ்.வுடன் பா.ஜ.க. கொண்டுள்ள உறவு என்பது, மிகவும் சிறப்பான ஒன்று; தனித்தன்மை கொண்டது. இந்த அன்புறவு எங்களுக்கு மிகவும் நெருக்கமானது. நாங்கள் ஆர்.எஸ்.எஸ். இடமிருந்து உத்வேகம் பெற்றவர்கள். நாங்கள் ஒருவருக்கொருவர் விவாதித்து, பாராட்டிக் கொள்வதன் மூலம் - எங்களால் முன்னேற்றப் பாதையில் செல்ல முடிகிறது. எனவே, ஆர்.எஸ்.எஸ்.வுடனான எங்களின் உறவை - ஒருபோதும் குறைத்துக் கொள்ள முடியாது; முடியவே முடியாது.

**எம். வெங்கய்யா (நாயுடு)** - பா.ஜ.க. தலைவர், 'இந்து' ஏட்டுக்கு (25.3.04) அளித்த பேட்டி ஒன்றில்.


ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் ஒலிம்பிக் தகுதி சுற்றுக்கான போட்டியில் ஹாக்கி விளையாட்டில், இந்தியா - பாகிஸ்தானிடம் 13.3.04 அன்று தோல்வியைக் கண்டுள்ளது. கிரிக்கெட் நடந்த அதே நாளில்தான் ஹாக்கியும் நடைபெற்றுள்ளது. இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி என்று சொல்லப்படும் நிலையில், அதே பாகிஸ்தானிடம் இந்தியா தோல்வி கண்டது குறித்து யாரும் கண்டு கொள்ளவில்லையே - ஏன்? இந்தியாவில், கிரிக்கெட் என்றாலே அது பார்ப்பனர்களின் விளையாட்டு என்கிற நிலைதான் இதற்குக் காரணமா? இரு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு - இரு நாடுகளுக்கும் இடையே ஏதோ யுத்தம் நடப்பதுபோல் சித்தரிப்பது சரியானதுதானா?

'விடுதலை' நாளேட்டில் எழுப்பப்பட்டுள்ள கேள்வி.




வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், வாஜ்பேயி பிரதமர் ஆன பிறகு - 14,833 உழவர்கள் இந்தியா முழுவதும் தற்கொலை செய்துள்ளனர். இதில் ஆந்திராவில் மட்டும் 2,009 பேர். கடந்த ஆறு ஆண்டுகால ஆட்சியில் நடந்த ஊழல் காரணமாக 49,057 கோடி ரூபாய் நாட்டுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதாக 'தேசிய ஜனநாயகக் கூட்டணி' கூறியது. இளைஞர்கள் வேலைசெய்யத்தயாராக உள்ளனர். ஆனால், வேலை மட்டும் கிடைக்கவில்லை.

காங்கிரஸ் கட்சி 11.3.2004 அன்று, வெளியிட்ட 'தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் பாவங்கள், ஊழல்கள், அவமானங்கள்' நூலிலிருந்து.




வெறுப்பை உமிழும் பிரச்சாரங்கள், மனிதர்களைப் படுகொலை செய்கின்றன. 1999 ஆம் ஆண்டிலிருந்து மத்தியில் பா.ஜ.க. ஆட்சியில் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் முஸ்லிம்கள் மீதான கொலைகளாலும் பாலியல் வன்முறைகளாலும் - நாடு ரத்தத்தால் குளிக்கிறது. 1999 இல் 52 கலவரங்கள் நடைபெற்றன; இதில் 43 பேர் கொல்லப்பட்டனர்; 248 பேர் காயமடைந்தனர். 2000 இல் நடைபெற்ற 24 கலவரங்களில் 91 பேர் இறந்தனர்; 165 பேர் காயமடைந்தனர். 2001 இல் 27 கலவரங்கள்; இதில் 56 பேர் கொல்லப்பட்டனர்; 158 பேர் காயமடைந்தனர். 2002 இல் குஜராத் படுகொலைகளையும் சேர்த்து 28 மதக் கலவரங்கள் நடந்தன; இதில், அதிகாரப்பூர்வமாக மொத்த சாவு எண்ணிக்கை 1,173; காயம்பட்டோர் 2,272. 2003 இல் 67 கலவரங்கள்; 58 பேர் கொல்லப்பட்டனர்; 611 பேர் காயப்படுத்தப்பட்டனர். ஆனால், எனக்குத் தெரிந்து 1947 - 1977 வரை 50 அல்லது அதற்கும் குறைவானவர்களே மதக் கலவரங்களில் கொல்லப்பட்டனர்.

**ஜான் தயாள்,** மூதுபெரும் பத்திரிகையாளர் மற்றும் சமூக ஆர்வலர், 'தெகல்கா' இதழில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில்.


படிப்பகம்

www.padippakam.com

## ஆயுதமேந்துக!




தலித் பெண்களின் பங்களிப்பின்றி தலித் விடுதலை சாத்திய மில்லை. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் - தலித் பெண்கள் சுயஉதவிக் குழு மாநாடு, தமிழகம் முழுவதும் விழிப்புணர்வு ஊட்டும் பணிகளைச் செய்து வரும் மதுரை 'டாக்டர் அம்பேத்கர் பண்பாட்டு மய்ய'த்தின் சார்பில் 12.3.2004 அன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் சா. தங்கவேலு தலைமை வகித்தார். டாக்டர் அம் பேத்கர் மய்ய நிறுவனர் அருட்தந்தை அந்தோணி ராஜ் சிறப்புரை நல்கினார். நெல்லை எஸ்தர் ஜெயராணி தமது உரையில், ஆதிக்கச் சாதியினரின் அத்துமீறல்களால் தலித் பெண்கள் பாதிக்கப்படும் போது, அவர்கள் ஜனநாயகப் போராட்டத்தை நடத்துவதோடு, ஆயுதமேந்தியும் போராடத் தயங்கக் கூடாது என்றார். •



## பண்பாட்டுப் புரட்சி

ஆதித் தமிழர் பேரவை, தமது இயக்கச் செயல்பாட்டின் ஒரு முக்கியப் பகுதியாக - சாதி மறுப்புத் திருமணங்களையும், சுய மரி யாதைத் திருமணங்களையும் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. இதுபோன்ற திருமணங்களை செய்து கொள்ளும் மணமக்களுக்கு ஆதித் தமிழர் பேரவையின் தலைவர் அதியமான், இரண்டாண்டு 'தலித் முரசு'க்கான ஆண்டுக் கட்டணத்தை அளித்து வருகிறார். பிப்ரவரி 8 அன்று நடைபெற்ற ரா.ஆ. தங்கம் - சா.க. கோதண்ட ராமன் வாழ்க்கைத்துணை நல ஒப்பந்த விழா, பண்பாட்டுப் புரட் சியின் ஓர் அங்கமாக விளங்கியது. இவ்விழாவில், 'நமது தலை வர்கள் எல்.சி. குருசாமி - எச்.எம். ஜெகந்நாதன்' - ஏபி. வள்ளி நாயகத்தின் நூல் வெளியிடப்பட்டது. •

## கண்டனம்



தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், பொது சுடுகாடு, பொதுத் தடம் கோரியும், இரட்டை டம்ளர் முறையை தடுக்கக் கோரியும், ஆதித் தமிழர் பேரவை சார்பாக 1.3.2004 அன்று ஈரோடு மாவட்டம் கோபி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி செயலாளர் மு. தங்க முத்து தலைமை வகித்தார். அமைப்பாளர்கள் சக்திவேல், பழனிச் சாமி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருக்க இடமில்லை; குடிக்கிறதற்கு தண்ணி யில்லை; சுடுகாட்டிற்கு வழியில்லை. இவற்றையெல்லாம் பெற போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அனைவரும் எழுச்சியுரை நிகழ்த்தினர். •



## 'தொழுவு' வெளியீடு

புதூர் அன்பழகன் எழுதிய தொழுவு கவிதை நூலை சொளகில் பனங்கிழங்கு, ஓரைக் கொழுக்கட்டை வைத்து, எழுத்தாளர் ப. சிவகாமி வெளியிட எழுத்தாளர் பா. செயப்பிரகாசம் பெற்றுக் கொண்டார். முனைவர் கே.ஏ. குணசேகரன் தலைமையேற்றார். கடந்த பத்தாண்டுகளாய் தலித் இலக்கியம் புது வெள்ளப் பெருக் காய் மேலெழுந்து வருகிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புவரை, தலித் எழுத்தாளர்கள் என நான்கு பேர்தான் இருந் தனர். இன்று வெளிவருகிற நூல்களில் அய்ம்பது சதவிகிதம் தலித் வெளியீடுகளாக இருக்கின்றன'' என்றார் சிவகாமி. இவ்விழாவில் தனுஷ்கோடி ராமசாமி, அபிமானி, குடியரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். •



படிப்பகம்

www.padippakam.com



# நினைவுகளில் சீறி எழும் பறை இடியோசை

■ பேரறிவாளன்

பார்ப்பனர்கள் தங்கள் கலைகளைப் புகழ்பெற்றதாக மாற்றுவது போல, எங்கள் கருவிகளையும் நாங்கள் புகழ் மிக்கதாக்குவோம்; விடுதலைக்கான கருவியாய் அறிவிப்போம்'' எனும் முழக்கத்தோடு, மதுரை - தலித் ஆதார மய்யம் ஏற்பாடு செய்த 'தலித் கலை விழா' 11 ஆவது ஆண்டாக எழுச்சியோடு 20.3.2004 அன்று மாலை தொடங்கியது.

எங்கள் வாழ்வும் பண்பாடும் எங்கள் பறையிசைக் கருவிகளோடு உள்ளது. அவற்றை சமூக மாற்றத்திற்காக முன் வைப்போம் என்கிற பேரெழுச்சி யோடுதான் - இந்த ஆண்டும் நிகழ்ச்சி தொடங்கியது. இதுவரை சாதி ஆதிக்கத்தால் உயிர்நீத்த விழுப்புரம், வெண்மணி, தாமிரபரணி, மேலவளவு... உள்ளிட்ட எண்ணற்ற தலித் தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் பாடலுடன் நிகழ்ச்சி எழுச்சி பெற ஆரம்பித்தது.

''மறைந்தொழியும் மண்ணின் கலைகளை தலை நிமிரச் செய்யவும், தொன்மையும் நீண்ட பாரம்பரியமும் தன்னகத்தே கொண்ட தலித் கலை வடிவங்களை மேடையேற்றி, விடுதலை விழாவாக ஆக்கவுமே தலித் கலை விழா நடத்தப்படுகிறது'' எனும் சூளுரையோடு தொடங்கிய இந்நிகழ்வுக்கு, தமிழ் நாடு இறையியல் கல்லூரி முதல்வர் மோகன் லார்பீர் தலைமை வகித்தார். ''பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு சாதாரண இடத்தில் இந்நிகழ்ச்சியைத் தொடங்கி, இப்போது மாபெரும் சாதனையாக வளர்ந்துள்ளது. பறை இழிவு அல்ல, அது பெருமை. எனது மகன் கிட்டார் வாசிக்கிறான், எனது மகள் வீணை வாசிக்கிறாள் என்பதைவிட, பறை இசைக்கிறாள் எனச் சொல்ல வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த தலித் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள், சாதி ஆதிக்கத்தை தட்டிக் கேட்பதுடன் ஒவ்வொன்றும் தலித் உரிமை முழக்கமாய் அதிர்ந்தது. மதுரை முத்து குழுவினரின் கொம்பிசை, கோபால் குழுவின் பறையாட்டம், திருமங்கலம் குழுவினரின் மாடாட்டம், அலங்காநல்லூர் குழுவினரின் பறையிசை, கொம்பிசை, உடுமலைப்பேட்டைக் குழுவினரின் ஜிக்காட்டம்... ஒவ்வொன்றும் அதன் தனித் தன்மையோடும், வேறுபட்ட போர்க் குணங்களோடும் மேடையில் சீறி எழுந்தன.

கவிஞர் என்.டி. ராஜ்குமாரின், ''குதிரை மேல ஏத்தி விட்டவன் யாரடா? - என்னைக் குதிரை மேலே ஏத்தி விட்டவன் யாரடா?'' பாடல், பார்வையாளர்களைக் கவர்ந்தது. மதுரை சந்திரனின் பாட்டுக்கும், தஞ்சை சின்னப் பொண்ணு குழுவினரின் கம்பீரமான குரலுக்கும் - விசில் சத்தங்களும் ஆட்டங்களும் பார்வையாளர்களிடமிருந்து பலமாய் எழுந்தன.

திண்டுக்கல் சக்தி கலைக் குழுவினர் மற்றும் தஞ்சை சின்னப்பொண்ணு குழுவினரின் பறையாட்டத்தில் குறிப்பாக, பெண்களின் பறை இசையும் வீரஞ்செறிந்த ஆட்ட வடிவமும் - தலித் கலை அழகியலை சிறப்புற வெளிப்படுத்தின. அவர்கள் பறையோடு திமிறி எழும் காட்சி, காண்பவர்களையும் தட்டி எழுப்பியது. நெல்லை கோடாங்கி குழுவினரின் மகுடாட்டம், ஒரு வித்தியாசமான கலை வடிவமாக இருந்தது. 'அடி மனசிருந்தா மாந்தோப்புக்கு வாடி' - சின்னப்பொண்ணு மற்றும் மாரியம்மாள் இணைந்து பாடிய பாடலுக்கு பார்வையாளர் ஒருவர், 'அம்பேத்கர் பாட்டே காணோமே' எனக் கேட்க, மகுடாட்டத்தில் நாட்டியத்தோடு அம்பேத்கர் வாழ்க்கையை சிறு பறையை இசைத்தபடி பாடினார்கள்.

ஆந்திரா - கர்னூல் நரசய்யா குழுவினரின் 'சக்க பஜனா' பறையாட்டம், ஒருவித மென்மை உணர்வாகத் தோன்றினாலும் - அதனூடே ஓர் பறை எழுச்சியும் மனதில் படிந்தது. தஞ்சை தேன்மொழி குழுவினரின் கரகாட்டம், பார்வையாளர்களை கதிகலங்க வைத்தன. கூடவே ஆட்டத்தோடு அவர்களது சாகச நிகழ்ச்சிகளும் பாராட்டுப் பெற்றன.

கலை விழாவில் மூன்று நாடகங்கள் கவனம் பெற்றன. பரட்டையின் 'கப்சாபுர மேஜிக்'; புவியரங்கம் வழங்கிய 'உரி'; 'துடி' அமைப்பின் 'பூர்வீகம்' ஒவ்வொன்றும், தலித் அடிமை வாழ்க்கை முறையை சித்தரித்தும் இவற்றுக்கு உடந்தையான இந்துத்துவ மதிப்பீடுகளை உடைத்து நொறுக்கவும், ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரலோடு தலித் மக்கள் விழிப்படையும் கருத்துகள் கவனமாய் முன்வைக்கப்பட்டன. நாடகங்களை





படிப்பகம்

www.padippakam.com

மேடையில் நடத்தாமல், உட்கார்ந்திருந்த மக்கள் முன்பு நடத்தப்பட்டதால், பார்க்கிற ஒவ்வொருவரோடும் நாடகம் ஒன்றிப் போனது.

கலை விழாவில், தலித் பெண் தலைவர்களைப் பற்றிய 'விடுதலைச் சிறகுகள்' ஒலிநாடாவும், கே.எஸ். முத்து எழுதிய 'தலித் குல சாமிகள்' ஆய்வு நூலும் வெளியிடப்பட்டன. நிலமற்ற தலித்துகள் குறிப்பாகப் பெண்களுக்கு நிலம் பெற்றுத் தருவதற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள - திண்டுக்கல் அய்யங்கோட்டையைச் சேர்ந்த தலித் போராளி திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதனுக்கு (78) 'வீரியக்காரி விருது' வழங்கப்பட்டது.

சிறந்த பறையிசைக் கலைஞராக வாழ்ந்து இறந்துபோன மதுரை - அலங்காநல்லூர் ராமையாவுக்கான 'அய்யா அழகர்சாமி விருதை' அவரது மகன், தந்தை சார்பாகப் பெற்றுக் கொண்டார். புலியாட்டம், சிலம்பாட்டம், நையாண்டி... எனப் பல்வேறு ஆட்டங்கள் விடிய விடியத் தொடர, இடையே உரைவீச்சும் மக்களை உசுப்பி எழுப்பின. தலித் ஆதார மய்யத்தின் ஒருங்கிணைப்பாளர் கே.எஸ். முத்து, விடிய விடிய விழாவை உயிர்ப்போடு வைத்திருந்தார்.

பேராசிரியர் பெரியார்தாசன், ''முதல் தலித் கலை விழாவில் பங்கேற்றேன். இப்போதும் பங்கேற்கிறேன். 1932 இல் வட்ட மேசை மாநாட்டில் காந்தியும் அம்பேத்கரும் கலந்து கொண்டபோது, நாங்கள் இந்துக்கள் அல்ல என்றும் எங்கள் பிரச்சினையை நாங்களே பேசிக் கொள்கிறோம் என்றும் அம்பேத்கர் சொன்னார். இன்று தீண்டாமையை ஒழிக்க சங்கராச்சாரி வருகிறாராம். நாய் நக்கும் - அப்புறம் கக்கும் - மீண்டும் நக்கும். அதுபோலுள்ளது நிலைமை. தலித்துகளுக்கு சாதி இல்லை. அதுதான் இந்த விழா. பார்ப்பானுக்கு எது இழிவோ, அது தலித்துக்கு உயர்வு. பார்ப்பானுக்கு எது உயர்வோ, அது தலித்துக்கு இழிவாகும். இனி தலித்துகள் எதைச் சொன்னாலும் அடக்கிச் சொல்ல மாட்டான்; தப்பட்டையோடு எழுவான். நான் யாருக்கும் அடிமையில்லை; அதை வீறுகொண்டு சொல்பவன்தான் தலித். வெட்கம், மானம், சூடு, சொரணை நாலும் இல்லாதது பார்ப்பனக் கலை. இவையெல்லாம் உள்ளதுதான் தலித்துகளின் கலை'' என்றார்.

எழுத்தாளர்விழி. பா. இதயவேந்தன், 'தலித் இலக்கியங்களில் முன்வைக்கும் அரசியல்' என்ற தலைப்பில், தமது கட்டுரையை முன்வைத்துப் பேசினார்: ''இலக்கியத்திற்குள் அரசியல் என்பது, வலிந்து திணிக்கிற நிலையில்லை. அது இயல்பாக நிகழ்வது. ஒவ்வொரு இலக்கியத்தையும் அல்லது இலக்கிய வடிவங்களையும் இயல்பாக உற்று நோக்கும்போது, அதன் ஊடாக அரசியல் உள்நுழைந்திருப்பதை நாம் கண்டறிய முடியும். இன்று தலித் மக்கள் சாதி இந்துக்களால் ஒடுக்கப்படும் இழிநிலைக்கெதிராக, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சந்திக்கிற சூழலில் - பண்பாட்டு ரீதியாகவும் போராட வேண்டிய கட்டாயம் தலித் இலக்கியத்திற்கு நேர்ந்திருக்கிறது.

அடிநிலை மக்களின் கண்ணீரும் ஒரு நாள் செந்நீராக மாறாதா என்பதின் அடையாளம்தான் டாக்டர் அம்பேத்கர், தாத்தா ரெட்டமலை சீனிவாசன் போன்றோரின் வரவு. தலித் மக்கள் அரசியல் பொருளாதார ரீதியாக வெல்ல வேண்டிய தருணம் நம் முன் பரவிக் கிடக்கிறது. ஆனால், அதற்கு இடையூறாக எதிர்க் கலாச்சார சூழல் இருப்பதையும் உள்வாங்கி தலித் இலக்கியம் மீற வேண்டியுள்ளது. அனைத்துவிதமான சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைக்கெதிரான கலகம் என்பது, தலித் இலக்கியங்களில் உள்ளதைப் போல் தலித் இயக்கங்களிலும் நிகழ்ந்தாக வேண்டும்.''



காவல் துறையின் அனுமதி மறுப்பையும் மீறி அய்யாயிரத்துக்கும் மேற்பட்டோர் உணர்வோடு திரண்டிருந்த இக்கலை விழா, விடிய விடிய நடந்தது. இடையிடையே அரங்கின் உணவகத்தில் மாட்டுக்கறி உணவு கிடைக்கும் என அறிவிப்பும் செய்யப்பட்டது. அம்பேத்கர் நூல்கள் மற்றும் தலித் சிந்தனையாளர்களின் கலை, இலக்கிய, அரசியல் நூல்கள் பல விற்பனைக்குக் கிடைத்தன.



''ஏகாதிபத்தியக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளச் செய்யும் சதித் திட்டமே தலித் கலை விழா'' என துண்டறிக்கை கொடுத்து தலித்துகளை திசை திருப்ப முயற்சி செய்த ம.க.இ.க. அணியினரின் கனவு பொய்த்துப் போய்விட்டது. இயல்பாகவே ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல்கள், கருத்தியல் ரீதியாக பறையாட்டத்தோடும் எழுச்சி பெற்றன. இறுதியாக, தலித் ஆதார மய்ய இயக்குநர் ஜெயகரன் நன்றி கூறினார்.

ஏதோ ஒரு சீரழிந்த தொலைக்காட்சித் தொடர், சினிமா, நாடகம் பார்த்தோம் என்றில்லாமல், இது எங்கள் குடும்பத் திருவிழா, உழைக்கும் மக்களின் எழுச்சி விழா என்பதாக வந்திருந்த தலித் மற்றும் தலித் ஆதரவாளர்களின் உணர்வைக் காண முடிந்தது. இன்னமும் பறை இடியோசை, ஆதிக்கத்திற்கெதிராகச் சீறி எழுவதை நினைவுகளிலிருந்து நீக்க முடியவில்லை. •

புகைப்படங்கள் : என். ஜெய்சிங்



படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் - தெருவுக்குத் தெரு, மூலைக்கு மூலை சிலைகளாக வைத்துப் போற்றப்படுகின்ற ஒரு மாமனிதரை, மாபெரும் விடுதலையை அம்மக்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிற ஒரு போராளியை, இந்தியா என்கிற உலகின் மாபெரும் ஜனநாயக அரசு செயல்பட - வழிகாட்டு நெறிகளான சட்டத் தொகுப்பை வழங்கிய ஒருவரை, ஒரு பெரும் தலைவராகக் கருதாத இந்து சாதிய சமூகத்தின் நிலை - முரண்பாடானது, வெட்கக்கேடானதும்கூட.

# அம்பேத்கர் தேசம்

■ **அழகிய பெரியவன்**

*"ஒ பாபாசாகேப்*
*நீ அள்ளிக் குடித்த நீரால்*
*எமது நூற்றாண்டுத் தாகம் தீர்ந்தது"*

- மங்கள் ரத்தோட், சவுதார் குளப் போராட்டத்தை நினைவுபடுத்தும் கவிதை

பேரறிவாளர் பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களை - 'இந்தியாவின் அரசியல் அமைப்புத் தந்தை' என்று அறிவிக்க வேண்டும் என அண்மையில் 'அம்பேத்கர் விசார் மஞ்ச்' என்ற டெல்லியைச் சேர்ந்த ஓர் அமைப்பு அரசிடம் கோரிக்கை வைத்திருந்தது. பா.ஜ.க. அரசு, அக்கோரிக்கையை நிராகரித்து விட்டது. அரசின் நிராகரிப்புக்கு விளக்கமளித்திருந்த எல்.கே. அத்வானியின் கூற்று விவாதத்துக்கு உரியது. "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் - யாரையும் நாட்டின் தந்தை என்றோ, தலைவர் என்றோ அறிவிக்க இடம் தரவில்லை. காந்தியை, தேசத் தந்தை என்பது அரசு அறிவித்ததால் அல்ல; மக்களே அப்படி ஒரு பட்டத்தை அவருக்குத் தந்தார்கள்" என்று பதிலளித்திருந்தார்.

இந்த விளக்கத்துக்குப் பிறகு மீண்டும் அவ்வமைப்பு வேறொரு கோரிக்கையை வைத்தது. "காந்தியை தேசப்பிதா என்று அரசு அறிவிக்கவில்லை என்றால், உடனடியாக அவரை தேசப் பிதா என்றும், அம்பேத்கரை அரசியலமைப்புத் தந்தை என்றும் அறிவிக்க வேண்டும்." இக்கோரிக்கைக்கு அரசிடமிருந்து பதில் இல்லை. ('இந்து' - 2.1.04)

அதிகாரத்தின் குரலாகவும், அரசின் குரலாகவும் ஒலிக்கும் எல்.கே. அத்வானியின் குரல்தான் - இந்தியாவின் சாதியக் குரலும். அவர்கள் அம்பேத்கரை ஒரு பெரும் தலைவராகவோ, ஒரு அறிவாளராகவோ, ஒரு புரட்சியாளரா



படிப்பகம்

கவோ அங்கீகரிப்பதில்லை. அதிகார வர்க்கத்தினால் புறக் கணிக்கப்படுகின்ற ஒரு தலைவராக, சாதி வெறியர்களால் எந்நேரத்திலும் இழிவுபடுத்தப்படவும், அவமானப்படுத்தப் படவும் இலக்காகக் கூடிய ஒரு மனிதராக, அறிவாளியா கவும், ஆய்வாளராகவும், ஏற்றுக் கொள்ளப்படாத பேரறி வாளராக, சொந்த மக்களாலேயே சில நேரங்களில் துரோகம் இழைக்கப்படும் வழிகாட்டியாக - இப்படிதான் இன்னும் அவர் இருந்து கொண்டிருக்கிறார்.

எங்கள் ஊருக்கு அருகில் நடந்த சம்பவம் இது. அந்தக் கிராமத்துப் பள்ளியில் அம்பேத்கரின் புகைப்படத்தை வைக்க இளைஞர் மன்றத்தினர் சிலர் முயன்றபோது, அதற்கு எதிராக பா.ம.க. தலைவர் ராமதாஸ் அவர்களின் படத்தை வைக்க சிலர் முயன்றனர். இப்பிரச்சினை, கல்வி உயர் அதி காரி வரை சென்று தீர்க்கப்பட்டு அம்பேத்கரின் படம் வைக் கப்பட்டது. தேசியத் தலைவர்களின் பட்டியலில் அம்பேத்கர் பெயர் உள்ளது. ஆனால், அவர் புகைப்படங்கள் அதிகாரப் பூர்வமாக அரசு அலுவலகங்களில் வைக்கப்படுவதில்லை. அவரை சாதியுடன் இணைத்தே பார்ப்பதனால் இருக்கும் நிலை இது.

சட்டப் பிரிவுகள் சில விவாதத்துக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாகும்போது, தேவையில்லாமல் அம்பேத்கரின் பெயர் இழிவான முறையில் சில சாதி இந்துக்களால் விமர்சிக்கப்படு கிறது. தலித்துகளை இழிவுபடுத்த வருகிறவர்களின் கொடு மைகளை, முதலில் ஏற்றுக் கொள்கிற 'மெசியா'வாக (Messiah) அவர்தான் நிற்கிறார். தன் மக்களை விடுவிக்கப் போராடிய அப்போராளி - அதே மக்களின் முன்னால், பல இடங்களில் சிறைக்கம்பிகளுக்குள்ளேதான் இருக்கிறார்.

அவரை இஸ்லாமியர்களுக்கு எதிரானவராக வினய் கட்டியார் போன்ற இந்துத்துவவாதிகள் திரிப்பதும், காந்தியை இழிவுபடுத்தியவராக அருண்சோரி போன்றவர் கள் பொய் சொல்வதும், பல்வேறு மட்டங்களில் தொடர் கிறது. அம்பேத்கர் நூற்றாண்டு விழாவின்போது, சென்னை பல்கலைக் கழகத்தில் உபேந்திர பக்சி அவர்கள் ஆற்றியிருக்கிற உரையில் - அம்பேத்கரை உண் மையான தலித், அறிவாளி, பத்திரிகையாளர், காந் திக்கும் முந்தைய செயல்வீரர், காந்தியத்தோடு சம ரிட்டவர், அரசமைப்புச் சட்ட நிபுணர், இந்து மதத்தைத் துறந்தவர் என்கிற ஏழு வகையான வகை மாதிரிகளில் பன்முகப்படுத்தி இருக்கிறார். ('காலச்சுவடு' - சனவரி - பிப்ரவரி, 2002)

மேலும், மேலும் அவரை நாம் ஆய்வுகளுக்கு உட்படுத்தும்போது, இவ்வகையான பல பரி மாணங்களுடன் எழுவதற்கான ஆளுமை களைக் கொண்டவராக அம்பேத்கர் இருக்கிறார். ஆனால், இது போன்ற எந்த அடையாளங் களையும் அவருக்கு வழங்கிவிடாதபடி ஆளும் ஆதிக்கச் சாதிக் கூட்டம் தடையாக இருந்து வருகிறது. அம்பேத்கர் பற்றிய முழுமையான சித் திரங்கள் எதுவும் மக்களிடையே போய்ச் சேர்ந்து விடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக் கின்றனர், ஆளுகின்ற அதிகாரக் கூட்டத்தினர்.

இந்திய ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் - தெருவுக்குத் தெரு, மூலைக்கு மூலை சிலைகளாக வைத்துப் போற்றப்படுகின்ற ஒரு மாமனிதரை, மாபெரும் விடுதலையை அம்மக்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிற ஒரு போராளியை, இந்தியா என்கிற உலகின் மாபெரும் சனநாயக அரசு செயல்பட - வழி காட்டு நெறிகளான சட்டத் தொகுப்பை வழங்கிய ஒருவரை, ஒரு பெரும் தலைவராகக் கருதாத இந்திய சாதிய சமூகத்தின் நிலை - முரண்பாடானது, வெட்கக்கேடானதும்கூட.



ஒரு நாட்டின் சீரான செயல்பாட்டுக்கும், அந்நாட்டுத் தொல்குடிகளின் விடுதலைக்கும் காரணமாய் விளங்கும் மனி தர்களை - அந்நாட்டுத் தலைவர்களாகப் போற்றும் வழக் கம் - பல்வேறு நாடுகளில் இருந்து வருகிற மரபு. இதை நெல்சன் மண்டேலா போன்றவர்களின் வரலாற்றிலிருந்து அறியலாம். ஆனால், இந்தியாவின் பெரும்பான்மை மக்களான தலித்துகளுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு அடையாளத்தை வழங்கிய, இந்நாட்டின் இயக்கு விசையான சட்டத்தை வகுத்துத் தந்த அம்பேத்கருக்கு - தேசத் தலைவர் என்கிற நிலை அளிக்கப்படவில்லை. இது, அவர் புறக்கணிக் கப்பட்டிருப்பதை தெளிவாகக் காட்டும் அடையாளம்.

சாதியச் சமூகமாக நிலைப் பெற்றுள்ள இந்தியச் சமூகத்தை ஆண்டு கொண்டிருக்கும் பார்ப்பனியத்துக்கு, அதன் சனாதன தர்மத்தைக் கட்டிக்காக்கின்ற, அதன் எல்லைகளை மீறாத ஒருவரே தலைவராக முடியும். அவ்விடத்தை மிகக் கச்சித மாகப் பிடிக்கும் காந்தியையே - அது, எப்போதும் தன் தலை வராக முன்மொழிந்து வந்துள்ளது. காந்தியின் எல்லா செயல் பாடுகளும் ஆன்மா, ஆன்மீகம், ஆன்ம கடைத்தேற்றம் என்கிற மய்யத்திலேயே இயக்கம் கொள்கின்றன. இது, இந்துத்துவத்துக்கு மிகச் சாதகமான ஒன்றாகும். காந்தியம் இன்று அதன் தோற்ற மண்ணான குஜராத்துக்கே - கடைத் தேற்றத்தையும் ரட்சிப்பையும் வழங்கவில்லை. அது, இந்துத்து வத்தின் வேறொரு முகமாக மாற்றம் பெற்று விட்டது.

இன்று, சாதியத்தையும், இந்துத்துவத்தையும் சிதைக்கின்ற





**“காந்திதான் இந்தியா' என்பது, சாதியத்தைக் காக்கிற - சனாதனத் தைப் போற்றுகிற முழக்கம் ஆகும். அந்த இந்தியாவில் தலித்துகளுக்கு மதிப்பில்லை, இடமில்லை; தலித்து களுக்காகப் போராடிய வர்களுக்கும் மதிப் பில்லை.”**

www.padippakam.com


எதிர் செயல்பாடுகளே, இந்து வெறியின் கொடுமைகளைச் சந்திக்கும் பலம் பொருந்தியதாக உள்ளன. அம்பேத்கரியம் இன்று அப்படி இருப்பது நடைமுறை உண்மை. இவ்வேறுபாடுகளை அறிந்திருக்கும் பார்ப்பனியம், தொடக்ககாலம் தொட்டே காந்தியையும், காந்தியத்தையும் தூக்கிப் பிடித்துக் கொண்டே வந்துள்ளது.

இந்த நூற்றாண்டின் தொடக்க காலமான 1915லேயே காந்திக்கு 'மகாத்மா' பட்டம் வழங்கப்பட்டுவிட்டது. அதை வழங்கியவர் இந்திய புராணீக மரபையும், வேதங்கள், இதிகாசங்கள், தத்து பெற்றுள்ளன. அவரின் ஒவ்வொரு எழுத்தும், மிக நேர்த்தியான தோல்கட்டு மான நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டு நூலகங்களுக்கு அரசு வழங்கியுள்ளது.

''மகாத்மா, நேரு, ராஜேந்திர பிரசாத் மற்றும் படேல் (சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே) ஆகியோருடைய எழுத்துகளின் ஒழுங்கமைக்கப்பட்ட தொகுதிகள் நம்மிடம் உண்டு. ஆனால், அம்பேத்கரின் முழுத் தொகுதிகள் இப்போது தான் வெளிவரத் தொடங்கியுள்ளன. அதுவும், மகாராட்டிர அரசின் முன் முயற்சியால்'' என்கிறார் பக்ஷி, தம் கட்டுரையில். கடந்த ஆண்டின் முதல் அந்தப் பட்டத்தை சட்டப்படி அரசு கையாளவும் கூடாது. அதுதான் வாதத்துக்கு ஏற்றதாக இருக்கும். ஆனால், ரூபாய் நோட்டுகளிலும் அரசு தருகின்ற அதிகாரப் பூர்வமான விளம்பரங்களிலும் காந்தியை - 'தேசப்பிதா', 'தேசத் தந்தை' என்றே குறிப்பிடுகிறார்கள்.

அரிய அஞ்சல் தலைகளின் வெளியீடு போல, அம்பேத்கரின் இரண்டு அஞ்சல் தலைகளை மட்டுமே வெளியிட்டு, அதைக் குறைந்த அளவே பரவலாக்குகிற அரசு, காந்தியாரின் நூற்றாண்டின் போது மட்டும் - பத்துக்கும் மேற்பட்ட சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டது. அந்த அஞ்சல் தலைகளில் பல்வேறு வகையான சம்பவங்களையும், தோற்றங்களையும் விளக்கும் காந்தியாரின் படங்கள் வெளியிடப்பட்டிருந்தன. ஒப்பீட்டு அளவில் - 'காந்தி அமைதி விருது'க்கும், 'அம்பேத்கர் விருது'க்கும் அரசு காட்டும் வேறுபாட்டை, பரப்புரையை, முக்கியத்துவத்தை நாம் அறிவோம்.

இந்தியாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்ளும் எந்தத் தலைவர்களின் நிகழ்ச்சிப் பட்டியலிலும், காந்தி சமாதிக்கு அஞ்சலி என்பது நிரந்தரமான ஒன்று. ஆனால், முக்கியத்துவம் என்ற அளவிலும், பராமரிப்பு என்ற அளவிலும், மிகச் சாதாரணமான நிலையிலேதான் அம்பேத்கர் அவர்களின் சமாதி இருக்கிறது. அது தலைவர்களால் கவனிக்கப்



அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு உறுப்பினர்களுடன் டாக்டர் அம்பேத்கர்

**"கறுப்பர்களின் போராட்ட வரலாற்றில் கடைப்பிடித்த சில நடைமுறைகளைப் போல, நாமும் கடைப் பிடிக்க வேண்டியுள்ளது. பாபாசாகேப் அம்பேத்கரின் பிறந்த மாதம் - தலித்துகளின் தன்னுரிமை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அம்மாதத்தில் நாடெங்கிலும் அண்ணலின் பெயரில் கருத்தரங்குகளையும், கலை நிகழ்வுகளையும் நடத்த வேண்டும்."**

வங்கள் ஆகியவற்றை வியந்து போற்றி நவீன அடையாளத்தை அவற்றுக்கு வழங்க முயன்றவருமான ரவீந்திரர். காந்தியைப் பற்றி எழுதப்பட்ட நூல்களிலும், ஆய்வுகளிலும் 'தேசத் தந்தை' என்கிற அடைமொழி மிகக் குறிப்பாகவும் கவனமாகவும் பயன்படுத்தப்பட்டே எழுதப்பட்டுள்ளது.

'இந்தியாவின் தலைவர்' என்ற வார்த்தையைத்தான் லூயி பிஷர் போன்ற பல வெளிநாட்டு எழுத்தாளர்களும் காந்தியை குறிப்பிடும்போது பயன்படுத்துகின்றனர். அவருடன் ஒருநாள் கழித்ததிலிருந்து ஒரு வாரம், ஓராண்டு என உடனிருந்தது வரை - நூல்களாகவும் பதிவுகளாகவும் மாற்றம் மாத விவரப்படி 'காந்தியின் சுயசரிதை' ஆங்கிலப் பதிப்பு மட்டும் சுமார் 10,29,000 படிகள் 'நவஜீவன் அறக் கட்டளையால்' விற்கப்பட்டுள்ளன. பிற மொழி பதிப்புகளின் புள்ளி விவரங்கள் இன்னும் மலைக்க வைக்கும். இப்படி ஏதாவது ஒரு புள்ளிவிவரத்தை நாம் அம்பேத்கரின் நூல் தொகுதிகளுக்கு வழங்க முடியுமா? மிகச் சிரமம். ஏனென்றால், அவை இப்போதுதான் தம் கணக்கைத் தொடங்கியுள்ளன.

அத்வானி சொன்னது அப்பட்டமானதொரு பொய் என்று நமக்குப் பல்வேறு தகவல்களிலிருந்து தெரியவரலாம். தேசத் தலைவர் என்று அரசு காந்தியை அறிவிக்கவில்லை என்றால், படுவதில்லை. மும்பையின் கழிவுகளெல்லாம் வந்து கலக்கும் கடற்கரையின் ஒரு பகுதியில், சுத்தமில்லாத நாற்றம் வீசும் சூழலில்தான் அவரின் சமாதி இருக்கிறது. அவ்விடத்துக்கு நாம் போக வேண்டுமென்றால், நம்மை அழைத்துப் போக சில டாக்சிகாரர்களுக்குக் கூட வழிதெரிவதில்லை. அந்த அளவுக்கு அது மக்களாலும் மறக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்புமைகளை, நாம் வருத்தம் தோய்ந்த ஆத்திரமுடனே செய்ய வேண்டியிருக்கிறது. வேறு எந்தத் தலைவர்களுக்கும் துளியளவும் குறையாத, மேலான பணியை அரசுக்கும், ஒட்டு மொத்த சமூகத்துக்கும் வழங்கிச் சென்றிருக்கும் ஒரு மனிதருக்கு இழைக்கப்படும்


படிப்பகம்

www.padippakam.com



அநீதி இது. இந்தியாவின் 21 கோடி தலித்துகளின் விடுதலைக் குரலாக இருக்கும் மாமனிதரை, அரசு உரிய மதிப்பளிக்காமல் நிராகரித்தே வருகிறது. அவருக்கு அம்மரியாதையை வழங்குவதற்கான எந்தப் பணியை செய்வதிலும் அது அக்கறை காட்டுவதும் இல்லை. அம்பேத்கர் தனி மனிதராக, உடன் உறுப்பினர்கள் கைவிட்ட நிலையில், ஓயாது உழைத்து உருவாக்கிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட நாளான சனவரி 26 அன்று கூட அரசு அவரை நினைப்பதில்லை. மாறாக, படேலை நினைவு கூறுகிறது.

நியூயார்க், லண்டன் போன்ற உலகின் முக்கிய நகரங்களில் தன் நேரத்தையெல்லாம் கழித்துத் திரட்டிய அறிவின் சேகரிப்பை - தன் மண்ணுக்குக் கொண்டு வந்து கொட்டிய அறிவுஜீவி. வாக்களிக்கும் வயது முதற்கொண்டு ஆட்சி நடைமுறை வரைக்கும் - தன் அறிவு தீட்சண்யம் மிளிரும் வாதத்தாலும் எழுத்தாலும் வரையறுத்துத் தந்த அரசியல் நிபுணர். பெண் சமத்துவத்தை சட்டமாக்கியதன் மூலம் நடைமுறைப் படுத்தியவர். சவுதார் குளம் தொடங்கி நாக்பூர் வரையிலான தன் போராட்டங்கள் மூலம் - இந்து மதத்தை நடுங்கச் செய்து, தலித்துகளுக்குப் போராளியானவர். பதினேழு வயது தொடங்கி அறுபத்து அய்ந்து வயது வரை, இந்தியாவை உலுக்கிய பல்வேறு நூல்களை எழுதிய எழுத்துப் போராளி. பொருளாதார மேதை. இப்படி அம்பேத்கரின் பணிகளை மதிப்பிட்டுக் கொண்டே போனால் அது நீளும்.




அரசின் நிலைப்பாட்டிலிருந்து நாம் தெரிந்து கொள்வது இதைத்தான். ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் போராடுவதை, போராட்டமாகக் கருத முடியாது. அரசே ஒடுக்கும் எந்திரமாக இருக்கும்போது, அது நிச்சயம் அதற்கெதிரானப் போராட்டத்தை ஒரு வரலாற்றுத் தேவையான போராட்டமாகக் கருதாது.

வெள்ளையரிடமிருந்து, ஆதிக்கச் சாதியினரிடம் கைமாற்றுவதற்காக நடந்த போராட்டத்தையே போராட்டமாக அரசு கருதும். சாதியத்தின் மீதும், இந்துத்துவத்தின் மீதும் தாக்குதல் தொடுத்த அம்பேத்கரின் பக்கம், அதன் பாராமுகம் இருந்தபடியேதான் இருக்கும். அதற்குத் தேவையான போது அம்பேத்கரை நினைவு கூர்வதும், பிறகு மறக்கடிப்பதும் அதன் நடைமுறைச் செயல்பாடு.

'சிவாஜி : இஸ்லாமிய இந்தியாவின் இந்து அரசன்' என்ற ஜேம்ஸ் லேனின் நூலைத் தடை செய்வீர்களா என்று கேட்டதற்கு, ''நாங்கள் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கிறோம். ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்', அம்பேத்கரின் 'இந்து மதத்தின் புதிர்கள்' போன்ற நூல்களைக்கூட நாங்கள் தடை செய்வதை விரும்பியதில்லை'' என்று அண்மையில் தேர்தல் பிரச்சாரத்தின் போது எல்.கே. அத்வானி சொல்லியிருக்கிறார். இந்தப் போலி நிலைதான் அரசின் நிலையும். இவர்களின் சகிப்புத்தன்மை, மதச் சார்பின்மை, கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் பண்பு ஆகியவை பற்றி நாடே அறியும்.

**“அம்பேத்கரின் தேசமாக, அம்பேத்கரின் நாடாக இந்தியா அறியப்படும் போதுதான் - தலித்துகளின் நலனில் அக்கறை கொண்டதாக இந்நாடு மாறும்.”**

சமூக நீதிக்காகப் பாடுபடும் அரசு என்று மார்தட்டிக் கொள்ளும் இந்த இந்து அரசு, தனது விளம்பரங்கள் மூலம் அம்பேத்கரின் போராட்டத்தை மறைக்கவும் சிறுமைப்படுத்தவுமே முயன்று வருகிறது. *''20 மார்ச் 1927 அன்று பாரத ரத்னா பாபா சாகேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் அவர்கள், மகத்தில் உள்ள சவுதார் ஏரி நீரை எல்லோரும் பயன்படுத்தும் உரிமையை வழங்கக் கோரி பொது மக்களிடையே பிரச்சாரம் தொடங்கியதன் மூலம் - சமத்துவத்தை அடைய சமூக நீதிக்குப் புதிய வழிகாட்டினார்''* என்று மய்ய அரசின் 'சமூக அதிகாரமளிப்புத் துறை' விளம்பரம் வெளியிட்டிருந்தது, பா.ஜ.க. அரசு ('தினமணி' மார்ச் 21, 2003) அம்பேத்கரின் போராட்டத்தைப் பிரச்சாரம் என்று சொல்வதன் மூலம், அது அம்பேத்கரை மென்மையானவராக திரித்துச் சித்தரிக்க முயல்கிறது.

இப்படியான திரிபு வேலைகளிலிருந்து நாம் அம்பேத்கரை தனித்துக் காட்டிக் கொண்டே இருப்பதற்கும், நமக்கான தலைவராக மட்டுமின்றி அவரை இந்நாட்டின் பெரும் மக்கள் தலைவராக - எல்லா மட்டங்களிலும் அடையாளப் படுத்தும்படி செய்வதற்கும் போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. 'காந்தி தேசம்' என்கிற கருத்தமைவை உடைப்பதிலிருந்து தொடங்குவதுதான் நம் போராட்டம். ராமராஜ்ஜியத்தின் 'அகிம்சை' வடிவமான 'காந்திதான் இந்தியா' என்பது, சாதியத்தைக் காக்கிற - சனாதனத்தைப் போற்றுகிற முழக்கம் ஆகும். அந்த இந்தியாவில் தலித்துகளுக்கு மதிப்பில்லை; இடமில்லை தலித்துகளுக்காகப் போராடியவர்களுக்கும் மதிப்பில்லை, இடமில்லை, காந்தி தேசம் இந்துக்களுக்கு வேண்டுமானால் 'சொர்க்கமாய்' இருக்கலாம். ஆனால், தலித்துகளுக்கு அது 'நரகமே'.

அம்பேத்கரின் தேசமாக, அம்பேத்கரின் நாடாக இந்தியா அறியப்படும் போதுதான் - தலித்துகளின் நலனில் அக்கறை கொண்டதாக இந்நாடு மாறும். கறுப்பர்களின் போராட்ட வரலாற்றில் கடைப்பிடித்த சில நடைமுறைகளைப் போல நாமும் கடைப்பிடிக்க வேண்டும். பாபாசாகேப் அம்பேத்கர் பிறந்த மாதம் - தலித்துகளின் தன்னுரிமை மாதமாகக், கடைப்பிடிக்கப்பட வேண்டும்.


அம்மாதக் கொண்டாட்டங்களில் நாடெங்கிலும் அண்ணலின் பெயரில் கருத்தரங்குகளையும், கலை நிகழ்வுகளையும், கண்காட்சிகளையும், போராட்டங்களையும், நடத்துவது; சாதி ஒழிப்பிற்கு பாடுபட்டவர்களுக்கும், சாதியை மீறி வீர மரணம் அடைந்தவர்களுக்கும் விருதுகளை வழங்குவது, வெளியீடுகளைக் கொண்டு வருவது போன்ற செயல்பாடுகளை நாம் தொடங்குவோம். அரசும் அவைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துவோம்.

அரசு நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், ஆய்வு மய்யங்கள் அனைத்திலும் அண்ணலின் அத்தனை எழுத்துத் தொகுதிகளும் இடம்பெற வேண்டும். எல்லா அரசு அலுவலகங்களிலும் அவர் படங்களை இருக்கச் செய்ய வேண்டும். அம்பேத்கரின் பெயரைச் சொல்கிற போதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்களின் தந்தை, இந்திய அரசமைப்புத் தந்தை என்ற பட்டங்களை நாம் ஓயாமல் இனி சேர்த்து உச்சரிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com




# பயங்கரவாதிகளை உருவாக்கும் 'பொடா'

## டெல்லியில் மக்கள் தீர்ப்பாயம் நடத்திய பொது விசாரணை

'விடுதலை' **க. ராசேந்திரன்**

பயங்கரவாதிகளுக்கு 'பொடா' சட்டம் திட்டவட்டமான விளக்கத்தை முன்வைக்கவில்லை. எனவே, ஒவ்வொரு மாநிலத்திலும் 'பொடா' வெவ்வேறு பிரிவினரை பயங்கரவாதிகளாக்கி விட்டது. குஜராத் மற்றும் மகாராட்டிராவில் முஸ்லிம்கள் பயங்கரவாதிகள். தமிழ் நாட்டில், விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியவர்கள் பயங்கரவாதிகள். உத்திரப் பிரதேசம், ஜார்கன்ட், ஆந்திராவில் - தலித் மற்றும் பழங்குடி மக்கள் பயங்கரவாதிகள். இப்படி 'பொடா' சட்டம் முறைகேடாக - பழி வாங்கும் ஆயுதமாக - பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு வடிவங்களில் பாய்ந்து கொண்டிருக்கிறது.

புதுடில்லியில் மார்ச் 13, 14 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற 'பொடா' சட்டம் பற்றிய மக்கள் தீர்ப்பாயத்தின் பொது விசாரணை, இந்த உண்மைகளை தெளிவாக உணர்த்தியது. பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் 16 மனித உரிமை அமைப்புகள், சமூக இயக்கங்கள் இணைந்து, இந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்திருந்தன. தமிழ் நாட்டில் 'மக்கள் கண்காணிப்பகம்' இதற்கான முன் முயற்சிகளை எடுத்தது. 'மக்கள் உரிமைக் கூட்டமைப்பு', 'தந்தை பெரியார் திராவிடர் கழகம்' ஆகிய அமைப்புகளும் இதில் பங்கேற்றன.

முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி, மும்பை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி எச். சுரேஷ், தேசிய பெண்கள் நலவாரியத்தின் முன்னாள் தலைவர் மோகினி கிரி, முன்னாள் உறுப்பினர் சயிதா அமீது, மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவர் மூத்த வழக்குரைஞர் கே.ஜி. கண்ணபிரான், கொல்கத்தா உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி டி.கே. பாசு, எழுத்தாளர் அருந்ததிராய், பத்திரிகையாளர் பிரபுல் பித்வாய் ஆகியோர் நடுவர்களாக இருந்து - பாதிக்கப்பட்டோரின் அவலங்களைக் கேட்டனர்.

'பொடா'வில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையாகியுள்ள பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் ஆகியோரின் வாக்குமூலங்களோடு முதல் நாள் விசாரணை தொடங்கியது. ஆனால், அவர்களின் வாக்குமூலங்கள் ஒரே நிமிடத்தில் முடிந்து விட்டன. ''நடுவர்களே, அவையினரே, நாங்கள் எந்த வாக்குமூலத்தையும் தரப்போவதில்லை என்பதே எங்கள் வாக்குமூலம். எந்தக் கூட்டத்திலும் பேசக் கூடாது என்று உயர் நீதிமன்றம் எங்களுக்குத் தடைவிதித்துள்ளது. எனவே, எங்களை மன்னியுங்கள்.'' - இதுவே அவர்கள் தந்த வாக்குமூலம்.

அதிர்ச்சி அடைந்த முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி குறுக்கிட்டார்: ''எந்தச் சூழ்நிலையிலும், கருத்துரிமையைக் காப்பாற்றும் கடமை உயர் நீதிமன்றத்துக்கு இருக்கிறது. இது விசாரணை ஆணையம். உங்கள் கருத்தைத் தடை செய்ய முடியாது; பிரச்சனைகள் வந்தால், நான் உதவத் தயார்'' என்றார். மூத்த வழக்கறிஞர் சந்துரு, தேர்தல் தொடர்பான கூட்டங்களில் மட்டுமே, அதுவும் தேர்தல் முடியும் வரை மட்டுமே பேசுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதித்திருக்கிறது என்று விளக்கினார்.

தொடர்ந்து தமிழ் நாட்டில் 'பொடா' முறைகேடுகளை விளக்கினார், மூத்த

www.padippakam.com

வழக்குரைஞர் சந்துரு: ''ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு நோக்கத்தோடு பயன்படுத்தப்பட்டு வரும் 'பொடா', தமிழ் நாட்டில், தேசிய ஜனநாயக முன்னணியை உடைக்க வேண்டும் என்ற அரசியல் ஆதாயத்துக்காக ஜெயலலிதாவால் பயன்படுத்தப்பட்டது. தேசிய ஜனநாயக முன்னணியில் இடம் பெற்றிருந்த வைகோ மற்றும் அவரது கட்சியினர் ஏழு பேர் மீதுதான் முதலில் 'பொடா' பாய்ந்தது. 'பொடா'வை பாகுபாடற்று நியாயமாகப் பயன்படுத்துவதாகக் காட்டிக் கொள்ளுவதற்காகவே - பழ. நெடுமாறன் மற்றும் அவரது தோழர்கள் நான்கு பேரை ஜெயலலிதா 'பொடா'வில் கைது செய்தார்.

ஆனந்த் தியைரங்கில் நடந்தது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி தொடர்பான விமர்சனக் கூட்டம்தான். காவல் துறை அனுமதியுடன் அரங்கத்துக்குள் நடந்த கூட்டம் அது. இந்தக் கூட்டத்தில் சட்டத்துக்கு எதிரான எந்த நடவடிக்கையும் நிகழவில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதாவே பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார். (ஏப்ரல் 2002) ஆகஸ்ட் மாதத்தில் - இது பயங்கரவாத நடவடிக்கையாக மாற்றப்பட்டு, 'பொடா'வில் கைது செய்யப்பட்டார்கள்.

ஜெயலலிதா ஆட்சியை 'நக்கீரன்' பத்திரிகை எதிர்க்கிறது என்பதற்காக, 'நக்கீரன்' ஆசிரியர் கோபால் மீது 'பொடா' சட்டம் பாய்ந்தது. அவர் துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஆயுதம் வைத்திருப்பவரை - 'பொடா' சட்டத்தில் கைது செய்ய வேண்டுமானால், அவர் பிடிபட்ட பகுதி கலவரப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று 'பொடா' சட்டம் கூறுகிறது. எனவே, 'நக்கீரன்' கோபாலை 'பொடா' வில் கைது செய்வதற்காகவே, தமிழ் நாடு முழுவதையும் கலவரப் பகுதியாக ஜெயலலிதா அறிவித்தார். அறிவிப்பு வெளிவந்த அடுத்த நாளே, 'நக்கீரன்' கோபால் 'பொடா'வில் கைது செய்யப்பட்டார்.



சிறுவன் ஓம்பிரகாசுடன் அவனது தாயார்

ஒவ்வொரு நாளும் ராணுவமும் தீவிரவாதிகளும் யுத்தம் நடத்திவரும் ஜம்மு காஷ்மீரில்கூட - தமிழகத்தைப் போல் மாநிலம் முழுவதும் கலவரப் பகுதியாக அறிவிக்கப்படவில்லை.'' அப்போது நடுவராக இருந்த மோகினி கிரி, ''தமிழகம் முழுவதையும் கலவரப் பகுதியாக அறிவித்துள்ள ஜெயலலிதா, தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்கிறாரே, அது எப்படி?'' என்ற நியாயமான கேள்வியை எழுப்பினார்.

''பொடா'வில் கைது செய்யப்பட்ட அடுத்த குழுவினர் - மார்க்சிய லெனினிய இயக்கத்தைச் சார்ந்த 28 தோழர்கள். இதில் 5 பேர் பெண்கள். இந்தக் குழுவின் தலைவராக இருந்த ரவீந்திரனை போலிசார் ஏற்கனவே 'என்கவுன்டர்' என்ற பெயரில் சுட்டுக் கொன்று விட்டனர். ரவீந்திரனை - போலிசார் திட்டமிட்டுக் கொன்றதற்கு, நேரடி சாட்சியாக இருந்தவர் தோழர் சிவா. சிறையிலிருக்கும் சிவா, ரவீந்திரன் மரணம் பற்றி நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் மனு செய்தார். அந்த மனு உயர் நீதிமன்ற விசாரணையில் இருக்கும்போதே, போலிசாருடன் மோதியதாகக் கூறி சிவாவை போலிஸ் சுட்டுக் கொன்றது. சிவா கொலையை நியாயப்படுத்த வேண்டுமல்லவா? அதற்காக, மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் 28 தோழர்களை 'பொடா' வில் கைது செய்து, சதித்திட்டம் நடத்தியதாக வழக்கு தயாரித்தது காவல் துறை.

பகத்சிங், பிரபாகரன் என்ற இருவரும் சிறுவர்கள். இவர்களுடைய தந்தையர்கள் 'நக்சல்பாரி' இயக்கத்தில் இருப்பதாக சந்தேகித்து, மகன்களைக் கைது செய்தது போலிஸ். சட்டப்படி சிறுவர்கள் காப்பகத்தில் அவர்களை வைக்காமல், 'பொடா' வில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பிறகு, உயர் நீதிமன்றம் தலையிட்டு இந்த சிறுவர்களை 'பொடா'வில் கைது செய்ததைக் கண்டித்து விடுதலை செய்தது. ''இந்த இரு சிறுவர்களும் செய்த பயங்கரவாத நடவடிக்கை என்ன? பிரபாகரன், பகத்சிங் என்று பெயர் வைக்கப்பட்டதாலேயே பயங்கரவாதிகள் ஆகிவிட்டனர்'' என்று வழக்குரைஞர் கூறியபோது மீண்டும் சிரிப்பு அலை. சிறுவர்கள் பகத்சிங்கும், பிரபாகரனும், காவலில் தாக்கப்பட்டது பற்றியும், சகமாணவர்களால் ஒதுக்கி வைக்கப்படுவது பற்றியும் சாட்சியமளித்தது, உள்ளத்தைக் குலுக்கியது.



பிரபாகரன், பகத்சிங் என்று பெயர் வைக்கப் பட்டதாலேயே - இவர்கள் பயங்கரவாதிகளாம்?!

பழ. நெடுமாறனின் 'தமிழர் தேசிய இயக்கம்' தடை செய்யப்பட்டு, கட்சி அலுவலகம் சீல் வைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி 1908 இல் கொண்டு வந்த 'ரவுலட் சட்ட'த்தின் ஒரு பகுதிக்கு, 1999 இல் மீண்டும் உயிர் கொடுத்தார் ஜெயலலிதா. அந்தச் சட்டத்தின் கீழ் தான் இந்தத் தடை. கட்சியின் பொதுச் செயலாளர் பரந்தாமன், தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு இதைக் கண்டித்து இரண்டே வரிகளில் பேட்டி அளித்தார். அதற்காக அவர்மீது 'பொடா' வழக்கு. 'பொடா'வில் நிற்காது என்பதற்காக, 45 நாட்களுக்குப் பிறகு அவரது வீட்டில் ஜெலட்டின் குச்சிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக அறிவித்தார்கள்.''

வழக்குரைஞர் சந்துரு இவ்வழக்குகளைப் பட்டியலிட்டபோது, நடுவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். 'பொடா'வில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பிரமுகர் அழகு சுந்தரம், அவரது வழக்கறிஞர் தேவதாஸ் விசாரணையில் பங்கேற்று சாட்சியமளித்தார்கள். தமிழ் நாட்டின் கதை இப்படி என்றால், ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com

மாநிலத்திலிருந்தும் வெளிவந்த தகவல்கள், மேலும் அதிர்ச்சியூட்டுவதாகவே இருந்தன.

**உத்திரப் பிரதேசம் :** கடந்த ஆண்டு ஏப்ரலிலிருந்து - ஜூலை வரை, மாயாவதி ஆட்சியில் 25 தலித் மற்றும் பழங்குடியினர் 'பொடா' வில் கைது செய்யப்பட்டுள்ளனர். சோனேப் ஹத்ரா மாவட்டத்தில் இந்தக் கைதுகள் நடந்துள்ளன. சிவ்பதி என்ற பழங்குடிப் பெண், நடுவர்கள் முன் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். தானாசோப்பன் எனும் கிராமத்தை, ஒரு நிலப்பிரபு, தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். அவர் பெயர் ராஜ் நாராயண்கிரி. இவர் வைத்ததுதான் இங்கே சட்டம். சிவ்பதியின் கணவர், குஜராத்தில் வேலை செய்கிறார். தனது குடும்பத்தை குஜராத்துக்கு அழைத்துச் செல்வதற்காக, சொந்த கிராமத்துக்கு வந்தார். அவர் கிராமத்துக்கு வந்த நாளன்று, நிலப்பிரபுராஜ் நாராயண்கிரி வீட்டுக்கு யாரோ தீவைத்தார்கள். ஊருக்குள் புதிதாக ஊடுருவி இருக்கும் தீவிரவாதிகள் தான், தனது வீட்டுக்குத் தீ வைத்ததாக, நிலப்பிரபு போலிசில் புகார் செய்தார்.

உடனே, குடும்பத்தை அடுத்த நாள் குஜராத்துக்கு அழைத்துப் போவதற்காக, பல மாதங்களுக்குப் பிறகு கிராமத்துக்கு வந்தவரை போலிஸ் கைது செய்கிறது. வெடிமருந்துச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர் - பிணையில் விடு



அருந்ததிராய்

தலையானார். நிலப்பிரபுவின் குடும்பத்தார் அவரைச் சுட்டுக் கொன்று விட்டனர். அவருடைய மகனும் கொல்லப்படுகிறார். இரண்டாவது மகன் ஓம் பிரகாஷ், 5 ஆம் வகுப்பு படிக்கிறான். அந்தச் சிறுவன் மீது நிலப் பிரபுவைக் கொல்ல முயன்றதாக போலிசார் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். சிறுவன் ஓம்பிரகாசும், அவனது தாயாரும் நடுவர்கள் முன்பு தமது துயரங்களை விவரித்தார்கள். நடுவர்களும் பார்வையாளர்களும் கனத்த இதயத்துடன் கேட்டனர்.

பார்வையாளர் பகுதியிலிருந்து ஒருவர் சிறுவனைப் பார்த்து - ''பள்ளிக்குப் போய்க் கொண்டிருக்கிறாயா?'' எனக் கேட்க, அச்சிறுவன், ''நீதிமன்றத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றான். இது 'பொடா'வின் கீழ் தொடரப்பட்ட வழக்கு அல்ல. ஆனாலும், உத்திரப் பிரதேசத்தில் தலித், பழங்குடி மக்களின் வாழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்த சம்பவம். உத்திரப் பிரதேசத்தில் 'பொடா'வின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 44. இதில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் 44 பேர். இதில் 6 பேர் கொத்தடிமைகளாக இருந்தவர்கள்.

**ஆந்திரா :** ஆந்திராவில் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 36 பேர். அவர்களில் அரவிந்த் பாபு என்ற கவிஞரும்

**"ஒரு சம்பவத்துக்கு இந்துக்கள் எதிர்வினை ஆற்றினால், அவர்கள் தேசபக்தர்கள். முஸ்லிம்கள் எதிர்வினை ஆற்றினால் மட்டும் அவர்கள் பயங்கரவாதிகளா?"**

ஒருவர். பிரகாசம் மாவட்ட புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் அமைப்பாளர். மனித உரிமைக்காகத் தொடர்ந்து போராடிவரும் பாலகோபால், ஆந்திராவில் 'பொடா' சட்டத்தின் கொடூரங்களை நடுவர்கள் முன் பதிவு செய்தார்.

தடை செய்யப்பட்டுள்ள 'மக்கள் யுத்தம்' மற்றும் நக்சல்பாரிக் குழுவினருக்கு சீருடை தைத்துக் கொடுத்த டெய்லரும் 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளார். ஆந்திர முதல்வர் சந்திரபாபு (நாயுடு)வைக் கொலை செய்ய முயன்ற வழக்கில் - தேடப்பட்ட இரண்டு இளைஞர்கள் உயிருக்குப் பயந்து கர்நாடகத்துக்கு தப்பினர். அந்த 2 ஆந்திர இளைஞர்களையும் தேடி ஆந்திரப் போலிசார் கர்நாடகத்துக்கு விரைந்தனர். கர்நாடகக் காவல் நிலையத்தில் அடைக்கலம் புகுந்தால், ஆந்திரப் போலிசாரிடமிருந்து தப்பலாம் என்று அந்த இளைஞர்கள் - கர்நாடகக் காவல் துறையிடம் தஞ்சம் புகுந்தனர். கர்நாடகக் காவல் துறையோ அவர்களை ஆந்திரப் போலிசாரிடம் ஒப்படைத்தது. தப்பி ஓட முயன்றதாக இருவரும் கர்நாடகாவிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்து டாக்டர் பாலகோபால் கூறினார் :

''நாங்கள் தீவிரவாதத்தை நியாயப்படுத்தவில்லை. ஆனால், சட்ட ரீதியான நடவடிக்கைகள் எதுவும் இன்றி சுட்டுக் கொல்வது நியாயமா என்று கேட்கிறோம். ஆந்திராவில் - ஆயுதத்துடன் பிடிபட்ட அரசியல் குழுவைச் சார்ந்த ஒருவர் மீது கூட, முறையான வழக்கோ, விசாரணையோ இதுவரை நடத்தப்பட்டதே இல்லை. அனைவருமே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.''

**குஜராத் :** குஜராத்தில் 'பொடா' வில் கைது செய்யப்பட்டவர்கள் 287 பேர். இதில் 286 பேர் முஸ்லிம்கள்; எஞ்சிய ஒருவர் சீக்கியர். அம்மாநிலத்தில் 'பொடா'வில் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் இளைஞர்களின் தந்தைகளான ஹபீங்கரிம் (65), ரஷீத் மச்சீஸ்வாலா (65), 'பொடா' கைதியின் மனைவி யாஸ்மின் ஷேக் (34) ஆகியோர், தங்கள் குடும்பத்தார் மீது நடத்தப்பட்ட சித்திரவதைகளை விவரித்தனர். ஹலீமா பீபி என்ற 62 வயது விதவைத் தாயின் சோகம் - இதயத்தை உலுக்கியது. இவர் நெசவுத் தொழிலாளி; மகன் அகமது உசேன் (30) மவுலவி (மதப் பிரச்சாரகர்) சமூக சேவையில் ஆர்வம் மிக்கவர். இந்து - முஸ்லிம் சமூகங்களிடையே நெருக்கமாகப் பழகி வந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள்.

வீட்டுக்கு அருகே உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நோயாளிகளுக்குத் தேவையான உதவிகளை தொண்டுள்ளத்தோடு செய்து வந்தார். கடும் சித்திரவதைக்குள்ளாகி 'பொடா' வில் அடைக்கப்பட்டுள்ளார் உசேன். மதவேறுபாடு பார்க்காமல் எல்லோருக்கும் உதவிய எனது மகனை இப்படிப் 'பொடா'வில் சித்திரவதை செய்வது நியாயமா என்று கேட்டார் அந்த விதவைத் தாய். ''குஜராத்தில் 'பொடா' சட்டம் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகப் பயன்படுத்தப்படவில்லை; பயங்கர



படிப்பகம்

www.padippakam.com

வாதிகளைத் தயார் செய்வதற்கான சட்டமாகப் பயன்படுத்தப்படுகிறது'' என்றார்.

குஜராத்தில் மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடிவரும் வழக்கறிஞர் முகுல்சின்ஹா. கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து முஸ்லிம்கள் உயிரோடு எரிக்கப்பட்டதையும், படுகொலை செய்யப்பட்டதையும் அதை அரசே நியாயப்படுத்துவதையும் ஆதாரத்துடன் எடுத்துக் காட்டினார். கோத்ரா நிகழ்ச்சிக்காக - மக்கள் சீற்றமடைந்து நடத்திய எதிர்வினைகள்தான் இந்தக் கலவரங்கள் என்று, காவல் துறையின் குற்றப் பத்திரிகைகளில் எழுதப்பட்டிருந்ததை நடுவர்கள் முன் படித்துக் காட்டினார். அதே நேரத்தில், முஸ்லிம்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகையில் பழிவாங்கும் பயங்கர நடவடிக்கை என்று காவல் துறை குறிப்பிடுகிறது. ''ஒரு சம்பவத்துக்கு இந்துக்கள் எதிர் வினையாற்றினால், அவர்கள் தேசபக்தர்கள். ஆனால், முஸ்லிம்கள் எதிர்வினையாற்றினால் மட்டும் அவர்கள் பயங்கரவாதிகளா?'' இது, முகில்சின்ஹா எழுப்பிய நியாயமான கேள்வி.

*ஜார்கண்ட் :* 'பொடா' கைதுகளில் முன்னணியில் நிற்கும் மாநிலம் ஜார்கண்ட். பாதிக்கப்பட்டவர்களும், வழக்கறிஞர்களும், 'பொடா' முறைகேடுகளை எடுத்துச் சொன்னார்கள். இம்மாநிலத்தில் 3200 பேர் மீது 'பொடா' வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 654 பேர் மீது முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 'பொடா'வின் கீழ் சிறையிலிருப்பவர்கள் 207 பேர்.

பழங்குடி சமூகத்தைச் சார்ந்த பெண்கள் பலரும் உள்ளூர் நிலப்பிரபுக்கள் தூண்டுதலால் - 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ரோப்னி காரியா 17 வயது பெண். தீராமசோரி எனும் கிராமத்தைச் சார்ந்தவர். அந்தக் கிராமத்தில் மெட்ரிகுலேஷன் வரை படித்த பெண் - இவர் ஒருவர்தான். பெண்களின் உரிமைக்காக பழங்குடிப் பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார். அதுதான் இவர் செய்த ஒரே 'குற்றம்'. சிறுமிகளான மாயாந்தி ராஜ் குமாரி, ஷீலாதேவி, ஊர்மிளா குமாரி, சவிதா குமாரி என்ற 10 முதல் 15 வயதுக்குட்பட்ட பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த சிறுமிகளும் பயங்கரவாதிகளாக் கப்பட்டு 'பொடா'வில் வாடுகிறார்கள்.



நடுவர்களாக ராம் ஜெத்மலானி, டி.கே. பாசு மற்றும் கே.ஜி. கண்ணபிரான்

சுஷில் பிரகாஷ் பாகின் என்ற வழக்கறிஞரும், நகேந்திர சர்மா என்ற செய்தியாளரும் ('இந்துஸ்தான்' இந்தி நாளேடு) 'பொடா'வில் கைது செய்யப்பட்டவர்கள். தடை செய்யப்பட்ட மாவோ கம்யூனிஸ்ட் மய்யத்தின் செய்திகளை வெளியிட்டார் என்பதே இவர் செய்த குற்றம்.

ஹசரிபாக் மாவட்டத்தில் ஜானகி புய்யா என்ற 14 வயது சிறுவன் - 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது தந்தை, தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் மய்ய அமைப்போடு தொடர்புடையவர் என்று காவல் துறை சந்தேகித்தது. 3 ஆண்டுகளாக அவர் வீட்டுக்கு வரவில்லை. முதலில், அவரது மனைவியைக் கைது செய்து 3 மாதம் சிறையில் வைத்தனர். பிறகு, 14 வயது மகனை 'பொடா'வில் கைது செய்தனர். அப்போது, வீட்டுக்கு விருந்தினராக வந்த உறவினர் இருவரையும் சேர்த்து 'பொடா'வில் கைது செய்து விட்டது காவல் துறை. 81 வயது முதியவர் ஒருவரும் 'பொடா'வில் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணையில் வெளிவந்த ஏராளமான தகவல்களில் இது ஒரு பகுதி.

மகாராட்டிரா, பஞ்சாப், டெல்லி, மணிப்பூர், ஜம்மு காஷ்மீர், பீகார் மாநிலங்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் நடுவர்கள் முன் சாட்சியமளித்தனர். நடுவர்களில் ஒருவரான முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி இவ்வாறு கூறினார் : ''தடா'வை நான் கடுமையாக எதிர்த்தேன். ஆனால், 'பொடா'வைக் கொண்டுவர நான்தான் காரணமாக இருந்தேன். அந்தச் சட்டம் இவ்வளவு மோசமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதற்காக வேதனைப்படுகிறேன், மன்னிப்புக் கோருகிறேன்.''

**❝ தமிழகம் முழுவதையும் கலவரப் பகுதியாக அறிவித்துள்ள ஜெயலலிதா, தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்கிறாரே, அது எப்படி? ❞**

இரண்டு நாள் விசாரணையிலும் 'பொடா' வின் கொடூரங்களைக் கேட்ட நடுவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். விரைவில், இது குறித்து ஓர் ஆவணத்தைக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்தனர். அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளில் உள்ள மனித உரிமையாளர்கள், வழக்கறிஞர்கள் இந்த நிகழ்வுகளைப் பார்க்க 'வீடியோ கான்பிரன்ஸ்' மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடுவர்கள், இவர்களோடு டெல்லியில் இருந்தபடியே - கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அடிமைகளின் தேசத்தில் கூட நடக்க முடியாத அவலங்களை, அரங்கேற்றக் காரணமாகி விட்டது 'பொடா'. இந்தச் சட்டம் கொண்டுவரக் காரணமானவர்களையே, சட்டம் பலிகொண்டது. இதன் கோர முகங்கள் இப்போது மக்கள் மன்றத்தின் முன்பு வெளியே வரத் தொடங்கி விட்டன. டெல்லியில் நடந்த பொது விசாரணை, 'பொடா' ஒழிப்பு இயக்கத்துக்கான தொடக்கமாக இருக்க வேண்டும் என்பதே - பார்வையாளர்கள் மற்றும் நடுவர்களின் பிரகடனமாக இருந்தது. அதையே நாமும் வழிமொழிகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com





# பூர்வகுடிகளின் ஆளுமை

# ஜோதி அம்மாள்

■ ஏபி. வள்ளிநாயகம்

பவுத்தம் - புராதனப் பொதுவுரிமை, பொது வுடைமை ஒழுக்கங்களில் ஆதாரப்பட்டு நின்றது. மக்களிடையே ஒற்றுமை, அன்பு, சகோதரத்துவம் வீச்சு பெற அடிகோலியது. பார்ப்பனியச் சமூக அமைப்பின் புறவுல கினையும், அதன் விதிகளையும் வினைகளை யும் விளைவுகளையும் - பவுத்தர்களாயி ருந்து எதிர்த்த காரணத்தினால் - பூர்வகுடிகள் தீண்டத்தகாதவர்கள் ஆக்கப்பட்டனர். வர லாற்றில், பார்ப்பனியச் சமூக அமைப்பை எதிர்த்து பூர்வகுடிகளின் புரட்சி வலு வடைந்த பொழுதெல்லாம் - சாதியத்தைத் தக்க வைப்பதற்கான பார்ப்பனர்களின், பார்ப்பனியர்களின் தேசிய இயக்கம் கட்ட மைக்கப்படுவது வழமையானது.

14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முஸ்லிம் படையெடுப்பாளர்களால் ஏற்பட்ட சிறு தேக்கத்தைத் தவிர, 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை, பார்ப்பனர்களின் அனைத்துத் தேவைகளும் - அரசுகள் மக்களிடமிருந்து பெற்ற வரிப் பணத்தால் நிறைவு செய்யப் பட்டன. ஏறத்தாழ 18 நூற்றாண்டுக்காலம் பார்ப்பனர்கள், இந்நாட்டை ஆண்ட அரசு களின் சலுகையளிக்கப்பட்ட ஆதிக்கச் சாதி யினராக வாழ்ந்தனர் என்பது, யாராலும் மறுக்க - மறைக்க முடியாத உண்மையாகும்.

18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலி ருந்து 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக் காலம், பார்ப்பனர்கள் அரசின் வலுவான ஆதரவை இழந்திருந்தனர். ஏனெனில், இந்தக் கால கட்டமே கிழக்கிந்திய கம்பெனியர் தமிழக அளவிலும், இந்திய அளவிலும் தங்கள் அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்த முனைந்திருந்த காலமாகும். இந்தக் கால கட்டத்தில், பார்ப்பனர்கள் ஆங்காங்கே இருந்த குறு நில மன்னர்களிடத்திலும் ஜமீன் தார்களிடத்திலும் தங்களை ஆலோசகர்களா கவும் திவான்களாகவும் ஆக்கிக் கொண்டனர்.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே, பார்ப்பனர் கைவசமிருந்த பெருங்கோயில் களுக்கும் கோயில் கலாச்சாரத்திற்கும் - வரலாற்றில் முதல் முறையாக அரசின் ஆதரவு இல்லாமல் போயிற்று. பெரிய நிலக்கிழார்களும், ஜமீன்தார்களும் செல்வாக்கு இழந்து போய்விட்டனர். மாவட்ட ஆட்சியர் என்ற பெயரில் மாவட்டத் தலைநகரங்களிலும், ஆளுநர் என்ற பெயரில் சென்னை நகரத்திலும், 'வைசிராய்' என்ற பெயரில் டெல்லி யிலும் ஆக, புதிய அதிகார மய்யங்கள் தோன்றிவிட்டன. அதிகார மய்யங் களை நெருங்குவதற்கு, ஆங்கிலக் கல்வி வழியாக இருந்தது.

இதில், பூர்வகுடிகள் முந்திவிடக் கூடாது என்பதற்காகவே, வந்தேறி களான பார்ப்பனர்கள் - கிராமத்து நிலங்களையும் கோயில்களையும் சமஸ் கிருதக் கல்வியையும் உச்சிக்குடுமியையும் விட்டு விட்டு, ஆங்கிலக் கல்விக்கும் அதிகாரப் பதவி வேட்டைக்கும் வெறிகொண்டு - பூர்வ குடி களின் மண்ணான சென்னையை நோக்கி குடி பெயர்ந்தனர்.

பார்ப்பனியத்தின் வெற்றிக்குப் பிறகு, காலாதிகாலமாய் ஒடுக்கப்பட்ட பூர்வகுடிகளின் தனித்துவமான அடையாளத்தைப் பதிக்க, உரிமைகளை வென்றெடுக்க, விடுதலையை நோக்கி நகர - ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, ஆங்கிலேயர் ஆட்சியில்தான் முடிந்தது. ஆரிய நாகரீகத்துடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாத பூர்வகுடிகள் - தமது சொந்தப் பண்பாட்டைத் திரட்டி, சொந்த அமைப்பை நிறுவி முன்னேற முடிந்தது.

இதில், பூர்வகுடிகளின் வாழ்க்கையில் தரம் உயர்த்துகிற உன்னத முயற்சி களுக்குத் தலைமையேற்று வெற்றித் தடம் பதித்தவர்களில் - நிகரில்லா தலை வராக, எல்லா தலைவர்களிலும் தனித்துவம் மிக்கவராக, முன்னுதாரண முதல்வராக மின்னி ஜொலித்தவர், பி.வி. சுப்பிரமணியம் பிள்ளை. (பார்க்க:



படிப்பகம்

www.padippakam.com

'தலித் முரசு' சூன் 2003). ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்காலம் சமூக மனிதராகவே வாழ்ந்து காட்டிய மனிதர் பி.வி. சுப்பிரமணியம் பிள்ளை. அவரது குடும்பப் பாரம்பரியத்தின் தொடர்ச்சிதான் - தமிழ் நாட்டு அரசியலில் ஆளுமைப் பாத்திரம் வகித்த ஜோதி அம்மாள் அவர்கள். ஜோதி அம்மாளின் முன்னோர்கள் பி.வி.எஸ். அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர் ஆவர்.

தலைவர் பி.வி.எஸ். அவர்களுக்குப் பிறகு பொது வாழ்வில் தடம் பதித்த ஜோதி அம்மாள் 27.10.1917 அன்று, பர்மாவிலுள்ள மேம்யோ என்ற ஊரில் குப்புராம் தம்பதிகளுக்குப் பிறந்தார். பர்மாவின் தலைநகரான ரங்கூனில் சீனியர் கேம்பிரிட்ஜ் வரை கல்வி பயின்றார். 1934 இல் ஜோதி அம்மாளின் குடும்பத்தினர் தாயகம் திரும்பினர். சென்னையில் தலைவர் பி.வி.எஸ். குடும்பத்தினரோடு வாழ்ந்தனர்.

ஜோதி அம்மாள் அவர்கள், 1935 இல் பி.வி.எஸ். அவர்களின் மகன் வெங்கடாசலத்தை வாழ்க்கைத் துணைவராக்கிக் கொண்டார். பி.வி.எஸ். குடும்பம் உலகப் புகழ்பெற்ற குடும்பமாதலால், மணமக்களை வாழ்த்தி லண்டன் அரச அரண்மனையிலிருந்து வாழ்த்து மடல் வந்தது. இந்திய வைசிராயும், சென்னை மாகாண ஆளுநர் ஜான் பிரான்சிஸ் ஆஸ்லியும் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர். சென்னை மாகாண முதலமைச்சர் பொப்பிலிராசா, தன் சக அமைச்சர்கள் பி.டி. ராஜன், எஸ். குமாரசாமி ஆகியோரோடு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார்.

பர்மாவில் இருந்து தாய் மண்ணுக்குத் திரும்பியதும் சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்ற உந்து உணர்ச்சியைக் கொண்டிருந்த ஜோதி அம்மாள், 1938 இல் சமூக வாழ்வுக்கு அறிமுகமானார். தெளிவான பேச்சும், உறுதியான பொது நலப் பண்பும் கொண்ட ஜோதி அம்மாளுக்கு பொது மேடை - தனது அறிவார்ந்த ஆக்கப்பூர்வ நேர்மையை வெளியிடக் கிடைத்த வாய்ப்பாக அமைந்தது. இரண்டாவது உலகப் போரின்போது, சென்னை மாகாண ஆளுநராகயிருந்த சர் ஆர்தர் ஆஸ்வால்டு ஜேம்ஸ் கோப், ஜோதி அம்மாள் அவர்களை 1940 இல் கவுரவ நீதிபதியாக நியமித்தார்.

1950 இல் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த பி.எஸ். குமாரசாமிராசா, ஜோதி அம்மாள் அவர்களை மாநில சமூக நல வாரியத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்கச் செய்தார். ஜோதி அம்மாள், அரசின் எல்லா தளங்களிலும் சமூகத்தின் இணை அமைப்பாக பெண்களை உள்ளடக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆண்களுக்கு இருப்பதுபோல, பெண்களுக்கென நிலம், தொழில் அமைத்துத் தரப்பட வேண்டும் என்றார். பெண்கள் நோக்கில் மிக மேலோட்டமான திட்டங்களைக் கொண்டிருந்த சமூக நல வாரியத்தை, பெண்கள் சில அடிப்படையான மாற்றங்கள் பெறும் வகையில் திருத்தி அமைத்தார். அரசு அமைப்பாக்கத்தில் பெண்களின் உள்ளடக்கத்தைக் கொண்டு வந்தார்.

இதே ஆண்டில், மாகாணக் கல்வி அமைச்சர் கே. மாதவமேனன் பரிந்துரையின் பேரில், சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினராக ஆக்கப்பட்டார். தம் பதவிக் காலத்தில் பெண்களின் - தலித் மக்களின் கல்வி வளர்ச்சியை கவனத்தில் கொண்டார். பெண்களின் - தலித் மக்களின் சேர்க்கை விகிதம், ஒவ்வொரு கல்வியாண்டிலும் கூடுதல் பெற ஆவன செய்தார். மொத்த இடங்களையும் ஆண்களைக் கொண்டே நிரப்பிவிடாமல் பெண்களுக்கு உரிய இடங்களை உருவாக்கினார். ஆண் - பெண் இருபாலரும் சேர்ந்து பயில வலியுறுத்தினார்.

1952 இல் ஜோதி அம்மாளின் துணைவர் பி.வி.எஸ். வெங்கடாசலம், சென்னையின் முதல் குடிமகனாக - 'செரீப்' ஆக முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியால் நியமிக்கப்பட்டார். இப்பதவியை, இவருக்கு முன்னும் பின்னும் பூர்வகுடியிலிருந்து எவரும் வகிக்கவில்லை என்பது, குறிப்பிடத்தக்கதாகும். ஜோதி அம்மாள் அவர்களுக்கு ஆளுமை என்பது, அவருடைய மனதிற்கான முகவரியாக விளங்கியது. அவருடைய ஆளுமை வளர்ச்சி, தன்னிலையிலிருந்து தொடங்கி குழுமத்தில் முடிவடைந்தது. அவருடைய ஆளுமையை அவருடன் பழகிய அனுபவத்தைக் கொண்டு முடிவுக்கு வந்த முதலமைச்சர், தமது அமைச்சரவையை அலங்கரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தம்மைச் சுற்றியுள்ள எல்லாமுமே, தவிர்க்க இயலாதவாறு அரசியலாக சூழ்ந்து நிற்கிறது என்பதை உணர்ந்த ஜோதி அம்மாளின் அரசியல் பிரவேசம், அவர் அமைச்சர் பதவியை ஏற்ற பிறகே நிகழ்ந்தது. ஜோதி அம்மாள் காங்கிரசில் இணையவில்லை. ஆனால், காங்கிரஸ் அவரை இணைத்துக் கொண்டது. 9.10.53 அன்று, ஜோதி அம்மாள் அவர்கள் முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமைந்த ராஜகோபாலாச்சாரி தலைமையிலான அமைச்சரவையில் இடம் பெற்றார். மிகுந்த மனித நேயமிக்க ஜோதி அம்மாள், தம் விருப்பம் போல் பெண்கள் மறுவாழ்வு, அனாதைகள் - இரவலர்கள் ஒழிப்புத் துறையைப் பெற்றுக் கொண்டார். சுதந்திர இந்தியாவின் முதல் பெண் அமைச்சரும் இவரே.



காமராசர் அமைச்சரவையில் ஜோதி அம்மாள் - 15.3.1962



படிப்பகம்

www.padippakam.com



பி.வி.சுப்பிரமணியம்

1961 இல் ஜோதி அம்மாளின் துணைவர் கார் விபத்தில் காலமானார். தமது பொது வாழ்வை வரவேற்று மகிழ்ந்து துணை நின்ற துணைவரின் இழப்பு, ஈடுசெய்ய முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திய போதிலும், தளராது பொது வாழ்க்கையோடு தம் தொழிலகத்தின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். பூர்வகுடிகளின் முதல் பெண் தொழிலதிபர் இவரே.

15.3.62 அன்று, காமராசர் அமைச்சரவையிலும், 2.10.63 முதல் அமைந்த பக்தவச்சலம் அமைச்சரவையிலும் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற ஜோதி அம்மாள், அமைச்சர் பதவியைத் தொடர்ந்து வகிக்கும் வகையில், 21.4.54 முதல் 21.4.60 வரை சட்டமேலவை உறுப்பினராக நியமனம் பெற்றார். 1937 ஆம் ஆண்டு தொடங்கிய சட்ட மேலவையில் பூர்வகுடியிலிருந்து முதல் பிரதிநிதியான பெண்மணி ஜோதி அம்மாள் ஒருவரே. 1962 இல் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இவர் நல்வாழ்வுத் துறை அமைச்சராக வீற்றிருந்த காலத்தில்தான், மருத்துவத் துறை நவீனமயமாக்கப்பட்டது. பெரியம்மை, மலேரியா ஒழிப்பு தீவிரமாக்கப்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைக்கு வந்தது. அலோபதி மருத்துவத் துறைகளுக்கும் உரிய இடமளிக்கப்பட்டது. மகப்பேறு பிரிவு ஏற்படுத்தப்பட்டது; பெண்களுக்கான பராமரிப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறும் வகையில் கிராமங்களின் மய்யத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன.

நோய் வராமல் தடுக்கும் அறிவியலாக மருத்துவம் மாற்றம் பெற வேண்டும்; அதனுடைய மருத்துவக் கடமைகளை மக்கள் செய்து கொள்ளுமாறு அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும் என்பதே - ஜோதி அம்மாளின் உயரிய தனிப்பட்ட லட்சியமாகும். ஜோதி அம்மாள் புரிந்த விளம்பரமில்லாத சாதனைகள் பல. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை பி.அய்.எம். கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி ஆகியவை இவரது முயற்சியால் தொடங்கப்பட்டதாகும். இவர் காலத்தில்தான் எல்லா கிராமங்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலம் பெண்கள் சங்கங்கள் நிறுவப்பட்டன. 'பெண்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்'கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பெண்கள் காவல் துறையில் இடம் பெற வேண்டும் என்பது, கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஜோதி அம்மாளின் சமூக வாழ்க்கையைப் பெருமைப்படுத்தும் வகையில், 1974 இல் அவருக்கு பத்மசிறீ விருது அளிக்கப்பட்டது. 1971 - 76 இல் ஜோதி அம்மாள், சிறீரங்கம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, எதிர்க் கட்சித் துணைத் தலைவராகவும் இருந்து திறம்படப் பணியாற்றினார். 1978 இல் தாம் வகித்து வந்த பதவிகளுக்கெல்லாம் உச்சமாக, கேரளாவிற்கு ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கேரளாவின் ஆளுநரான ஜோதி அம்மாள், 1978 - அக்டோபர் 19 அன்று சென்னை தியாகராயர் நகரில் நிகழ்ந்த, காமராசர் நினைவு இல்லத் திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்தார். 9.8.80 அன்று, தலைவர் பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் படங்களை தமிழ் நாடு சட்ட மன்றத்தில் திறந்து வைத்தார். கேரளாவின் யுகபுருசர், பூர்வகுடிகளின் மாமனிதர் அய்யன் காளியின் சிலை திருவனந்தபுரத்தில் எழும்ப அடிக்கல் நாட்டினார். பிரச்சனைக்குரிய கேரள மாநிலத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என அனைத்து மக்கள் தரப்பிலும் நன்மதிப்பைப் பெற்ற ஆளுநராக சிறந்து விளங்கினார்.

மனித குலத்துக்கு தன் குடும்ப பாரம்பரியப்படி நன்மையை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அதை நோக்கி தன் வாழ்வையும் அர்ப்பணிப்பையும் 54 ஆண்டுகள் வழங்கிய ஜோதி அம்மாள், தமது 75 ஆவது வயதில் 28.12.1992 அன்று காலமானார். வற்றாத பொருளுடைமையும் முற்றுப் பெறாத புகழும் குவிந்த ஒரு குடும்ப வழியில் வந்தாலும் ஜோதி அம்மாள் - அரசியல், சமூக உறவுகளோடு சுற்றத்தோடு தன்ன கங்காரம் இல்லாமல் தம்காலத்தைச் செலவிட்டார்.

தன் மாமனாரான தலைவர் பி.வி. சுப்பிரமணியம் பிள்ளையின் புதிய சமூகப் படைப்பு தாகத்தையும், கனத்தையும் உள்வாங்கிக் கொண்ட ஜோதி அம்மாளின் பொது வாழ்க்கைக்கான காலமும் தளமும், தேசியத்தில் அய்க்கியப்பட வைத்தாலும் - ஜோதி அம்மாள் பூர்வகுடிகளின் ஆளுமையாகவே இருந்து காட்டினார். அவர் அரசியல் காலம் முழுவதிலும் உரிய அங்கீகாரத்திற்கும் மதிப்பிற்கும் ஆளாக்கப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

எந்தப் பதவியையும் அவர் எதிர்பார்த்து நின்றதில்லை. ஆனால், அவர் பெற்ற பதவிகள் அனைத்தும் அவரைத் தேடியே வந்து நின்றன. இந்த ஆளுமையே பூர்வகுடிகளின் அரசியல் செயலாக்கத்திற்கு அவர் சேர்த்து வைத்த மாபெரும் சொத்தாகும். இச்சொத்து இல்லாமல் பூர்வகுடிகள் அரசியலில் உரிய அங்கீகாரமும், மதிப்பும் ஒருபோதும் பெற முடியாது. ●

**“பூர்வகுடிகளின் அரசியல் செயலாக்கத்திற்கு, ஆளுமையுடன் கூடிய செயல்பாடே - அவர் சேர்த்து வைத்த மாபெரும் சொத்தாகும். இச்சொத்து இல்லாமல் பூர்வகுடிகள் அரசியலில் உரிய அங்கீகாரமும், மதிப்பும் ஒருபோதும் பெற முடியாது.”**

திருத்தம் : சென்ற இதழில், 'பூர்வ குடிகளின் புரவலர் வி.ஜி. வாசுதேவபிள்ளை' கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படத்தில் (பக்கம் 18), அவருக்குப் பின்புறம் நிற்பவர் என். சிவராஜ். எம்.சி.ராஜா அல்ல.


படிப்பகம்

www.padippakam.com



## இந்து இந்தியா

விலை ரூ. 115

''அதிகாரப் பரவலும், சோசலிசமும் மக்களின் பல்வேறு தேசிய, மொழி, சமய, பண்பாட்டு, பிரதேச அடையாளங்களுக்கான பாதுகாப்பும் தன்னுரிமையும் சேர்ந்து நிலவுகிற - ஒரு புது வகையான இந்திய தேசத்தையும் 'கற்பிதம் செய்து' பார்ப்பது இன்றியமையாததாகிறது. இத்தகையதொரு இந்திய தேசமே - ஏகாதிபத்தியத்தையும் உலகப் பிற்போக்குச் சக்திகளையும் எதிர்த்து நிற்கவல்லது; இன்றைய 'ஒன்றுபட்ட', 'ஒருமைப்பாடு' உடைய இந்து - இந்தி - இந்தியா அத்தகையதன்று. இது, உலக மூலதனத்தையும் பார்ப்பன - பனியா நலன்களையும் பாதுகாக்கவென எழுப்பப்பட்ட ஒரு கோட்டை. இதை மேலும் வலுப்படுத்த முனைவது தான் - இந்துத்துவ பாசிசம். ''

■ ஆசிரியர் : **எஸ்.வி. ராஜதுரை** ■ வெளியீடு : அடையாளம் 1204-05, இரண்டாவது தளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310 ■ பக்கங்கள் : 272




●●




## இந்துயிசத்தின் தத்துவம்

விலை ரூ.50

''கோடிக்கணக்கான மக்கள், வெட்கக் கேடான வாழ்க்கையை மேற்கொள்ளவும், குற்ற நடவடிக்கைக்குத் தள்ளப்படவும் காரணமாயிருக்கும்போது, எப்படி 'இந்துயிசம்' சும்மா நின்றுகொண்டிருந்தது? தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் சக்தி இதற்கில்லை. தொண்டாற்றுவது என்பதற்கான தூண்டுதல் இந்துயிசத்தில் இல்லை. ஏனெனில், இது அதன் இயல்பிலேயே மனிதத்தன்மையில்லாத ஒன்றாகவும், ஒழுக்கநெறி அற்றதாகவும் இருக்கிறது. இதனை மதம் என்று அழைப்பதே தவறான சொல் வழக்காகும். ஒரு மதம் எதற்காக இருக்கிறதோ, அதற்கு நேர் எதிரான தத்துவம்தான் - இந்துயிசம்.''

■ ஆசிரியர் : **டாக்டர் அம்பேத்கர்** ■ வெளியீடு : புத்தா வெளியீட்டகம், 3, மாரியம்மன் கோயில் வீதி, உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் - 641 015 ■ பக்கங்கள் : 126

●●



## தலித் குல சாமிகள்

விலை ரூ.75

''சாதி ஆதிக்கத்தை எதிர்த்து வரலாறு நெடுகிலும் போராடி வரும் தலித்துகளைப் போலவே, அவர்கள் வழிபடும் சாமிகளும் போர்க்குணமிக்கவை. தலித்துகளின் குலசாமி வழிபாட்டு முறை, மண்ணையும் மக்களையும் காக்கப் போராடி மடிந்த - மாவீரர்களின் நினைவைச் சுமந்து நிற்கின்றன. தலித் மக்களை இந்துக்கள் என்று அடிமைக் குகையில் நிறுத்தி வைக்க, இந்து மதவெறி சக்திகள் தீவிரமாக முயலும் இவ்வேளையில், தலித் வழிபாட்டு முறைகளின் உள்ளீடாக இருக்கும் இந்து மத எதிர்ப்புக் கூறுகள், காப்பாற்றப்பட வேண்டியவை.''

■ ஆசிரியர் : **கே.எஸ். முத்து** ■ வெளியீடு : தலித் ஆதார மய்யம், தமிழ் நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை - 625 016 ■ பக்கங்கள் : 192

●●

## உலகமயமாக்கல் - நிழலும் நிஜமும்

விலை ரூ.50

''உலகமயமாக்கல் - ஒரு பொருளாதாரக் கொள்கை அல்ல. அது ஓர் அரசியல் கருத்தியல்; சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிறகு, இருதுருவ அரசியல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, முழுவதும் முதலாளித்துவத் தன்மை கொண்ட ஓர் அரசியல் செயல்படுவதன் வெளிப்பாடே - உலகமயமாக்கல் என்று நிறுவுகிறார் ஆசிரியர். தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் ஆகிய முதலாளியச் செயல்பாடுகளிலிருந்து உலகமயமாக்கலைப் பிரிக்க முடியாது என்று எடுத்துக் காட்டுகிறார். உலகமயமாக்கல் தலித்துகளுக்கு உதவும் என்ற வாதம் தவறு என நூலாசிரியர் விளக்குகிறார்.''

■ ஆசிரியர் : **ஜோ சேவியர்** ■ வெளியீடு : வைகறைப் பதிப்பகம், பெஸ்கி இல்லம், கரூர் சாலை திண்டுக்கல் - 624 001 ■ பக்கங்கள் : 134




●●



## அனார்யா - நாதியற்றவன்

சுயசரிதை

விலை ரூ.65

''என் அம்மா தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தவராக இருக்கும் போது, நான் மட்டும் எப்படி உயர்சாதிக்காரனாக இருக்க முடியும்? நான் தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தவன் என்றால், உயர் சாதிக்காரரான என் அப்பாவின் நிலை என்ன? நான் 'ஜராசந்தனை'ப் போன்றவன். எனது ஒரு பாதி ஊரோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. மறுபாதியோ சேரியோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. நான் யார்? என்னுடைய தொப்புள் கொடி என்னை யாருடன் பிணைக்கிறது?''

■ ஆசிரியர் : **சரண்குமார் லிம்பாலே** ■ வெளியீடு: விடியல் பதிப்பகம், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் (வடக்கு) கோயம்புத்தூர் - 641 015 ■ பக்கங்கள் : 168

## இருள் தீ - சிறுகதைகள்

விலை ரூ.60

''தொலைந்து போன வாழ்க்கையை மீண்டும் பெறவும் காணாமல் போன மனிதத் தன்மையை மீட்கவும், கிடைக்காமல் போன உரிமைகளைத் தட்டிக் கேட்பதுமான மனிதர்களும், அவர்கள் சார்ந்த வாழ்வும் கதைகளில் பரவலாக நிறைந்து கிடக்கிறது. இதன் காரண கர்த்தாக்கள் யார் என்பது, ஒளிவு மறைவின்றி வெட்டவெளிச்சமாய் அம்பலப்பட்டு நிற்பதையும் கதைகளினூடே காணலாம். இது யாருக்கான வாழ்வு, இலக்கியம், கலை வடிவங்கள் என்பதை வாழ்வின் நுண்ணியப் பதிவுகளாய் இச்சிறுகதைகள் விளக்குகின்றன.''




■ ஆசிரியர் : **விழி.பா. இதயவேந்தன்**
■ வெளியீடு : மருதா, 226 (188) பாரதி சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14 ■ பக்கங்கள் : 144



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழில் வெளிவந்த மூத்த வழக்கறிஞர் **கே. சந்துரு** அவர்களின் பேட்டி, இந்த இதழிலும் தொடர்கிறது

# “மனித உரிமைகளில் முரண்படும் கட்சிகள்”



**தங்களுடைய கல்லூரி மாணவர் பருவத் தில் அரசியல் நிலை எவ்வாறு இருந்தது?**

1971 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத் தின் அரசியலில் புதிய காட்சிகள் அரங் கேறின. எந்த காங்கிரஸ் 1967 தேர்தலில் விரட்டப்பட்டதோ, அதே காங்கிரசுடன் தி.மு.க. 1971இல் கூட்டணி வைத்துக் கொண்டது. நாடாளுமன்றத்தின் முழு ஆயுள் முடிவதற்கு முன்பே கலைக்கப் பட்டு தேர்தல் திணிக்கப்பட்டது. இங்கு சட்டமன்றத் தேர்தலும் அதே நேரத்தில் நடத்தப்பட்டது. ''காகிதப்பூ மணக்காது, காங்கிரஸ் சோசலிசம் இனிக்காது'' என்று மூச்சுக்கு மூச்சு பேசிய தி.மு.க., ''நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக'' என்று தங்களது கோஷத்தை மாற்றியது. 33 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது (2004இல்) ''இந்திராவின் மருமகளே வருக! இணையில்லாத ஆட்சி தருக!'' என்று புதிய கீதம் பாட ஆரம்பித்துள்ளார் கள். தி.மு.க.வாவது 35 ஆண்டுகளில் காங் கிரசுடன் மாற்றி மாற்றி கூட்டணி வைத்து அரசியல் செய்தது.

ஆனால், 1971இல் இண்டிகேடும் (இ. காங்கிரசு) சிண்டிகேடும் (ஸ்தாபன காங் கிரசு) ஒரே கேடுதான். ஆகவே, தனியாகப் போட்டியிடுவோம் என்று ஆரம்பித்த சி.பி.அய்.எம்., தற்போது அதே காங்கிரசு டன் ஒரே கூட்டணியில் போட்டியிடுவது தான் வேதனையிலும் வேதனை. 1971இல் சி.பி.அய்.எம். தனித்துப் போட்டியிட முடிவு எடுத்தவுடன், எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. நாற்பதுக்கும் மேற்பட்ட சட்ட மன்றத் தொகுதிகளிலும், ஆறு நாடாளு மன்றத் தொகுதிகளிலும் வெறித்தனமாக வேலை செய்தோம். கடைசியில் ஓரிரு தொகுதிகளைத் தவிர, எல்லா இடங்களி லும் 'டெபாசிட்' பறிபோனது. தேர்தலின் பின்னே உள்ள சூட்சுமங்களைப் புரிந்து கொண்டேன்.

**அக்காலக் கட்டத்தில், மனித உரிமை களுக்கு எதிரான சட்டங்கள் பற்றியும் குறிப் பாக 'மிசா' சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தில் - அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை யும் சொல்லுங்கள்.**

சட்டமன்றத்தில் மிகப் பெரும்பான்மை பெற்ற கலைஞர் அரசு, தனது இரும்புக் கரத்தைக் காட்ட ஆரம்பித்தது. தமிழ் நாட்டில் பல இடங்களில் தொழிலாளர் போராட்டங்கள் வெடித்தன. தொழிற் சங்கத் தலைவர்கள் வி.பி. சிந்தன், கே.எம். அரிபட் மற்றும் ஆர். குசேலர் 'மிசா' சட்டத் தின் கீழ் சிறையில் தள்ளப்பட்டனர். இந்த 'மிசா' சட்டம் 1971இல் நிறைவேற்றப் பட்டது. அதற்கு முன்பு இருந்த P.D. Act (தடுப்புக் காவல் சட்டம்) இந்திரா பிரிவு காங்கிரசுக்கு, 1969இல் நாடாளுமன்றத் தின் பெரும்பான்மை இல்லாததால் தானா கவே உயிரை விட்டது. ஆனால், 1971இல் பெரும்பான்மை பெற்றவுடன் காங்கிரசு செய்த முதல் வேலை 'மிசா' சட்டத்தை இயற்றியதுதான். அதற்கு துணைபோன தி.மு.க., தாங்கள் அந்தச் சட்டத்தை தமிழ் நாட்டில் பயன்படுத்த மாட்டோம் என்று உத்திரவாதமளித்தது. அந்த வாக்குறுதி எழுதிய காகிதத்தில் மை உலரும் முன்பே, மிகக் கேவலமான முறையில் - தமிழகத் தில் அரசியல் தலைவர்கள் 'மிசா'வில் தள்ளப்பட்டனர்.

அதே சட்டத்தின் கீழ் பல தி.மு.க. தலைவர்கள் 1976இல் உள்ளே வைக்கப் பட்டதும், அக்கூட்டத்தில் இப்பொழுதும் தங்களது பெயர்களுக்கு முன்னால் 'மிசா' என்ற அடைமொழியுடன் திரிவதும் வர லாற்றைக் கொச்சைப்படுத்தும் செயலா கும். 'மிசா' சட்டம் காலாவதியாகி, NSA (தேசிய பாதுகாப்புச் சட்டமும் - 1981), அதன் பின்னர் 'தடா'வும் (TADA 1985) வந்தது. அது கடுமையான எதிர்ப்பிற்குப் பிறகு 1994இல் கைவிடப்பட்டது. அதை அன்று வாஜ்பாயி தலைமையில் கடுமை யாக எதிர்த்த பா.ஜ.க., 2002இல் 'பொடா' (பயங்கரவாத தடுப்புச் சட்டம்) கொண்டு வந்ததையும், எந்த காங்கிரசு 'தடா' சட் டத்தை மிகவும் ஆதரித்து வாதாடியதோ, அதே காங்கிரஸ் சோனியா தலைமையில் 'பொடா'வை எதிர்த்துக் கூக்குரலிடுவதை யும் நாம் பார்த்தோம்.

அப்பொழுது நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் தி.மு.க., ம.தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகியவை 'பொடா'வை ஆதரித்து வாக்களித்தன. அந்தச் சட்டத்தை ஆதரித் தவர்களே இப்பொழுது 'பொடா'வில் கைது செய்யப்பட்டு விசாரணை நடை பெறுவதும், அந்தச் சட்டத்தை முழுவதுமாக வாபஸ் பெற வேண்டும் என்று இப்பொழுது தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது தற்போதைய வரலாறு. மனித உரிமைப் பிரச்சினைகளில் ஒரு நிலையான பாட்டை பெரிய அரசியல் கட்சிகள் எடுக்காததும், இருக்குமிடத்திற்கேற்ப தங்களது சந்தர்ப் பவாத அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதும் வாடிக்கையாகி விட்டது.

**கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் வழங்கிய போது, உதயகுமார் என்ற மாணவர் படுகொலை**

**செய்யப்பட்டபோது, அப்போதைய மாணவர் எழுச்சி எப்படி இருந்தது? நீங்கள் அதில் பங்கேற்றீர்களா?**

அரசியல் வி.அய்.பி.களுக்கு கடந்த 75 ஆண்டுகளாக கவுரவ டாக்டர் பட்டத்தை வாரி வழங்கும் அண்ணாமலை பல்கலைக் கழகம், அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் டாக்டர் பட்டத்தை வழங்க முற்பட்டது (1972). செட்டி நாட்டரசர்களின் விருந்தோம்பலில் அதுவும் ஒரு விசேஷ அயிட்டம். பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிற்கு வர இருந்த தமிழக முதல்வருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய, 'இந்திய மாணவர் சங்கம்' (SFI) முடிவெடுத்தது. அதைப் போலவே, பழைய காங்கிரசு மாணவர் அமைப்பு, கறுப்புக் கொடி காட்ட விழைந்தது. 'படித்தோர்க்கு வேலையில்லை. பட்டமளிப்பு ஒரு கேடா?' என்று எஸ்.எப்.அய். துண்டு பிரசுரம் விநியோகித்தது. இதையெல்லாம் ஒடுக்க 1000 பேர் கொண்ட தனி ஆயுதக் காவல்படை (SAP) திருச்சியிலிருந்து சிதம்பரம் வந்திறங்கியது. பட்டமளிப்பு விழாவிற்கு சீனியர் மாணவர்களையும், பெற்றோர்களையும் அதுவரை அனுமதித்து வந்த பல்கலைக் கழக நிர்வாகிகள், காவல் துறையின் உத்திரவுகளுக்கிணங்க அதற்குத் தடை போட்டனர்.

அப்பொழுது தமிழக காவல் துறையில் மிகவும் சிறிய பிரிவு 'கியூ' பிராஞ்ச் பிரிவு. அது ஒரு வகையான அரசியல் ஒற்றர்கள் பிரிவு எனலாம். கே.ஜி.பி., சி.அய்.ஏ. போல இல்லாவிட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை கடந்த 35 ஆண்டுகளில் அசுர வளர்ச்சி பெற்று தமிழகத்தில் சுயாட்சி செலுத்தும் ஓர் அமைப்பு அது. இன்றும் அதனது தலைமைப் பொறுப்பில் இருப்பவர், நேரடியாக முதலமைச்சரை சந்திக்கும் அதிகார பலம் பெற்றவர். பின்னொரு நாளில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடக்கும்போது, ஒரு நீதிபதி 'க்யூ' பிராஞ்சு என்றால், என்ன என்று கேட்டார். நான் வேடிக்கையாக 'Questionable Branch' (கேள்விக்குரிய பிரிவு) என்று பதில் சொன்னபோது கோர்ட்டில் சிரிப்பலை எழுந்தது. அந்த நாட்களில் சி.பி.அய்.எம்.இல் இருந்து பிரிந்து 'நக்சல்பாரி' பாதையை தேர்ந்தெடுத்து சி.பி.அய்.எம்.எல். இயக்கம் உருவாகியிருந்தது. அவர்களுக்கு அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் ஒரு கணிசமான மாணவர்களிடமும் செல்வாக்கு இருந்தது. ஆனால், அந்த மாணவத் தோழரில் பெரும்பாலோர் பொறியியல் கல்லூரியிலேயே இருந்தனர். கலை, விஞ்ஞானப் பிரிவுகளில் எஸ்.எப்.அய்.க்கு ஓரளவுக்கு செல்வாக்கு இருந்தது.

உளவு பிரிவு போலிசார் இந்தப் பின்னணியை வைத்து, ஒரு பெரிய சதி நடப்பதாகக் தகவல் அளித்தனர். டாக்டர் பட்டம் வாங்க வரும் முதல்வரைத் தாக்க தீவிரவாத இயக்கம் தயாராக இருப்பதாகவும், அதனாலேயே பாதுகாப்பு கருதி யாரையும் விழா மண்டபத்தில் அனுமதிக்கவில்லை என்றும் கூறினர். இதையொட்டி, ஆர்.டி.ஓ. தியானேஸ்வரன் ஆணையில் காவல் துறை தடியடி நடத்தி மாணவர்களை அப்புறப்படுத்தியது. ஒரு சிறிய ஜனநாயக எதிர்ப்பைக் காட்டக்கூட அனுமதி மறுத்தனர். கூண்டோடு மாணவர்களை அரை நிர்வாணக் கோலத்தில் போலிஸ் லாரிகளில் ஏற்றிக் கொண்டுபோய் - இருபது, முப்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புவனகிரி, சேத்தியாதோப்பு ஆகிய ஊர்களின் அருகே நெடுஞ்சாலையில் இறக்கி விட்டுச் சென்றனர்.

மாணவர்கள் கையில் காசு இல்லாமலும், உடலில் சாண் துணியுமில்லாமல் நீண்ட நெடும் பயணமாக பல்கலைக் கழகத்திற்கு நடந்தே திரும்பி வந்தனர். மாணவர் விடுதிகளின் படிக்கட்டுகளில் காணப்பட்ட ரத்தக் கறைகளையும், உடைத்து நொறுக்கப்பட்ட அறைக் கதவுகளும் போலிசாரின் அத்துமீறல்களுக்கு வெகு நாட்கள் சாட்சியமாக இருந்தன.

மாணவர்களுக்காக தயார் செய்து வைத்திருந்த (Graduates Dinner) விருந்து, பல்கலைக் கழகத்தில் ஒரு வாரம் வைக்கப்பட்டிருந்த காவல் துறையினரின் மிருகப் பசிக்கு இரையாயின. இந்த களேபரத்திற்கிடையில் இரண்டாமாண்டு கணிதவியல் படித்த மாணவன் உதயகுமாரின் உடல், பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள பெரிய நீர்த் தேக்கத்தில் மிதந்து கிடந்தது. அதைப் பார்த்த மாணவர்கள் கொதித்தெழுந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதைக் கேள்விப்பட்டு நேரில் சென்ற எஸ்.எப்.அய்.யின் உண்மையறியும் குழு, ஒரு அறிக்கை தயார் செய்து அதை வெளியிட்டோம். போலிஸ் தடியடி பற்றி நீதி விசாரணை வேண்டும். மற்றும் இறந்த மாணவர் உதயகுமார் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரினோம்.

இதையெல்லாம் கேட்டும் கண்டு கொள்ளாத அரசை எதிர்த்து மிகப் பெரிய மாணவர் போராட்டம் தமிழகத்தில் எழுந்தது. எஸ்.எப்.அய்.யின் செயலாளர் என்ற முறையில் அனைத்து மாணவர் அமைப்பு, போராட்டக் குழுவின் இணைப்பாளராக நான் பணியாற்றினேன். வேறு வழியில்லாமல் அரசு ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்தது. திரு. என்.எஸ். ராமசாமி என்ற உயர் நீதிமன்றக் கூடுதல் நீதிபதி நியமிக்கப்பட்டார். அந்த விசாரணைக் கமிஷனிடம், 'இந்திய மாணவர் சங்க'த்தின் சார்பில் ஒரு மனுவை அளித்து அந்த வழக்கை நானே நடத்தினேன். வழக்கு நடத்தும் போது, சட்ட முறைகளைப் பற்றி அதிகம் அறியாததால், பெயர் பெற்ற வழக்கறிஞர்கள் ப. சிதம்பரம் மற்றும் என். நடராஜன் அவர்களிடமிருந்து அவ்வப்பொழுது ஆலோசனைகளைப் பெற்றேன். இறுதி விசாரணையில் வாதாடுவதற்காக, எனது வேண்டுகோளிற்கிணங்க ப.சிதம்பரம்,



தந்தையாருடன் கே. சந்துரு

**❝ மனித உரிமைப் பிரச்சினைகளை சிறிய குழுக்கள் கையில் எடுத்து, நீதிகேட்டு வெற்றியடையும் தருணத்தில் - அதற்கு எவ்வித சம்மந்தமுமில்லாத நபர்கள், அதே பிரச்சினையைத் தங்களின் கையில் எடுத்துக் கொண்டு, அதில் குறுகிய அரசியல் ஆதாயம் அடைய முற்படுவதும் - அரசுக் கட்டிலில் ஏறிய பின் 'பழைய குருடி, கதவைத் திறடி' என்று மீண்டும் பழைய போக்கில் செல்ல முற்படுவதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ❞**



படிப்பகம்

www.padippakam.com

சிதம்பரம் டவுனுக்கு வந்தது, எங்களது அமைப்புக்கு மிகவும் பெருமை சேர்த்தது.

விசாரணைக் கமிஷன் போடுவதற்கு முன்பே தமிழக முதல்வர், இறந்துபோனவர் உதயகுமார் அல்ல என்றும் , தடியடி நடத்தியது சரியே என்றும் நியாயப்படுத்தி வந்தார். இதற்கிடையில், உதய குமாரின் புகைப்படத்திற்கு மாலை போட்டு அவரது குடும்பம் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தது. அவரது தந்தை கே. பெருமாள்சாமி ஒரு பள்ளி ஆசிரியர். நெல்லிக் குப்பத்தைச் சேர்ந்தவர். அன்றைய ஆளுங்கட்சியின் மிகப் பெரும் புள்ளிகள் அவரை சந்தித்து உருட்டி, மிரட்டி, இறந்தது தனது மகன் அல்ல என்றும், தனது மகன் நக்சலைட்டுகளுடன் தலைமறைவில் இருக்கிறான் என்றும் பொய்சாட்சி சொல்ல வைத்தனர். மகனுக்கு ஈமக்கடன்களை முடித்த ஒரு தந்தையையே வாக்குமூலம் கொடுக்க வைத்த பெருமை, மனுநீதி சோழ பரம்பரையில் வந்தவர்களாக சித்தரித்துக் கொண்டவர்களையே சாரும்.

பெத்த பிள்ளையையே கறி சமைத்துப் படையல் வைத்த நாயன்மார்கள் நாட்டில், இதுபோன்ற சம்பவங்கள் புதிதன்று. நடந்த சம்பவங்கள் பற்றி கேள்வியெழுப்பியபோது, தமிழகத்தில் காணாமல் போனவர்களின் புள்ளி விவரங்களைக் கொடுத்து, அதற்கெல்லாம் நானா பொறுப்பு என்று இறுமாப்புடன் பதில் சொன்னார் தமிழக முதல்வர். ஆகவே, அந்த வழக்கு எங்களுக்கு சவாலாக அமைந்தது. வழக்கின் முதல் நாளன்று கடலூரில் விசாரணைக்குச் சென்ற நான் நீதிபதியிடம் ஒரு மனு கொடுத்தேன். பழைய காங்கிரஸ் மாணவர் அமைப்பு, உழைப்பாளர் பொது நலக் கட்சி ஆகிய அமைப்புகளுக்குப் பல வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள். ஆனால், அவர்களே அப்படியொரு மனுவை நான் கொடுப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை.

அந்த மனுவில், நீதிபதி ஒரு கூடுதல் நீதிபதி. அவர் பின்னாளில் நிரந்தரம் செய்யப்படும்போது, முதலமைச்சரின் கருத்தும் கோரப்படும். ஆகவே, அவர் முதலமைச்சர் மீதுள்ள புகார்களை விசாரித்து நியாயமான தீர்ப்பு வழங்க ஏதுவான சூழ்நிலை இல்லை என்றும், எங்களுக்கு அவரது நீதியாட்சியின் மீது நம்பிக்கையில்லை. எனவே, அவர் தானாகவே பதவி விலக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். அதைச் சட்டத்தில், Recuse Petition என்பார்கள். அப்பொழுது அந்த வார்த்தையெல்லாம் எனக்குத் தெரியாது. நீதிபதி அந்த மனுவைப் படித்து விட்டு முகம் சிவந்து விட்டார். கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு அந்த மனு, சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேட்டார். நான் உடனே எந்தத் தயக்கமும் இல்லாமல், அது சட்டத்தின்படி வைத்த வேண்டுகோள் அல்ல என்றும், நீதிபதியின் மனசாட்சிக்கு வைத்த வேண்டுகோள் என்றும் சொன்னேன். கோர்ட்டிலிருந்த கூட்டம் கொல்லென்று சிரித்தது. சட்டத்தின்படி மட்டுமே நடக்கும் நீதிமன்றம், தனது கடமையைத் தொடர்ந்தது. அதற்குப் பிறகு விசாரணைக் கமிஷனின் கடுப்பு, கடைசிவரை குறையவில்லை.



**"மகனுக்கு ஈமக் கடன்களை முடித்த ஒரு தந்தையையே வாக்குமூலம் கொடுக்க வைத்த பெருமை, மனு நீதி சோழ பரம்பரையில் வந்தவர்களாக சித்தரித்துக் கொண்டவர்களையே சாரும்."**

அந்த வழக்கை நடத்த எனக்கு மிகவும் உதவியாக இருந்தவர், அன்றைய அண்ணாமலை பல்கலைக் கழக மாணவரும், இறையை தமிழக சி.பி.அய்.எம். தலைவர்களில் ஒருவருமான சிதம்பரம் கே. பால கிருஷ்ணன். பல நெருக்கடிகளுக் கிடையே மாணவர்களை சாட்சி சொல்ல கூட்டி வரவும் அவரே சாட்சியமளித்தும் பேருதவி புரிந்தார். நான் விசாரணைக்கு கடலூர் வரும்போது, எந்த விடுதிகளும் எனக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று காவல் துறை, விடுதிகளின் உரிமையாளர்களை மிரட்டியதன் விளைவாக, நான் பாண்டிச்சேரியில் தங்கி கடலூர் சென்று வந்தேன். பாண்டியிலிருந்து தினமும் பஸ்ஸில் கடலூர் செல்லும்போது, ஆங்கிலேய ஆட்சியில் புதுச்சேரியில் தஞ்சமடைந்த பாரதியாரையும், அரவிந்தரையும் நினைவில் கொள்வேன்.

எங்களது அயராத உழைப்பையும் உண்மைகளை சேகரித்து விசாரணைக் கமிஷன் முன்னால் அளித்ததையும் பார்த்து வியந்த நீதிபதி என்.எஸ்.ஆர்., தனது பெஞ்ச் கிளார்க்கிடம் சந்துருவை சட்டம் படிக்கச் சொல் என்று கூறினார். அதை உடனே அந்த பெஞ்ச் கிளார்க் என்னிடம் சொன்னதும், நான் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதுவே என்னுள் சட்டம் பயிலும் எண்ணத்தின் முதல் கருவானது. பின்னர் விசாரணைக் கமிஷன், காவல் துறை தடியடியை நியாயப்படுத்தி அறிக்கை கொடுத்தாலும், இறந்தது உதயகுமார் என்று திட்டவட்டமாக அறிவித்தது.

எங்களுக்கு கிடைத்த முதல் வெற்றி, அந்தக் கமிஷன் அறிக்கை. அதன் ஆரம்பம், கருணாநிதியின் ஆட்சி சிறிது ஆட்டம் காண ஆரம்பித்தது. உட்கட்சிப் பூசல்களில் சில நாட்களில் வெளியே வந்த எம்.ஜி.ஆர்., இந்த அறிக்கையையும் தன் கையில் எடுத்துக் கொண்டார். மறைந்த உதயகுமாரின் தம்பி மதிவாணனையும் தனது புதிய கட்சியில் சேர்த்துக் கொண்டு தென்னாற்காட்டில் சுற்றுப் பயணம் செய்தார்.

உதயகுமாரை கொன்ற சதிகாரர்களுக்கா உங்கள் ஆதரவு என்று கூட்டங்கள்தோறும் கேட்க ஆரம்பித்தவுடன், மகிழ்ச்சியின் எல்லையே அடைந்தது போல தோன்றியது. ஆனால், மனித உரிமைப் பிரச்சினைகளை சிறிய குழுக்கள் கையில் எடுத்து அதற்கு நீதிகேட்டு வெற்றியடையும் தருணத்தில் - அதற்கு எவ்வித சம்மந்தமுமில்லாத நபர்கள் (இன்னும் கேட்டால் மனித உரிமைகள் மீறப்படும்போது, அதே கோஷ்டியில் இருந்தவர்கள்) அதே பிரச்சினையை தங்களின் கையில் எடுத்துக் கொண்டு, அதில் குறுகிய அரசியல் ஆதாயம் அடைய முற்படுவதும் அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு ''பழைய குருடி, கதவைத் திறடி'' என்று மீண்டும் பழைய போக்கில் செல்ல முற்படுவதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**நீங்கள் எப்போது சட்டம் படிக்கத் தொடங்கினீர்கள்?**

விசாரணைக் கமிஷன் வெற்றிக்குப் பிறகு மேலும் பல போராட்டங்களில் முக்கிய பங்கு கொண்டு நான் ஈடுபட்டாலும், மாணவர் தலைவர் என்று சொல்லிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டாலும், எனக்கு சரியான முகவரி இல்லை என்று தோன்றியது. எந்தக் கல்லூரியில் படிக்கிறீர்கள் என்று பல முறை மாணவர்கள் கேட்கும் போதெல்லாம் - நான் வாழ்க்கையென்னும் பள்ளியில் படிக்கிறேன் என்று வேடிக்கையாக சொன்னாலும், அந்தக் கேள்வி என் மனதைத் தொடர்ந்து உறுத்தியது. ஒரு Professional Leader ஆக நான் இருக்க விரும்பவில்லை. அப்படி முகவரி தேடும் அரசியல் மாணவர்களுக்கு, என்றும் சரணாலயம் சட்டக் கல்லூரியே. நானும் அந்த சரணாலயத்தினுள் 1972இல் நுழைந்தேன். முன்னைவிட அதிகமாக மாணவர் இயக்கங்களிலும் போராட்டங்களிலும் கலந்து கொண்டு எஸ்.எப்.அய்.யின் மாநிலச் செயலாளராகவும் ஆக்கப்பட்டேன்.

எனது அரசியல் பின்னணியை அறிந்து கொண்ட கல்லூரி நிர்வாகம், எனக்கு விடுதியில் இடமளிக்க மறுத்தது. அதையெதிர்த்து நானும் சில அ.தி.மு.க. மாணவர்களும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினோம். கல்லூரி நுழைவு வாயிலிலேயே இரவு பகலாக படுத்துக் கொண்டோம். என்னுடன் அன்று உண்ணாவிரதம் இருந்தவர்களில் என்னுடைய வகுப்புத் தோழரும் இன்றைய தமிழக பா.ஜ.க. தலைவரில் ஒருவரான சு. திருநாவுக்கரசரும் ஒருவர். மூன்று நாட்கள் உணவருந்தவில்லை என்பது அப்பொழுது பிரச்சனையாகவே தெரியவில்லை. இதனையொட்டி எழுந்த மாணவர் கொந்தளிப்பை, தடுக்க, நிர்வாகம் எங்களுக்கு விடுதியில் இடம் அளித்தது.

**– சட்டம் படிக்கத் தொடங்கியதும், தொழிற் சங்கத் தலைவர்களோடு தங்களுக்கு நெருக்கம் ஏற்பட்டதா?**

சட்டக் கல்லூரி மாணவன் ஆன பிறகு, புது தெம்பு வந்து விட்டது. பல கல்லூரிகளுக்கும், விடுதிகளுக்கும் சென்று தினசரி பிரச்சாரப் பயணம், சட்டக் கல்லூரியிலேயே தினமும் காலை மதிய வகுப்பு, மாணவர்களிடம் கடுமையான கருத்து மோதல்கள் என்று நிகழ்ந்தது. 'இந்திய மாணவர் சங்க'த்தின் இரும்புக் கோட்டையாக சட்டக் கல்லூரி மாறியது. 1974இல் இந்தியாவையே 'கலக்கிய ரயில்வே தொழிலாளர்களின் அகில இந்திய வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதை நடத்திய தமிழக தலைவர் அனந்தன் நம்பியார் தலைமறைவாக நேரிட்டது. அவரை எனது மாணவர் தோழர் ஒருவர் வீட்டில் தங்க வைத்து பார்த்துக் கொண்டேன். அந்த சமயம், சென்னை வந்த ஜார்ஜ் பெர்ணான்டஸ், SRMU தலைவர் நமச்சிவாயத்தையும் கைதாகி விடாமல் போராட்டத்தை நடத்திச் செல்ல உத்திரவிட்டார். ஆனால், அதற்கு அவர் உடன்படவில்லை. ஜார்ஜ் அவர்கள் நமச்சிவாயத்தை என்னுடைய பொறுப்பில் ஒப்படைத்து, அவருக்கு வேண்டிய உதவிகளை செய்யச் சொன்னார். நானும் அவரை எனது விடுதி அறையிலேயே தங்க வைத்து வெளியிலிருந்து சாப்பாடு வாங்கிக் கொடுத்தேன்.

சக மாணவர்களிடம் அவர் எனக்கு தூரத்து உறவு என்றும், வைத்தியத்திற்காக சென்னை வந்துள்ளார் என்று கூறி சமாளித்தேன். மற்றவர்களின் சந்தேகத்தை சமாளித்த எனக்கு அவரை மட்டும் சமாளிக்க முடியவில்லை. அறையிலேயே இருப்பது துருப்பிடிப்பது போல உள்ளது. எனது சங்கத் தோழர்களைப் பார்க்க வேண்டும். மீதி உள்ள தலைமறைவு தலைவர்களைப் பார்க்க வேண்டுமென்று தினசரி நச்சரித்தார். அவரது தொல்லை தாங்காமல், அவரது முன்னணி தளபதி ஒருவர் வீட்டுக்கு ஆட்டோவில் சென்றோம். அந்தத் தளபதி இருக்கும் தெருவில் நுழையும் போதே, காவல் துறையினர் அந்த தளபதியை போலிஸ்வேனில் ஏற்றுவதைப் பார்த்த நாங்கள் அறைக்குத் திரும்பினோம். ஆனால், போராட்டக் குழுவின் வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் நமச்சிவாயம் (நான் கல்லூரி சென்ற பிறகு) தன்னிச்சையாக கீழ்ப்பாக்கம் காவல் நிலையம் சென்று, தன்னை அரசு விருந்தினராக்கிக் கொண்டார்.

மத்திய அரசு மிருகபலம் கொண்டு ரயில்வே தொழிலாளர் போராட்டத்தை அடக்கியது. ஆயிரக்கணக்கான தோழர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். அப்போராட்டத்தை நசுக்கி வெள்ளோட்டம் பார்த்த இந்திரா காந்தி, நெருக்கடி நிலையைப் பின்னர் பிரகடனம் செய்யத் தயங்கவில்லை. 1975 ஆம் ஆண்டு சூன் மாதம் 25 ஆம் தேதி நெருக்கடி நிலை (Emergency) பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு வெளிநாட்டுப் போர்களுக்காக பிரகடனம் செய்யப்பட்ட நெருக்கடி, முதன்முறையாக உள்நாட்டுக் காரணிகளைக் காட்டி செயல்படுத்தப்பட்டது. அம்பேத்கர் தந்த அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. ஜெயப்பிரகாஷ் நாராயணன் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் சிறையில் தள்ளப்பட்டனர். 'மிசா' சட்டம் நாட்டில் பேயாட்சி செய்தது. அந்த நெருக்கடியை எதிர்த்த பல இயக்கங்களின் தலைமைகள் தலைமறைவாகினர். சி.பி.எம். தலைவர்களும் அந்த நிலைமை வெகு நாட்கள் நீடிக்கும் என்றும், அதற்காக கட்சிகளின் அமைப்பைப் பன்முகப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானித்தனர். இந்திரா காந்தியின் அந்த ஓர் செயல், இந்திய ஜனநாயக அடிப்படையின் பலவீனத்தைப் பறைசாற்றியது.

சென்னையில் புகழ்பெற்ற சீனியர் வக்கீல் கோவிந் சுவாமிநாதன் வீட்டில் கூடி பலர் ஒன்று சேர்ந்து 'மக்கள் சிவில் உரிமைக் கழகம்' (PUCL) தொடங்க முற்பட்டோம். அவரது மகள் சிறீலதா, 'மிசா'வில் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் ராஜஸ்தானில் பழங்குடியினர் மத்தியில் சமூக சேவை செய்து வந்தவர். PUCL அமைப்பு விதிகளில், அரசியல் கட்சிகளில் பதவி வகிப்பவர்களை, உறுப்பினராக சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று இருந்ததால், நான் அந்த அமைப்பின் பின்புலமாக மட்டுமே செயல்பட்டேன்.



கோவை பஞ்சாலைத் தொழிலாளர் தலைவர்களுடன்

எங்குமே எதிர்ப்பு வெளிப்படையாக இல்லாத வேளையில், சட்டக் கல்லூரியில் நாங்கள் வகுப்புகளைப் புறக்கணித்து வேலை நிறுத்தம் செய்தோம். மூன்று நாட்களுக்குப் பிறகு மத்திய ரிசர்வ் போலிஸ் படை (CRPF) கல்லூரியை எடுத்துக் கொண்டது. விடுதியில் காவல் துறையினரின் கடுமையான சோதனை. காவல் துறை கமிஷனர் கையெழுத்திட்ட வெற்று 'மிசா' வாரண்டுகளோடு அலைந்த போலிசார், யார் பெயரை வேண்டுமானாலும் அதில் எழுதி, தடுப்புக் காவலில் சிறைக்குள் ஓராண்டு வைக்கலாம் என்ற நிலைமை இருந்தது. தேடப்பட்ட பட்டியல்களில் எனது பெயரும் இருந்ததால், நானும் சில மாதங்கள் சென்னை நகர மக்கள் சமுத்திரத்தில் கரைந்து போனேன்.

நேர்காணல் : பாண்டியன், கோ. சுகுமாரன்

பேட்டி அடுத்த இதழிலும்...



படிப்பகம்

www.padippakam.com





“ என் மக்கள் பயணிக்கும் இந்த ஊர்தியை மிகவும் சிரமப்பட்டே - இப்போது இருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறேன். வழியில் வரும் தடைகளையும் சிரமங்களையும் பொருட்படுத்தாமல், இந்த ஊர்தி முன்னேறிச் செல்லட்டும். மாண்புடனும் மரியாதையுடனும் என் மக்கள் வாழ நினைத்தால், இச்சமயத்தில் அவர்க்ள் கிளர்ந்தெழ வேண்டும். என் மக்களும், என் இயக்கத்தினரும் அந்த ஊர்தியை இழுத்துச் செல்ல முடியாது போனால், அது இப்போது எங்கே நிற்கிறதோ, அங்கேயே விட்டு விட்டுச் செல்லட்டும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஊர்தியைப் பின்னோக்கித் தள்ளிவிட வேண்டாம். இதுவே என் செய்தி. ”













படிப்பகம்

www.padippakam.com





“ சாதி அமைப்பு என்னும் கோட்டையில் பிளவு ஒன்றை ஏற்படுத்துவதற்கே பல யுகங்களாகும். சாதி அமைப்பைப் பிளவுபடுத்த நீண்ட காலம் ஆகும் என்றாலும் சரி, அல்லது அந்தப் பெரும் பணியை வெகு விரைவில் முடித்துவிடலாம் என்றாலும் சரி, நீங்கள் ஓர் உண்மையை மறக்கக் கூடாது. சாதிக் கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டும் என்றால், பகுத்தறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் ஒரு சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் வெடிவைத்தே தீர வேண்டும். ‘ஸ்ருதி’கள் - ‘ஸ்மிருதி’களாலான (இந்து) மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்த செயலும் பயன் தராது. இதுவே என் முடிவான கருத்தாகும். ”













படிப்பகம்

www.padippakam.com

# டாக்டர் அம்பேத்கருக்கு ஏன் 'நோபல் பரிசு' வழங்கக் கூடாது?



**"நாட்டு நலன்களை அடிப்படையாகக் கொண்டுதான் நிதி நிலவரம் சீரமைக்கப்பட வேண்டும். சர்வதேச சந்தை நிலவரங்கள், நாணய விகிதங்கள் ஆகியவற்றைக் கொண்டு அல்ல என்பதுதான் அம்பேத்கரின் கருத்தாக இருந்தது."**

இந்தியாவின் அரசியல் சூழல், அரசியல்வாதிகளின் அறிவுத் திறன்களை மறைத்துவிடுகிறது. அரசியல் வாழ்க்கை என்று வந்துவிட்டாலே, ஒருவரது மற்ற திறன்கள், அரசியலுக்கு உடனடியாகப் பயன்படாத திறன்கள், அங்கீகரிக்கப்படுவது இல்லை. அண்ணல் அம்பேத்கருக்கு நேர்ந்த நிலை, இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அம்பேத்கரை சட்ட நிபுணராக நாம் அறிவோம்; சிறந்த அரசியல் தலைவராக அறிவோம். ஆனால், அவர் மிகச் சிறந்த பொருளியல் வல்லுனராகவும் இருந்தார் என்பது, நம்மில் பலருக்குத் தெரியாது. தனது பல்வேறு பணிகளுக்கிடையே - அவர் பொருளியல் தொடர்பான முக்கியமான ஆய்வுகளை மேற்கொண்டார். தமது ஆய்வுரைகளை நூல்களாகவும் வெளியிட்டார். அவர் தொடர்ந்து அக்கறை செலுத்தி வந்தது, பொருளியல் துறையின் மிக நுணுக்கமானதொரு பகுதியாக விளங்கும் 'பொது நிதி' என்பதில்தான்.

பொது நிதி (Finance) என்பது, ஒரு அரசாங்கத்தின் வருவாய்க் கொள்கை, பொருளாதார திட்டமிடுதல் மற்றும் பல்வேறு சமூக நல சேவைகளுக்காக ஒதுக்கப்படும் பணவிகிதம் போன்ற - பல இன்றியமையாத செய்திகளைப் பற்றிய அறிவை விளக்கும் துறையாகும். அம்பேத்கர் பொதுநிதி தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டார்.

அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் அம்பேத்கர் பெற்ற முதுகலைப் பட்டத்திற்காக - 'பாரம்பரிய இந்திய வணிகம்' என்ற ஆய்வேட்டினை எழுதினார். இதற்குப் பிறகு முனைவர் பட்டத்திற்கான ஆய்வினையும் செய்து முடித்தார். இந்தியாவில் வியாபாரத்திற்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் செலவு செய்யப்படும் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட, பெறப்படும் வட்டிப் பணத்தின் விகிதம், அது திரட்டப்பட்டதன் வரலாறு ஆகியவற்றைப் பற்றிய அவரது ஆய்வுரை, அவருக்கு முனைவர் பட்டத்தை வாங்கிக் கொடுத்தது.

அமெரிக்காவில் படிப்பை முடித்து விட்டு உடனே லண்டனில் தங்கி, மேலும் படிக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. அவரது மேல்படிப்பிற்காக நிதியுதவி செய்து வந்த பரோடா மன்னர், அவர் உடனே இந்தியாவுக்குத் திரும்பி - பரோடா அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, அரசுப் பணியாற்றிட வேண்டும் என்று கட்டளையிட்டார். அம்பேத்கர் அவரது சொற்களுக்கு இணங்கி ஊர் திரும்பினார். பரோடா அரசாங்கத்துக்கு செய்து முடிக்க வேண்டிய வேலைகளை செய்து முடித்தார்.

இரண்டு ஆண்டுகள் மும்பையிலிருந்த 'சிடென்ஹாம் கல்லூரி'யில் ஆசிரியராகப் பணியாற்றி, 'அரசியல் பொருளாதாரம்' கற்பித்தார். இதற்குப் பிறகு கையிலிருந்த கொஞ்சம் பணத்தைச் சேர்த்துக் கொண்டு, வேறு இடங்களிலிருந்தும் பணம் திரட்டி ஒரு வழியாக லண்டன் வந்து சேர்ந்தார். லண்டன் பல்கலைக் கழகத்தில் மாணவராக சேர்ந்தார். 'பிரிட்டிஷ் இந்தியாவில் பொது நிதி: மத்திய அரசிடமிருந்து மாகாண அரசாங்கங்கள் பெற்ற அதிகாரங்கள்'



படிப்பகம்

www.padippakam.com



என்ற தலைப்பிட்ட ஆய்வேட்டினையும், 'இந்திய ரூபாய் : சில பிரச்சனைகள்' என்ற ஆய்வேட்டினையும் எழுதி முடித்தார். லண்டனிலிருந்து ஜெர்மனிக்கு சென்று பான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க விரும்பினார். காரணம், பொருளியல் துறைக்குப் பெயர்போன நாடு ஜெர்மனிதான் - கார்ல் மார்க்ஸ் பிறந்த நாடு வேறு! ஆனால், அவரது முனைவர் பட்ட ஆய்வேடான 'இந்திய ரூபாய்: சில பிரச்சனைகள்' என்பதைத் திருத்தி எழுத வேண்டியிருந்ததால், அவரால் தொடர்ந்து ஜெர்மனியில் இருந்து படிக்க முடியாமல் போனது.


'இந்திய ரூபாய்: சில பிரச்சனைகள்' என்ற அவரது ஆய்வு, பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இந்தியாவின் பணநிலை குறித்ததாக அமைந்தது. இந்தியாவின் நாணயமான ரூபாயின் மதிப்பு, இந்திய பொருளாதாரச் சூழலைப் பொறுத்து மட்டும் அமையவில்லை. காலனித்துவ பொருளாதாரச் சூழலும், பன்னாட்டுச் சந்தை நிலவரமும், குறிப்பாக உலக அளவில் உலகின் முக்கிய நாடுகளின் நாணயங்களுக்கு இருந்த மதிப்பும், செல்வாக்கும் இந்திய ரூபாயின் மதிப்பினைப் பாதித்தன.

ஆங்கிலேயே பொருளியல் நிபுணர்கள், இந்திய ரூபாயின் மதிப்பு குறித்துப் பேசுகையிலும், கணக்கிடுகையிலும் வெளிநாட்டு நிலவரங்களை, குறிப்பாக சர்வதேச நாணயச் சந்தையில் ரூபாய் பெற்றிருந்த செல்வாக்கை மட்டுமே கருத்தில் கொண்டு விவாதித்தனர். அவ்வாறு விவாதித்தவர்களில் ஜான் மெய்னார்ட் கெய்ன்ஸ் என்பவர் முக்கியமானவர். முதலாம் உலகப் போருக்குப் பிறகு, மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரம் நலிந்து போயிருந்தன. பணத்திற்கு மதிப்பே இல்லாமல் போயிருந்தது. பங்கு சந்தைகள் சரிவர இயங்கவில்லை.

பலருக்கு இதனால் இழப்பு ஏற்பட்டதுடன், லட்சக்கணக்கானவர்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டனர். சந்தைப் பொருளாதாரத்தின் இயக்கத்தினை அரசுகள் கட்டுப்படுத்த வேண்டும், பொருளாதார இயக்கத்தில் பங்கேற்று, தேவைப்பட்ட பொது முதலீடு செய்து, நிதியுதவி வழங்கும் நிலைமையை சீர் செய்ய வேண்டும் என்று கெய்ன்ஸ் ஆலோசனை வழங்கினார். அவரது வாதங்கள். அமெரிக்கா போன்ற நாடுகளால் ஏற்கப்பட்டன.

அத்தகையதொரு உலகப் புகழ் பெற்ற வல்லுனரான கெய்ன்சின் கருத்துகளை - இந்திய ரூபாய் குறித்து அவர் முன்வைத்த கருத்துகளை - அம்பேத்கர் மறுத்தார். சர்வதேச நாணய நிலைமைகளை வைத்துக் கொண்டு, இந்திய ரூபாய்க்கான மதிப்பை வரையறுப்பது சரியல்ல. ரூபாயின் மதிப்பு உறுதியானதொரு நிலையில் இருக்க வேண்டுமானால், இந்தியப் பொருளாதார நிலைமையில், குறிப்பாக நிதி நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். பரந்துபட்ட மக்களிடம் பணப் புழக்கம் குறைவாக இருக்கும் நிலையில், அவர்களால் எதையும் வாங்க முடிவதில்லை. இதனால், சந்தையில் பொருட்கள் தேங்கிப் போய் விடுகின்றன.

ஒருபுறம் பணமற்ற ஏழைகள், மறுபுறம் பணம் இருந்தாலும், காலனித்துவ சூழலில் அப்பணத்துக்கு மதிப்பு அதிகம் இல்லாததால், எவ்வளவு சம்பாதித்தாலும் நன்றாக செலவு செய்ய முடியாத நிலை உள்ளது. காரணம், வெளிநாட்டுக்கு குறைந்த விலையில் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வாங்குபவனுக்கு ஏற்ற வகையில் ரூபாய்க்கு குறைந்த மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. மறுபுறமோ, இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால், பண வீக்கம் ஏற்படுகிறது.



Columbia University
in the City of New York

BHIMRAO RAMJI AMBEDKAR, LL.D.

Born in India and schooled there under heavy handicaps; B.A. of the University of Bombay at twenty, and for three years a graduate student in this University, receiving the doctorate in political science; subsequently a student of the Inns of Court and the University of London, obtaining a doctorate in economics; for the past three decades as barrister, university professor, and member of the legislative council, as a framer of the Constitution, member of the cabinet and of the Council of State, one of India's leading citizens--a great social reformer and a valiant upholder of human rights.

In the exercise of the authority conferred upon me by the Trustees, I gladly admit you to the degree of Doctor of Laws, honoris causa, in this University and confer upon you all the rights and privileges which attach thereto, in token whereof I hand you this diploma.

Grayson Kirk
Vice President and Provost

June 5, 1952

கொலம்பியா பல்கலைக் கழகம் வழங்கிய கவுரவ டாக்டர் பட்டம்

**"எல்லா தொழில்களும் தேசிய மயமாக்கப்பட வேண்டும். நிலம் தேச சொத்தாக அறிவிக்கப்பட்டு, நாடுதோறும் கூட்டு விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் காப்பீடு வழங்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்."**



1950இல் அவுரங்காபாத்தில் மிலிந் கல்லூரியை நிறுவுவதற்காக, அவ்விடத்தைப் பார்வையிட வந்திருந்தபோது.



படிப்பகம்

www.padippakam.com

காலனித்துவ அரசு, தான்பட்ட வெளி நாட்டுக் கடன்களை அடைக்க, எவ்வளவு ரூபாய்களைத் திரட்டினாலும் கடனை சரிவர அடைக்க முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள்தான் என்று மிக நேர்த்தியாகவும் தக்க சான்றுகளை வழங்கியும் அம்பேத்கர் வாதிட்டார்.

நாட்டு நலன்களை அடிப்படையாகக் கொண்டுதான் நிதி நிலவரமானது சீரமைக்கப்பட வேண்டும். சர்வதேசசந்தை நிலவரங்கள், நாணய விகிதங்கள் ஆகியவற்றைக் கொண்டு அல்ல என்பதுதான் அம்பேத்கரது கருத்தாக இருந்தது.

பொது நிதியை அரசு எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்ற கேள்வியை எழுப்பியதுடன், தனக்கேயுரிய வகையில் பதிலும் அளித்தார்: 1. எல்லா தொழில்களும் தேசியமயமாக்கப்பட வேண்டும் 2. நிலம் தேச சொத்தாக அறிவிக்கப்பட்டு, நாடுதோறும் கூட்டு விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும் 3. ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் காப்பீடு வழங்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசு சிறந்த நிர்வாகத்தை செயல்படுத்தினாலொழிய, எந்தவொரு நலத்திட்டமும் செயல்படுத்தப்படாது என்பதையும் அம்பேத்கர் அறிந்திருந்தார்.

எனவே, அமைச்சர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கி, அவர்களுக்கு சமூக மதிப்பு உண்டாகும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் தழைக்கும், அமைச்சர்களும் பொறுப்புடன் செயல்படுவர் என்பது அவரது வாதமாக இருந்தது. அரசு, பொது நிதியைத் திரட்ட மோசமான வழிமுறைகளைக் கையாள்வதை அம்பேத்கர் ஏற்கவில்லை. மது ஒழிப்பு என்பதை அவர் ஆதரித்ததுடன், மது விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் - பேராசையைத்தான் தூண்டும் என்றார்.

மிகச் சிறந்த பொருளியல் சிந்தனையாளரான அம்பேத்கரின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், அவருக்குப் பொருளியல் துறைக்கான நோபல் பரிசினை வழங்குவதே சரியாக இருக்கும். அவர் பொருளியல் குறித்து எழுதிய காலத்தில், பொருளியல் துறைக்கு நோபல் பரிசு அளிக்கும் வழக்கம் இல்லை. ஆனால், இன்று அது உள்ளது. அண்ணல் அம்பேத்கருக்கு அத்தகைய பரிசு கிடைப்பது, மிகச் சரியானதாக இருக்கும்.

*Financial Express இல் Om Prakash எழுதிய Why No Nobel Prize for Ambedkar என்ற கட்டுரையைத் தழுவி எழுதியவர்:* வ. கீதா

# இதழ்களாய் எழுந்துள்ள தலித் எழுத்தியக்கம்

ஒரு சில இதழ்கள்



தலித் எழுத்துகள் இன்று - இதழ்களாய், இலக்கியமாய், துண்டறிக்கைகளாய், சுவரொட்டிகளாய் மற்றும் பதாகைகளாய் வெகுண்டெழுந்துள்ளன. 'தலித் இதழெழுத்து' நேற்று இன்று தோன்றியவை அல்ல. மாறாக, 136 ஆண்டுகளுக்கு முன் 'மகாவிகடத் தூத(ன்)'னாய் தோன்றியது. நோக்கம் ஒன்றுதான். தொடர்ந்து வெளிவராமல் நின்றுபோன இதழ்கள் மற்றும் வெளிவருகின்ற இதழ்களின் எண்ணிக்கை, 250க்கும் மேற்பட்ட இதழ்களாக உள்ளன.

தனிநபர், குழு மற்றும் இயக்கம் சார்ந்து புதிய புதிய பெயர்களில் பல்வேறு வடிவங்களில் வெளிவந்துள்ளன; வெளிவருகின்றன. தமிழ்ச்சூழலில் அவ்வையார் மற்றும் திருவள்ளுவரால் முன்மொழியப்பட்ட பார்ப்பனிய எதிர்ப்பு, இன்று - தலித் எழுத்துகளாய் சாதி மற்றும் மதம் சார்ந்த புனிதங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி வருகிறது.

உயர்ந்தவன் × தாழ்ந்தவன், மேல் × கீழ், ஊர் × சேரி, தூய்மை × அழுக்கு, புனிதம் × புனிதமற்றது, ஏழை × பணக்காரன், வன்மை × மென்மை என்கிற எதிரெதிர் வடிவங்களை இணை வடிவங்களாக மாற்றும் இதழ்களாய் எழுந்துள்ளது தலித் எழுத்தியக்கம்.

••

நான், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியற்புலத்தில் முனைவர் பட்டத்திற்காக - தலித் இதழ்களை மாற்று இதழியல் என்ற பொருள்கோளில் ஆய்வு செய்து வருகிறேன். இதன் பொருட்டு, தலித் இதழ்களை சேகரித்து வருகிறேன். 1866 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 250க்கும் மேற்பட்ட தலித் இதழ்கள் வெளிவந்துள்ளன. ஆனால், பல இதழ்கள் இதுவரை கிடைக்கவில்லை. பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டுள்ள என்னுடைய ஆய்வுக்கு - தலித் சிந்தனையாளர்கள், தலித் பத்திரிகையாளர்கள் எனக்கு தலித் இதழ்கள் மற்றும் தகவல்களை அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

**- ஆ.ச. சார்லி,** இதழியல் ஆய்வாளர், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை - 21



படிப்பகம்

www.padippakam.com

# அவதூறுகளை நிறுத்துக

1. விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தோழர் தொல். திருமாவளவன் அவர்கள், 'இந்தியா டுடே' இதழில் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பு - 'அடங்க மறு' என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. இந்நூலில், 'தலித்' ஆசிரியர் ரவிக்குமார் 'அலசல்' என்ற தலைப்பில் இந்நூலைப் பற்றி எழுதியுள்ளார். அதில், சற்றும் உண்மையில்லாத ஒரு செய்தியைப் பதிவு செய்துள்ளார்:

*''பயனீர்' பத்திரிகையில் 'தலித் டைரி' என்ற பத்தி வெளிவரத் தொடங்கியதும் இந்திய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தலித் அறிவு ஜீவிகள் 'பயனீர்' அலுவலகத்துக்குச் சென்று அதன் ஆசிரியரைப் பாராட்டி கவரவித்தனர். ஆனால், தோழர் தொல். திருமாவளவன் 'இந்தியா டுடே'வை கேவலமாகத் தாக்கி 'தலித் முரசு' பத்திரிகை கட்டுரைகளை வெளியிட்டது. (அவரது பத்தி நின்றவுடன் அதுவும் தனது தாக்குதலை நிறுத்தி விட்டதை கவனிக்க வேண்டும்.)''*

2. எட்டாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'தலித் முரசு', மய்ய நீரோட்டப் பத்திரிகைகளைக் கண்டிப்பதை - விமர்சிப்பதை அதன் முக்கிய செயல்பாடாகக் கொண்டிருக்கிறது. அதன் தொடக்க காலத்தில் ஒன்றரை ஆண்டுகளாக தோழர் நெடுஞ்செழியன் எழுதிய 'மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் இதழ்கள்' தொடர், பலராலும் வரவேற்கப்பட்ட ஒன்று. 1997 நவம்பர் தலித் முரசில், 'இந்தியா டுடே - வருங்கால தமிழகத்தைச் சீரழிக்கும்' என்றொரு விரிவான கட்டுரையும் இடம் பெற்றது. அதற்குப் பிறகும், பார்ப்பனப் பத்திரிகைகளின் முகத்திரையை அவ்வப்போது கிழிப்பதற்கு நாம் தயங்கியதில்லை.




3. ஆனால், எந்த ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டை 'தலித் முரசு' மீது ரவிக்குமார் வைத்திருக்கிறார். திருமாவளவன் 'இந்தியா டுடே'யில் எழுதத் தொடங்கியதாலா நாம் எதிர்த்தோம்? திருமாவளவன் 'இந்தியா டுடே'யில் 22.8.2001 அன்று, 'பத்தி' எழுதத் தொடங்கினார். ஆனால், அதற்குப் பிறகு ஏழு மாதங்கள் கழித்து மார்ச் 2002 இல், அப்பொழுது வந்த 'இந்தியா டுடே இலக்கிய மலரை' தோழர் யாக்கன் விமர்சித்திருந்தார். அதில் திருமாவளவன் எழுதும் 'பத்தி' பற்றி அவர் விமர்சிக்கவில்லை. அதற்குப் பிறகு 26.2.2003 இல் அவருடைய தொடர் முடிந்த பிறகும், வாசந்தி - 'இந்தியா டுடே'யின் நயவஞ்சகத்தை, ஜுன் 2003 இதழில் 'தலித் முரசு' கண்டித்தது.

ரவிக்குமார் சொல்வது போலவே, 'பயனீர்' பத்திரிகையை அறிவு ஜீவிகள் மலர்ச் செண்டு கொடுத்து வாழ்த்தியது போல - 'இந்தியா டுடே'வையும் வாழ்த்தியிருக்க வேண்டுமெனில், அதே ஏடு தலித் தலைவர் மாயாவதியை மிகக் கேவலமாகக் கொச்சைப்படுத்தியதே. (அவரை சாதி இந்துவின் வைப்பாட்டியாக சித்தரித்தது) - அப்போது ரவிக்குமார் செருப்பைக் கழட்டி அடித்திருக்க வேண்டாமா? ஆனால், என்ன செய்தார்?

4. பெரியார் மீது சேற்றை வாரி இறைப்பவர்கள், மாயாவதியைக் கொச்சைப்படுத்திய வாசந்தியையும் 'இந்தியா டுடே'வையும் எதிர்க்க அஞ்சிப் பதுங்கிக் கொண்டார்கள். 'தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் பேரவை' சார்பாக ஒரு கண்டனத்தை எழுதி, அதை மற்ற பத்திரிகைகளுக்குகூட கொடுக்காமல், 'இந்தியா டுடே'வுக்கு மட்டும் அஞ்சலில் அனுப்பிவிட்டு அமைதி காத்தார்கள். 'புதிய கோடாங்கி', 'தாய்மண்', 'தலித்' என எந்த தலித் ஏடும் - இதை வெளியிட முன்வரவில்லையே! என்ன காரணம்? 'தலித் முரசு'தான் பேரவையின் கண்டனத்தை வெளியிட்டது.

5. 'தலித் முரசு' - அம்பேத்கர் காட்டிய பாதையில் இருந்து விலகிச் சென்றால், அது தவறு என்று சுட்டிக் காட்ட, முன்னணி தலித் அரசியல் இயக்கமான விடுதலைச் சிறுத்தைகளுக்கும், அதன் தலைவர் திருமாவளவனுக்கும், அதனுடைய கடைசித் தொண்டனுக்கும் - எல்லா உரிமையும் உண்டு. சரி எனில், அதைத் திருத்திக் கொள்கிற பக்குவமும் 'தலித் முரசு'க்கு உண்டு. 'தலித் முரசி'ன் பாதையை செப்பனிட்டுக் கொள்ள - நாம் ஒருபோதும் தயங்கவோ, வெட்கப்படவோ மாட்டோம். விடுதலைச் சிறுத்தைகளுக்கு மட்டுமல்ல; களத்தில் நிற்கும் எல்லா தலித் இயக்கங்களுக்கும் இது பொருந்தும்.

6. இத்தகைய திறந்த மனதுடன் இருப்பதால்தான், தவறு செய்பவர்கள் எந்த இயக்கத்தினராக இருந்தாலும், அதே உரிமையுடன் - அம்பேத்கர், பெரியார் பார்வையில் அணுகி சரி / தவறு என்று துணிச்சலுடன் நம்மால் சொல்ல முடிகிறது. ஒரு தலித் பத்திரிகை, ஜனநாயகத்தின் உண்மையான தூணாக விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் - நாம் இத்தகைய அணுகுமுறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தே வந்திருக்கிறோம்.

7. ஆனால், தனது தவறுகளை நியாயப்படுத்த, விடுதலைச் சிறுத்தைகளைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ரவிக்குமார் போன்ற அறிவு நாணயமற்றவர்களுக்கு, அந்த உரிமை கிடையாது. அக்கட்டுரையில், அறிவுஜீவிகள் பற்றி குறிப்பிட அம்பேத்கரை மேற்கோள் காட்டியிருக்கிறார் ரவிக்குமார். அதே அம்பேத்கர்தான் அறிவு ஜீவிகள் பற்றி சொல்லும்போது, Brahmins are prostituting their intelligence என்று குறிப்பிடுகிறார். இது, பார்ப்பனர்களுக்கு மட்டுமல்ல; 'பார்ப்பன தொங்கு சதை'களுக்கும் பொருந்தவே செய்கிறது. எனவே, இத்தகைய கீழறுப்பு வேலைகளில் ஈடுபடுவதை, ரவிக்குமார் இனியாவது நிறுத்தட்டும்.

8. ரவிக்குமாரின் உள்ளார்ந்த நோக்கம் என்னவாக இருக்கிறது? இந்துத்துவ 'தினமலரி'ன் இலக்கிய வடிவமான - 'காலச்சுவடு' பத்திரிகையில் ஆதவன் என்ற பெயரில் ஒளிந்து கொண்டு, ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கும் அவரை - அந்த இடத்தை அவருக்குத் தந்ததற்காக - தலித்துகள் எல்லாம் 'காலச்சுவடு'க்கு மலர்க்கிரீடம் சூட்ட வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கு, திருமாவளவனை துணைக்கு அழைக்கிறார். அவரைப் பயன்படுத்தி ஆதாயம் தேட முனைகிறார்.

9. இல்லையெனில், தலித் முரசில் 22 மாதங்கள் வெளிவந்த 'மால்கம் எக்ஸ்' தொடரை, நூலாக்கி விற்று லாபம் சம்பாதிக்க - 'காலச்சுவடு'தான் அதை வெளியிட வேண்டும் என்று அடம்பிடித்து இருக்க மாட்டார். எழுதுவதற்கு 'தலித் முரசு'; விற்று லாபம் ஈட்டுவதற்கு 'காலச்சுவடு'. இதுதான் இவர் முன்னிறுத்தும் தலித் அரசியல். வெட்கம், வெட்கம்.

அம்பேத்கர் கொள்கைகளை அடியொற்றி, தலித்துகளால் நடத்தப்படும் 'தலித் முரசு' ஏட்டுக்கு எதிராக அவர் முன்னிறுத்தும் ஏடுகள்: பார்ப்பன 'இந்தியா டுடே' மற்றும் 'காலச்சுவடு'. 'தாய்மண்' வெளியீடான 'அடங்க மறு' நூலுக்கும் விற்பனை உரிமை யாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? 'சுதர்சன் புக்ஸ்' - இதுவும் 'காலச்சுவடு' விற்பனை நிலையம் தான். சுந்தர ராமசாமியின் நூல்களை, கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு விற்கும் ஒரு 'ஏஜன்சி' அது.

10. இந்துத்துவத்தை எதிர்க்கும் திருமாவளவனை, ஒருபுறம் அவரைப் பாராட்டிக் கொண்டே, இந்துத்துவ வணிகத் திட்டத்திற்குள் இணைத்து அவரையும் அவரது இயக்கத்தையும் - நீர்த்துப் போகச் செய்யும் சதித் திட்டம் அல்லவா இது? 'பாலம்' அமைப்புக்கு எதிராக 'தினமலர்' நஞ்சைக் கக்கிய போதும், இவர் அமைதி காத்தது இந்த அடிப்படையில்தானே? 'தினமலரும்', 'காலச்சுவடும்' ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். எனவே, ரவிக்குமாரிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது, தோழர் திருமாவளவனும் அவரது இயக்கமும்தான்.

தனது அப்பட்டமான சுயநலன்களுக்காக, மிகப் பெரும் தலித் இயக்கமான விடுதலைச் சிறுத்தைகளை - பார்ப்பனச் சூழலுக்குள் சிக்க வைக்கும் ரவிக்குமாரின் அறிவு பயங்கரத்தை - 'தலித் முரசு' வன்மையாகக் கண்டிக்கிறது. 'தலித் முரசு' மீது அவதூறுகளைப் பரப்பி வரும் ரவிக்குமார், அதை உடனே நிறுத்திக் கொள்ள வேண்டுமென 'தலித் முரசு' எச்சரிக்கிறது.

- ஆசிரியர்



படிப்பகம்

# கொத்தடிமை முகாம்களாகும் சேரிகள்

■ அன்பு செல்வம்

தலித் மானுடத்தின் பூர்வீகத்தை அழிப்பதற்கு - கொத்தடிமை என்கிற பெயரில், எப்பொழுதோ தொடங்கப்பட்ட தலித் அழிப்பு நடவடிக்கை, இப்பொழுது சேரிகளைத் தீவிரமாக முற்றுகையிட்டு நிற்கிறது. சாதி - தீண்டாமையைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இது ஒரு உள்நாட்டுப் போர். இங்கே ராணுவ அணிவகுப்புகள்கிடையாது. வெடிகுண்டுகள், அரிவாள் என்கிற வன்கொடுமைகளை வெளிப்படையாகப் பார்க்க முடியாது. ஆனாலும், எந்தவித சலனமும் இன்றி, ஒப்பாரி ஓலமிடுவதற்குத் தெம்பு இல்லாமல் - ஓர்கறுப்பு மானுடம் மெல்ல செத்துக் கொண்டிருக்கிறது. சாகத் தெரியாமல் இழுபறி நிலையில் இருப்பவர்களின் இன்றைய செய்திதான் - கொத்தடிமை மீட்பு என்பது.



மீட்கப்பட்ட தரங்கம்பாடி, கேசவன் பாளையத்தைச் சேர்ந்த 19 தலித்துகளுடன் (கொத்தடிமைகளுடன்) தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்பின் செயல்பாட்டாளர்கள்

குழந்தைத் தொழிலாளராக இருந்தால், ஓராண்டுக்கு 5,000 ரூபாய்; குடும்பமாக இருந்தால், வெறும் 10,000 ரூபாய் என்கிற நிலையில் பேரம் பேசப்பட்டு, பிறகு அதிக விலைக்கு விற்கப்பட்டு - ஆண்டுக் கணக்கில் அடிமைகளாக வேலை செய்து, மீண்டும் தங்கள் சொந்த சேரிகளுக்கு அகதிகளாக அழைத்து வரப்பட்டு முகாம்களில் அடைக்கப்படும் நிகழ்ச்சிதான் - இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு மாத நிகழ்ச்சிகளைப் பார்த்தால், மிக அமைதியாக நடக்கும் ஒரு வரலாற்று அழிப்பு நடவடிக்கையின் வன்கொடுமை தெரியவரும்.

கேரள மாநிலத்தின் மலப்புரத்தில் உள்ள தாழமயிலம் பாறை கிராமத்தில், 6 தலித்குடும்பங்கள் (1 குழந்தை, 3 பெண்கள் உட்பட 19 பேர்) செங்கல் சூளைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு கூலி - கொடுக்காமல், குடியிருப்பு வசதியின்றி, பாலியல் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு, சித்ரவதைக்குள்ளாக்கப்பட்ட செய்தி கேட்டு - 'தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்'பின் சார்பில் ரவிச்சந்திரன், ச. கருப்பையா, சேகர் ஆகியோர் களத்தில் இறங்கி 5.3.2004 அன்று, அவர்களை மீட்டு தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள தங்கள் சொந்த கிராமமான கேசவன் பாளையத்தில் குடியமர்த்தியிருக்கின்றனர்.

அதே போல, திருவள்ளூர் மாவட்டத்தின் பொன்பாடி கிராமத்திலிருந்தும், அரக்கோணத்திற்கு அருகேயுள்ள வேடல் கிராமத்திலிருந்தும் கும்மிடிப் பூண்டி அரிசி ஆலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 6 குடும்பங்களை மீட்க - 'இருளர் முன்னேற்றச் சங்க'த்தின் தலைவர் நாகம்மாள் தலைமையில் ஒரு குழு சென்று 29.1.2004 அன்று மீட்டு வந்தது. வரலாறு நெடுகிலும் இதுபோன்ற மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து வந்தாலும், தலித்துகளை தங்கள் சொந்த கிராமங்களிலேயே அகதிகளாகக் குடியமர வைக்கப்படும் - கொத்தடிமை முகாம்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டேதான் இருக்கிறது.

இந்திய தண்டனைச் சட்டத்தின்படி, 1976இல் கொண்டு வரப்பட்ட 'கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்ட'த்தைக்கூட, அப்பழுக்கில்லாமல் நிறைவேற்ற அரசுக்கு இன்னமும் தயக்கம் இருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான், 1989 இல் எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டது. ஆனால், இதன் பிறகும் அனைத்து மாநிலங்களிலும் கொத்தடிமைத் தொழிலாளர்களின் வழக்குகள் தீர்க்கப்படாமல் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடந்தன.

உச்ச நீதிமன்றம் இது குறித்து விசாரிக்க, இரு நபர் கொண்ட குழுவை 6.3.95 இல் உருவாக்கியது. இக்குழு, தமிழகத்தில் 6 மாதம் தங்கியிருந்து 23 மாவட்டங்களில் 1500 கள ஆய்வுகளை மேற்கொண்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட 20 வகையான தொழில் செய்யக் கூடிய தொழிலாளர்களைக் கண்டுபிடித்து (இதில் 10% குழந்தைத் தொழிலாளர்கள்) கொடுத்த பிறகு, 1996இல் உச்ச நீதிமன்றம் 37 பரிந்துரைகளுடன் ஓர் அறிக்கையை வெளியிட்டு, மாநில அரசுகளை நோக்கி 8 வாரத்திற்குள் பதிலளிக்குமாறு ஆணையிட்டது.

மேற்கூறிய அத்தனை நடவடிக்கைகளும் கை கழுவி விடப்பட்டதாக இருந்தாலும், 1996களில் கொத்தடிமை மீட்பு என்பது மிக மும்முரமாக நடந்ததே ஒழிய, கடந்த 8 ஆண்டுகளில் கொத்தடிமை ஒழிப்புக்கும், மறுவாழ்வுக்கும் நீண்டகால செயல் திட்டத்தைச் செய்ய - எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

1950களில் 50 லட்சத்துக்கும் மேலாக இருந்த கொத்தடிமைகளின் எண்ணிக்கை, இன்று 25 லட்சம் குறைந்துள்ளதாக அரசு அறிவித்தாலும், கடந்த 50 ஆண்டுகளில் இதை ஒழிக்க அரசின் செயல் நடவடிக்கை என்ன? சிறுகச் சிறுக வாங்குகிற கடன் அதிகரித்து பெரிய கடனாகிற நிலைதான் -

www.padippakam.com

ஒரு தலித்தை கொத்தடிமையாக்குகிறது என்பது உண்மைதான். இருந்தாலும், கடந்த ஆண்டுகளில் தலித்துகள் வாங்கியிருக்கிற கடனைவிட அவர்களை மீட்க, மறு வாழ்வு கொடுக்க ஒதுக்கப்பட்ட தொகையை அவர்களிடம் கொடுத்திருந்தால்கூட, ஒரு தலித் வளர்ச்சி வங்கியை உருவாக்கியிருக்க முடியும். ஆனால், தலித்துகள் உள்ளூர் கடனில் இருந்து இன்னும் மீளவில்லை.

இந்தப் பிரச்சனை, கடன் என்கிற ஒன்றில் மட்டும் கிளைவிட்டு வளர்வதாக மட்டும் பார்க்க முடியாது. இதில், சாதி - தீண்டாமையின் கோர வடிவத்தையும் கிழித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. தலித்துகளின் உழைப்புச் சுரண்டலை மூலதனமாக வைத்து, உள்ளூரில் பணம் கொழிக்கும் ஆதிக்க சாதிகளின் அடாவடிப் பொருளாதாரமும் பலமாக வளர்ந்திருக்கிறது. இதை எப்படித் தடுப்பது என்பதில் நம்மிடம் தெளிவு இல்லை.

உலகமயமாதல், தனியார்மயம் மற்றும் கிராமங்களின் சேரி ஆக்கிரமிப்பு - உழைக்கும் பெண்களையும், தலித்துகளையும் மெல்ல வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. தலித்துகளின் இடப்பெயர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மார்ச், ஏப்ரலில் உள்ளூரில் இருந்து அடிமைகளாகப் புறப்படுவதும், சூலையில் அகதிகளாகத் திரும்புவதும் - ஒரு நெடுந் தொலைவு கனவுப் பயணமாக மலிந்து விட்டது.

கடன் சுமை ஒருபுறம் இருந்தாலும் ஆடு மாடுகளையும், வீட்டையும், நிலத்தையும் பறிகொடுத்துவிட்டு - இன்னொரு மாநிலம் சென்று திரும்பினாலும் பரவாயில்லை. பிணத்தைப் புதைப்பதற்கு வாரிசுகளைத் தேடலாம். போனவர்கள் திரும்பாமலே இருந்து விடுவதில் ஏக்கப் பெருமூச்சு விட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் - எஞ்சிய தலித்துகளுக்கு யார் விடுதலையாளராக வரப்போகிறார்கள்? அரசும், தன்னார்வக் குழுக்களும் செய்து வருகின்ற நடவடிக்கைகள் - குறைந்த பட்ச, கானல் தீர்வாகத்தான் இருக்கிறது.

ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் கொத்தடிமை ஒழிப்பு நடவடிக்கையை செயல்படுத்திய கிருத்துதாசு காந்தி அவர்களின் கருதுகோளை, இயக்கங்கள் கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக, நிலம் நோக்கிய போராட்டமும், அதற்கான செயல்திட்டமும் மிக முக்கியமாக தேவைப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் நிலம் பெறுவதற்காக, தலித்துகள் தொடங்கிய போராட்டம் அனைத்துமே கசப்பான தோல்வியைத்தான் தந்துள்ளது.



கிருத்துதாசு காந்தி

பஞ்சமி நிலமீட்புக்காகத் தொடங்கிய போராட்டத்தையும், உயிரிழப்பையும் கணக்கில் கொண்டு செய்த செலவுக்கு, ஆயிரம் ஏக்கர் நிலத்தை வாங்கியிருக்க முடியும். ஜான்தாமஸ், ஏழுமலையை இழந்தும்கூட, நம்மால் 50 ஏக்கர் நிலம் பெறமுடியவில்லை என்பதை உளப்பூர்வமாக ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும், கொத்தடிமைகளின் மறுவாழ்வுக்காக அரசை நோக்கி நிலம் பெற்றுத் தருவதற்கான தேவையை முன்வைத்துப் போராட வேண்டியுள்ளது.

கிராமங்களில் உள்ள தலித்துகளுக்கு நிலம் ஒரு வாழ்வுக் காப்பீடாக இருக்கிறது. 1986இல் கோடைமலையின் குண்டுப்பட்டியில் குடியமர்த்தப்பட்ட அனைத்து தலித்துகளுக்கும் - வீட்டுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுத்திருக்காவிட்டால், இன்றைக்கு 1 குடும்பத்தைக்கூட உயிரோடு பார்த்திருக்க முடியாது. நிலம் கொடுத்த பிறகும் குண்டுப்பட்டியில் உள்ள தலித்துகள், அந்த நிலத்தைக் காப்பாற்றுவதற்காக - தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைத்து வாழ வேண்டியிருப்பதை, 1996இல் நிகழ்த்தப்பட்ட வன்கொடுமையைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடிகிறது.

அரசைப் பொறுத்த வரையில், மீட்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு 20,000 ரூபாயை வழங்குவதோடு அவர்களின் பணி முடிந்து விடுகிறது. மறுவாழ்வு என்கிற அடுத்தகட்ட நடவடிக்கைக்குள் போனால், அதில் நடக்கின்ற ஊழலை விசாரிப்பதற்கென்றே, தனிக் குழு தேவைப்படுகிறது. காரணம், மறுவாழ்வு, மறுகுடியமர்வு குறித்து அரசிடம் தெளிவான திட்டம் இல்லை. இதை 1986இல் 'பந்துவா முக்தி மோர்ச்சா' தொடுத்த வழக்கு தெளிவுபடுத்துகிறது. மறுவாழ்வுப் பணிக்குள் செயல்படுத்த உள்ளூர் அளவில் குழுக்களை உருவாக்கி, அவர்களின் மூலம் சில செயல் திட்டங்களை வரையறை செய்ய வேண்டியுள்ளது.



**ஏப்ரலில் சேரிகளிலிருந்து அடிமைகளாகப் புறப்படுவதும், சூலையில் அகதிகளாகத் திரும்புவதும் - ஒரு நெடுந் தொலைவுக் கனவுப் பயணமாக மலிந்து விட்டது.**

கிராமங்களுக்குள் உள்ள பொது மூலாதாரங்களைக் கொண்டு - சிறு தொழில் தொடங்குவதற்கும், வங்கியில் கடன் பெறுவதற்கும், குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கும், தலித் இயக்கங்கள், பஞ்சாயத்து அமைப்புகள் உதவியோடு அந்தக் குழுக்கள் செயல்பட வேண்டியுள்ளது. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையில் முழு மாற்றம் தேவைப்படுகிறது. இதுதான் தலித்துகளின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வாகவும் இருக்க முடியும்.

'எய்ட்ஸ்' ஒழிப்பிற்காக ஆணுறையைப் பயன்படுத்த வேண்டும் என்ற பிரச்சாரத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நேரமும், முயற்சியும்கூட கடந்த 15 ஆண்டுகளில் கொத்தடிமை ஒழிப்புக்கு செலவழிக்கப்படவில்லை. எழுத்தாளர்களும், பத்திரிகைகளும் 'அயோத்தியில் ராமர் கோவில்' பிரச்சனைக்காக எழுதியதில் ஒரு விழுக்காடுகூட இது குறித்து எழுதவில்லை.

காவல் துறை நினைத்தால், கொத்தடிமை முறையை ஒழிக்க உதவ முடியும். ஆனால், இங்கே கொத்தடிமை புரிபவரும், காவல் துறையும் ஒரே சமூக அங்கீகார தளத்தில் இயங்குவதால், கொத்தடிமையை ஒழிப்பதில் காவல் துறையிடமும் ஏமாற்றம்தான் மிஞ்சியிருக்கிறது.

இந்தப் பிரச்சனையை தொடர்ந்து எடுத்துச் செல்ல - வலுவான மனித உரிமை அமைப்புகளும், இயக்கங்களும் தயாராகவில்லை. கொத்தடிமை முறையை ஒழிக்க, முழுமையான அரசியல் ஆற்றல் தேவைப்படுகிறது. தலித் விரும்பும் கொத்தடிமை ஒழிப்பு என்பது, ஒரு புதிய சமூக உணர்வைக் கட்டமைக்கும் விடுதலைப் பணி சார்ந்தது. இங்கே தலித் யாருக்கும் அடிமையாக இருக்க முடியாது; தலித்துகள் இன்னொரு அடிமையை உருவாக்க முடியாது என்கிற சமத்துவத்தைக் கட்டமைக்கும் போர்க்குணம் சார்ந்தது. அதனை தலித் இயக்கங்கள்தான் முன்னின்று, களம் கண்டு செய்ய முடியும். ●



படிப்பகம்

www.padippakam.com

# ஆட்சிக்கு யார் வரக்கூடாது

■ எழில். இளங்கோவன்

"இந்து ராஜ்ஜியம் என்பது, உண்மையில் நடைமுறைக்கு வருமேயானால், சந்தேகமின்றி இது, இந்நாட்டுக்கு ஏற்படப் போகும் மிகப் பெரிய ஆபத்தாகும். இந்துயிசம் என்பது - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு நேர்விரோதமானது. அந்த அடிப்படையில், இது ஜனநாயகத்திற்கு எதிரானது.

எப்பாடு பட்டாகிலும், இந்து ராஜ்ஜியம் தடுத்து நிறுத்தப்பட்டே ஆக வேண்டும்."

- டாக்டர் அம்பேத்கர்
'டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 8
பக்கம் : 358

பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான 'தேசிய ஜனநாயகக் கூட்டணி' 13.10.1999 அன்று அமைக்கப்பட்டது. இது, 4 ஆண்டுகள் 3 மாதங்கள் 25 நாட்களுடன் தனது அதிகாரப்பூர்வ ஆட்சியை முடித்துக் கொண்டது. தனது பதவிக் காலம் முடிய ஏறத்தாழ 7 மாதங்கள் இருக்கும் நிலையில், பா.ஜ.க. அரசு மக்களவையைக் கலைக்கப் பரிந்துரை செய்து விட்டது. 2003 டிசம்பர் 1 அன்று நடந்து முடிந்த டில்லி, சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்களில், டில்லியைத் தவிர ஏனைய மூன்று மாநிலங்களிலும் பா.ஜ.க., தனிப் பெரும்பான்மை வெற்றியில் ஆட்சியைப் பிடித்தது. எனவே, இதையே இந்தியாவின் ஒட்டுமொத்த தேர்தல் கருத்துக் கணிப்பாக அக்கட்சி எடைபோட்டுவிட்டது.

வடக்கே 'சாது'க்கள், 'சங்பரிவார்'கள் முதல் தெற்கே சங்கர மடம் வரையிலும் - எழுதப்படாத கூட்டணியாக ஒன்றிணைந்து, இந்து மதவாத சிந்தனைகள் மக்கள் மத்தியில் வெல்லும் என்றொரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன - பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளின் துணையுடன். இந்துத்துவாவை முன்னிறுத்தி வாக்குகளை அறுவடை செய்யும் பணியை கட்டுக் கோப்பாக செய்து கொண்டிருக்கின்றனர்.

பா.ஜ.க. மற்றும் சங்பரிவார்களின் இந்து மத வெறியை, இந்தியா முழுவதும் அரசியல் அரங்கில் எதிர்க்க - மதசார்பின்மையை முன்னிறுத்தி காங்கிரஸ் கட்சி, ஒரு வலுவான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை ஏற்படுத்தி உள்ளது. அகில இந்திய அளவில் கம்யூனிஸ்ட் கட்சிகளும், சோனியாவை வெளிநாட்டவர் என்று சொல்லிப் பிரிந்த சரத்பவார் உட்பட, பல்வேறு பலம்வாய்ந்த மாநிலக் கட்சிகளும் காங்கிரசுக்கு வலிமை சேர்த்துக் கொண்டிருக்கின்றன.

இந்திய அளவில் மத்தியில் அமையப் போகும் ஆட்சியில் - முக்கிய பங்கு வகிக்கும் மாநிலங்களில், உத்திரப் பிரதேசம் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மொத்த மக்களவைத் தொகுதிகள் 80. பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதியும், சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலாயம் சிங்கும் - உத்திரப் பிரதேசத்தில் வலிமை வாய்ந்த தலைவர்கள். சமாஜ்வாதி கட்சி தனித்துப் போட்டியிடப் போவதாக முன்பு கூறியிருந்தது. எனவே, மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி, காங்கிரசுடன் கூட்டணி அமைத்துவிடக் கூடாது என காய்களை நகர்த்தியது பா.ஜ.க. வணிகவளாக ஊழல் உட்படப் பல்வேறு விவகாரங்களிலும் சி.பி.அய். விசாரணையில் உள்ள மாயாவதி, காங்கிரசுடன் கூட்டணி சேராமல் இருந்தால், அவரது வழக்கில் அவருக்கு உதவுவதாக பா.ஜ.க. உறுதியளித்துள்ளதாக ஒரு செய்தி பரவலாக நம்பப்படுகிறது.

இந்நிலையில், மாநிலங்களவையில் முலாயம் சிங் அரசுக்கு காங்கிரஸ் ஆதரவு தருவதால், காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்று தடாலடியாக அறிவித்த மாயாவதி, 325 இடங்களில் தனித்துப் போட்டியிடுவதாக கோவையில் கூறிவிட்டார். அவரது கட்சி முதல் வேட்பாளர் பட்டியலில், 13 பேர்கள் தாகூர் மற்றும் பார்ப்பனர்கள்; 17 பேர்கள் இஸ்லாமியர்கள்; பிற்படுத்தப்பட்டவர்கள் 26 பேர்கள் இடம் பெற்றுள்ளனர். இது, முலாயம் சிங்கின் வாக்குகளைப் பிரிக்க மாயாவதியை பா.ஜ.க. பயன்படுத்துகிறது என்பதற்கு ஒரு சான்று.

அடுத்து, பீகாரில் லாலு பிரசாத் மற்றும் ராம்விலாஸ் பாஸ்வான் ஆகியோர் காங்கிரசுடன் ஒன்றிணைந்தது, பா.ஜ.க.வுக்கு பலத்த அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. தமிழகத்தில் வாஜ்பேயின் அமைச்சரவையில், மத்திய அமைச்சர்களாக அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகம், ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுமே, தேர்தல் மேகம் சூழத் தொடங்கியவுடன் பா.ஜ.க. அணியில் இருந்து வெளியேறிவிட்டன. காரணம், பா.ஜ.க.வின் தலைமைக்கும் அ.தி.மு.க. தலைமைக்கும் இருந்த 'இனமான நல்லுறவு' என்பதை அவை புரிந்து கொண்டன.


தற்பொழுது இவர்கள் பா.ஜ.க. ஆட்சி மத்தியில் அமைந்து விடக்கூடாது என்பதற்காக, ஒரு வலிமையான கூட்டணிக்குள் வந்துள்ளனர். காங்கிரஸ், தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் பலமான கூட்டணியை அமைத்து, அ.தி.மு.க.வை தனிமைப்படுத்தியுள்ளன. அதனால், இனமான உறவு அடிப்படையில் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உறுதியாகிவிட்டது.

இந்த இரண்டு கூட்டணிகள் அல்லாமல், விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர்

www.padippakam.com

திருமாவளவன், புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, மக்கள் தமிழ்த் தேசம் தலைவர் கண்ணப்பன் தலைமையில் மூன்றாவது அணியும் உருவாகியுள்ளது. இந்த அணியில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளர் ஜார்ஜ் பெர்னாடஸ் தலைமையிலான அய்க்கிய ஜனதாதளம் உட்பட, வீரவன்னியர் பேரவை போன்ற உதிரிகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் புதுவை உட்பட மக்களவைத் தொகுதிகள் மொத்தம் 40. தி.மு.க.வுக்கு 15, காங்கிரசுக்கு 10, பா.ம.க.வுக்கு 6, ம.தி.மு.க.வுக்கு 4, இந்திய கம்யூனிஸ்டுக்கு 2, மார்க்சிஸ்டுக்கு 2, முஸ்லிம் லீக்குக்கு 1 என்று தொகுதிகளைப் பிரித்துக் கொடுத்த கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகளுக்கும், புதிய தமிழகத்திற்கும் குறைந்தது ஒவ்வொரு தொகுதிகளையாவது கொடுத்திருக்க வேண்டும். மாறாக, பாட்டாளி மக்கள் கட்சியை அருகில் வைத்துக் கொண்டு, தலித் தலைமையிலான கட்சி



களை 'சாதிக் கட்சி' என்று அவர் பேசியது, வன்மையான கண்டனத்திற்குரியது.

தலித்துகளை தனித்த அரசியல் சக்தியாக அங்கீகரிக்காமல் புறக்கணித்து விட்ட நிலையில் - திருமாவளவனும், கிருஷ்ணசாமியும், தி.மு.க. கூட்டணிக்கு எதிராகக் களம் இறங்கி அணி அமைத்துள்ளார்கள். இது சரியா? இந்தியா முழுவதும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்து மதவெறி, மீண்டும் மத்தியில் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துவிடக் கூடாது என்பது மிக மிக முக்கியம். எனவே, அதற்கு எதிராக வலுவான கூட்டணியாக காங்கிரஸ் தலைமையிலான அணியின் துணையுடன்தான் அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்பது, எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

மேலும், சாதிக் கட்சிகளுக்கு இடமில்லை என்று கருணாநிதி சொன்னபோது ஆவேசம் அடைந்தார் திருமாவளவன். ஆனால், ''சாதிக் கட்சிகள் வாஜ்பேயி தலைமையை ஏற்றுக் கொண்டாலும், அவற்றுக்கு பாரதிய ஜனதா கூட்டணியில் இடமில்லை,'' என்று மல்லசமுத்திரத்தில் சனசரி 10 அன்று மாநில பா.ஜ.க. பொதுச் செயலாளர் எச். ராஜா, செய்தியாளர்களிடம் தெளிவாகச் சொல்லி விட்டார். அதே சனவரி 19 அன்று, ''கூட்டணி சேருமாறு பா.ஜ.க.வோ, அ.தி.மு.க.வோ அழைத்தால், அதைப் புறந்தள்ள மாட்டோம். சாதக பாதகங்களைப் பரிசீலிப்போம். மதவாத, அணி மதசார்பற்ற அணி என்பதெல்லாம் கிடையாது. எந்த வாய்ப்பை இழப்பதற்கும் நாங்கள் தயாராக இல்லை'' என்று சென்னையில் தோழர் திருமாவளவன் பேசியிருப்பது, நெருடலைத் தருகிறது.

அதைத் தொடர்ந்து, பிப்ரவரி 12 அன்று புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், மக்கள் தமிழ்த் தேசம் இணைந்து புதிய கூட்டணி உருவாகியது. 'இந்துத்துவ சக்திகளை எதிர்ப்போம்' என்று சென்னையில் பேசிய தோழர் திருமாவளவனுடன் டாக்டர் கிருஷ்ணசாமி இணைந்து, அடுத்த 4ஆவது நாளில் (16.2.2004) புது டில்லியில் பா.ஜ.க. தலைவர் வெங்கையா (நாயுடு) மற்றும் பா.ஜ.க.வின் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசர் ஆகியோரைச் சந்தித்துள்ளனர்.

பிப்ரவரி 26 அன்று தோழர் திருமாவளவன் சொன்னது போல, சேலம் விடுதலைச் சிறுத்தைகளின் மாநாட்டில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார். அவர் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அமைப்பாளர். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, மூன்றாவது அணியின் ஒவ்வொரு அசைவும் - இந்துத்துவாவுக்கு எதிராக அல்லாமல், காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை பலவீனப்படுத்தி, அது பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணிக்கே சாதகமாக அமைந்துவிடும் என்பதையும் கவனிக்க வேண்டும். உத்திரப் பிரதேசத்தில் முலாயம் சிங்கை பலவீனப்படுத்த, மாயாவதி மூலம் இதே அணுகுமுறையை பா.ஜ.க. கையாள்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தகுந்தது.

மேலும், இந்த 3 ஆவது அணியை முழுமையான தலித் கூட்டணி என்று சொல்ல முடியுமா? பா.ஜ.க.வுடன் இணைந்து நிற்கும் அய்க்கிய ஜனதா தளம், மக்கள் தமிழ்த் தேசம், வீரவன்னியர் பேரவை போன்ற கட்சிகள் - தலித் மக்களுக்கு எதிரானவையே. தலித்துகளில் முக்கிய பிரிவான 60 லட்சம் பேர் உள்ள அருந்ததியர்களுக்கு - இந்த அணியில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. 'அருந்ததியர் கூட்டமைப்பு' என்ற இல்லாத ஒரு கூட்டமைப்பின் பெயரால், பொள்ளாச்சி தொகுதியில் ஓர் அருந்ததியர் நிறுத்தப்பட்டாலும், அருந்ததியருக்கான பிரதிநிதித்துவமாக அதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, இந்த 3 ஆவது கூட்டணியை தலித் கூட்டணியாகக் கருதுவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு.

இந்த நிலையில், அமையவிருக்கும் 14 ஆவது மக்களவை அரசுக்கான தேர்தலில் - யார் வெற்றி பெற வேண்டும் என்பதைவிட, யார் வெற்றி பெறக்கூடாது என்பதுதான் மிக முக்கியம். இன்னும் சொல்லப் போனால, இந்துத்துவ பாசிச மதவெறி சக்திகள் வெற்றி பெற்றுவிடக் கூடாது. இதில் தலித்துகள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். என்ன காரணம்?

இந்து மத வெறியர்களும், பார்ப்பன சாதியவாதிகளும் - தலித்துகளை இந்துக்கள் என்று கூறி வருகிறார்கள். உண்மையில், தலித்துகள் இந்துக்கள் அல்ல. இந்தியாவில் 3 சதவிகிதம் உள்ள பார்ப்பனர்கள் இந்துக்கள் என்ற போர்வையில், தங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் காட்டி - இந்தியாவை 'இந்து' நாடாக்க முயலுகின்றனர். இந்திய மக்கள் தொகையில் 25 சதவிகிதம் தலித்துகள், கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், பவுத்தர், சமணர், மலையின மக்கள் என்று இவர்கள் இந்து கூடாரத்தில் இல்லாத நிலையில், பார்ப்பனர்கள் நம்பிக்கை கொண்டிருப்பது - தலித்துகளையும் பிற்படுத்தப்பட்டவர்களையும்தான்.

தலித்துகளை இந்துகள் என்று அழைக்கும் மதவெறிக் கூட்டம், அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுப்பதற்கு மட்டும் தயாராக இல்லை. கோயில் கருவறை இருக்கட்டும், குறைந்த பட்சம் கோயில் வாசலுக்குக்கூட போக இன்னமும் முடியவில்லை - கிராமப்புற தலித்துகளால். தலித்துகளின் கல்வி வளர்ச்சியை நசுக்குவதற்காக, பள்ளிகள் குறைக்கப்படுகின்றன. போதை வஸ்துகளை தலித்துகளிடையே ஊக்கப்படுத்த வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டுச் செயல்படுகிறது. பார்ப்பன அடிமைகளாக தலித்துகளை நிலைப்படுத்தவே 'இந்துத்துவா' முழக்கம் முன்வைக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சாமியைப் பார்த்து மயங்கி பார்ப்பன அடிமையான பின்னர், அதன் தொடர்ச்சி மீண்டும் ஒரு குலக்கல்விச் சமுதாயத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். அதற்கான வழியில் பாடத் திட்டங்களை மாற்றி அமைத்து வரலாறை திசைதிருப்புகிறார்கள். நாளை அரசியல் வரலாறும் மாறும்; அரசியல் சட்டமும் கூட மாற்றப்படும். டாக்டர் அம்பேத்கர், பெரியார், முயற்சியினால் ஓரளவாவது மனிதர்களாக இருக்கும் தலித்துகளின் நாளைய சந்ததியினர் - பார்ப்பன அடிமைகளாக, மீண்டும் 'இந்து' வட்டத்திற்குள் போய் சிக்கி விடக்கூடாது என்பதனால் தான், இன்றே இந்துத்துவ பாசிசசக்திகளை தலைதூக்கி விடாமல் செய்ய - இந்தத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டியது - நம்முடைய தலையாய கடமையாகிறது.



வாஜ்பேயி, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி போன்ற பா.ஜ.க.வின் முன்னணித்தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ்.இன் பிரதிபிம்பங்கள். ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ இந்துப் பரிசத், பஜ்ரங்தள் ஆகியவை சங் பரிவாரின் கிளைகள். சங் பரிவாரின் அரசியல் பிரிவு பாரதிய ஜனதாகட்சி. இது ஆர்.எஸ்.எஸ்.இன் மறுபதிப்பு. ஆர்.எஸ்.எஸ்.இன் உறுப்பினரும், துணைப் பிரதமருமான அத்வானி சொல்கிறார்: ''ராமராஜ்யம் என்பது, நல்லாட்சியின் அடையாளச் சின்னம். எனவே, எங்களால் ராமரை எப்போதும் மறக்கவே முடியாது.'' (மார்ச் 16 அன்று சோலாப்பூரில்)

விஷ்வ இந்து பரிசத் பொதுச்செயலாளர் பிரவீன் தொகாடியா; ''அயோத்தியில் ராமர் கோயில் கட்டுபவரே அடுத்த பிரதமராக வர வேண்டும்.'' (பெங்களூரில் - டிசம்பர் 13) பா.ஜ.க. அரசின் மத்திய அமைச்சர் சு. திருநாவுக்கரசர் திருவாய் மொழி இது: ''மன்னர்களின் தலைநகரமாக இருந்த காஞ்சிபுரம், தற்போது இந்து மக்களின் தலைநகரமாக விளங்குகிறது. (சென்னையில் - மார்ச் 13 ஆம் நாள்) இப்படிப்பட்ட இந்துத்துவா சக்திகள், நாட்டு மக்களுக்கு பிரதமராக அடையாளம் காட்டுவது, வாஜ்பேயியை.

பிரதமர் வாஜ்பேயி இல்லத்திலேயே, தேர்தல் உத்தி குறித்து ஒரு மணி நேரம் ஆலோசனை நடந்திருக்கிறது. இதில் கலந்து கொண்டவர்கள் அத்வானி, வெங்கையா (நாயுடு), சஞ்சை ஜோஷி, ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்களான மோகன் பகவத், எச்.ஒய். சேஷாத்ரி, பாய்ஜி ஜோஷி, மதன் தாஸ் ஜோஷி ஆகியவர்கள். இவர்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் தொடர்புள்ள விஷ்வஇந்து பரிஷத், பஜ்ரங்தள், துர்கா வாஹினி, பாரதிய மஸ்தூர் சங், பாரதிய வித்யார்த்தி பரிஷத் ஆகிய அமைப்புகளை ஒருங்கிணைத்து, இத்தேர்தலில் செயல்படுவது குறித்து விவாதித்துள்ளனர். ('தினமணி' - மார்ச் 6)

அதுமட்டுமல்ல, நீதிமன்ற தீர்ப்புக்குக்கூட காத்திருக்காமல், அயோத்தி பிரச்சனையில் காஞ்சி சங்கராச்சாரியின் தலையீடு, குஜராத் படுகொலையை நியாயப் படுத்துவது, வரலாற்றுப் பாடங்களில் இந்துத்துவாவுக்கு ஆதரவான பாடங்களை மாற்றி அமைப்பது, பசுவதைத்தடுப்புச்சட்டம், மதமாற்றத் தடுப்புச் சட்டம், ஆடு, கோழி பலியிடும் கிராமிய பண்பாட்டுக்கு எதிரான தடைச் சட்டம் போன்ற இவைகளுக்கெல்லாமல் பின்னணியில் இருப்பது - 'இந்து' ராமராஜ்ஜியம்'.

**இந்துத்துவ மதவாத சக்திகளை வீழ்த்த, தலித் - தலித் அல்லாதவர்; முஸ்லிம் - முஸ்லிம் அல்லாதவர்; கிறித்துவர் - கிறித்துவர் அல்லாதவர் கட்சி, பிறகட்சி என்ற பாகுபாடு இல்லாமல், மதவாதம் தலைதூக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வியுடனேயே - மதவாதத்திற்கு எதிரான அணியை ஆதரிக்க வேண்டியது, மிகவும் அவசியம்.**

இவைகளை எல்லாம் உள்ளடக்கமாகக் கொண்ட பா.ஜ.க., தமிழ் நாட்டில் முதன் முதலாக 1998 ஆம் ஆண்டு அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து, 5 இடங்களில் போட்டியிட்டு 3 இடங்களில் வெற்றி பெற்றது. 99 இல் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து 4 இடங்களில் வென்றது. மீண்டும், பா.ஜ.க.வை தமிழ் நாட்டில் வித்திட்டு வளர்த்த அதே ஜெயலலிதா கட்சியும், இப்பொழுது ஒன்று சேர்ந்து தேர்தலைச் சந்திக்கிறது.

தமிழகத்தில் 7 தொகுதிகளில் போட்டியிடும் பா.ஜ.க.வை தர்மபுரி - சிதம்பரம் - புதுவையில் பா.ம.க.வும்; வட சென்னையில் தி.மு.க.வும்; நீலகிரியில் காங்கிரசும்; நாகர் கோயிலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டும்; கோவையில் இந்திய கம்யூனிஸ்டும் எதிர்க்கிறது. இவர்களை மட்டுமே தோற்கடிப்பது என்றில்லாமல், 40 தொகுதிகளிலும் பா.ஜ.க. கூட்டணியைத் தோற்கடிப்பதே நமது தலையாய கடமையாகும்.

சிதம்பரம் தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர் 'தடா' பெரிய சாமி - அட்டவணைப்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்தான். தமிழகத்தின் 40 தொகுதிகளில் ஒரேயொரு அருந்ததியருக்குதான் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (பொள்ளாச்சியில் அ.தி.மு.க. வேட்பாளர் முருகன் - அருந்ததியர்.) இந்த இருவரும் தலித்துகள்தான் என்றாலும், இங்கே இவர்களை தலித்துகளாய் பார்ப்பதைவிட, இந்துத்துவ சக்திகளுக்கு விலைபோனவர்களாகக் கருதி, இவர்களையும் தோற்கடிப்பதே சரியான அணுகுமுறையாகும்.

கடந்த ஆண்டில் நடந்த மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர், ராஜஸ்தான் சட்ட மன்றத் தேர்தலின்போது, பா.ஜ.க.வுக்கு எதிரான பகுஜன் கட்சி, சமாஜ்வாதி உட்பட மாநிலக் கட்சிகளும், சுயேச்சைகளும் தனித்தனியாகப் போட்டியிட்டதால், மதவாதத்திற்கு எதிரான வாக்குகள் சிதறி, பா.ஜ.க. வெற்றி பெற்றதாக பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் லாலு பிரசாத் கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் 3 ஆவது அணிக்கு அளிக்கப்படும் வாக்குகளும், இதே தன்மையில்தான் அமைந்துவிடும். கருத்து வேறுபாடுகளை நாம், சட்டமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தினால்தான் சரியாக இருக்கும். தேசிய அளவில் நடைபெறும் தேர்தலில், பா.ஜ.க.வை எதிர்க்க வலிமையான அணி தேவைப்படுகிறது. 'பா.ஜ.க.வை வீழ்த்த பெரிய கட்சியான காங்கிரசையே ஆதரிக்க வேண்டும்' என்று சென்னையில் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் சொன்னது போல, இந்தத் தேர்தலில் இந்துத்துவ மதவாத சக்திகளை வீழ்த்த, தலித் - தலித் அல்லாதவர், முஸ்லிம் - முஸ்லிம் அல்லாதவர்; கிறித்துவர் - கிறித்துவர் அல்லாதவர்கள் கட்சி, பிறகட்சி என்ற பாகுபாடு இல்லாமல், மதவாதம் தலைதூக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வியுடனேயே - மதவாதத்திற்கு எதிரான அணியை ஆதரிக்க வேண்டியது, மிகவும் அவசியம்.



படிப்பகம்

www.padippakam.com

# வி.எம். தார்குண்டெ

(3.7.1909 - 21.3.2004)



இந்தியாவில் தளர்ச்சியோ, தொய்வோ இல்லாது - மிக நீண்ட காலம் மனித உரிமைக் களத்தில் போராடி வந்தவர், வித்தல் மகாதேவ் தார்குண்டெ. 1960களில் மும்பை உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி வந்த அவர், எம்.என்.ராய் நிறுவிய *Radical Humanist* இயக்கத்தில் - முழுநேரப் பணியாற்றுவதற்காகப் பதவியைத் துறந்தார்.

*1947*க்கு முன்பு இந்திய தேசிய இயக்கத்தோடும், எம்.என்.ராயுடனும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்த தார்குண்டெ, ராயின் மறைவிற்குப் பிறகு, அவர் தொடங்கிய *Radical Humanist* ஆங்கில ஏட்டினை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டு, தமது இறுதிநாள் வரை அதனுடைய கவுரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

*1936* இல் ஜவகர்லால் நேருவால் தொடங்கப்பட்ட நவீன இந்தியாவின் முதல் மனித உரிமைகள் அமைப்பான 'இந்திய சிவில் உரிமை சங்க'த்துடன் *(ICLU)* ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டிருந்த தார்குண்டெ, 1975 இல் இந்திரா காந்தி திணித்த அவசர நிலைக்கு எதிராகத் துணிச்சலுடன் போராடினார். ஜெயப்பிரகாஷ் நாராயணும், ஆச்சாரிய கிருபளானியும் உருவாக்கிய *PUCLDR*, 'ஜனநாயகத்துக்கான குடிமக்கள்' என்ற அமைப்புகளில் பெரும் பங்காற்றினார். *1980* இல் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தை நிறுவி, அதன் தலைவராக இருமுறை பணியாற்றினார்.

இந்தியாவின் தலைசிறந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அறிவாளிகள், வழக்கறிஞர்கள், சமுதாயத் தொண்டர்கள் ஆகியோரைத் தமது அமைப்புக்கு ஒன்று திரட்டினார். தேசிய, சர்வதேச விருதுகள் பலவற்றைப் பெற்ற அவர், பரந்த வீச்சுடைய மனித உரிமை பார்வை கொண்டிருந்தார். பழுத்த நாத்திகரான தார்குண்டெ - தலித், பிற்படுத்தப்பட்ட மக்களின் உறுதியான நட்பு சக்தியாக விளங்கி, பார்ப்பனியத்திற்கும் இந்துத்துவத்திற்கும் எதிரான போர்க் கொடியை உயர்த்தி வந்தார்.

தாராளவாதத்தின் மிகச் சிறந்த கூறுகளே அவரிடம் மேலோங்கி இருந்ததால், அதன் பலவீனங்கள் அவரது நிறைவான, பொருள் செறிந்த வாழ்க்கையை சிறிதும் பாதித்ததில்லை. •

- எஸ்.வி.ராஜதுரை

---


தலித் இயக்கமும் 'பாலம்' அமைப்பும் இணைந்து நடத்தும்

யு.ஜி.சி. தேர்வுக்கான பயிற்சி வகுப்பு

தேர்வு நாள் - 20.6.2004

- கல்வித் தகுதி - எம்.ஏ., எம்.எஸ்.சி. முதலாமாண்டு 55 சதவிகிதம் தேர்ச்சி
- பயிற்சி வகுப்பு தொடக்கம் : ஏப்ரல் 3 ஆம் வாரத்திலிருந்து
- பயிற்சி நடக்குமிடம் : சென்னை, கோவை
- தங்களுடைய மாவட்டங்களில் தேவையெனில், உடனே தெரிவிக்கவும்
- பதிவுக்கான கடைசி நாள் : ஏப்ரல் 20, 2004

முகவரி :

34, கண்ணபிரான் தெரு
பழைய பல்லாவரம்
சென்னை - 43

ஜெ.பி.கலைவாணர் கூரை
81/5, பல்லடம் சாலை
பொள்ளாச்சி - 2
பேசி : 09894034005




## டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

14.4.2004 - புதன்கிழமை

அண்ணலின் *114* ஆவது பிறந்த நாளை, ஏப்ரல் *14* அன்று காலை *10.00* மணிக்கு மத்திய, மாநில அரசுத் துறைப் பணியாளர்களும், மத்திய, மாநில அரசு சார் நிறுவனப் பணியாளர்களும் - அடையாறு அம்பேத்கர் மணிமண்டபத்தில் கூடி ஒற்றுமைத் திரட்டாகக் கொண்டாட முடிவு செய்துள்ளன.

அண்ணலின் அறிவுவழி வந்தவர்கள் என்பதைக் காட்டும் வகையில், அன்று மலர்மாலைகளுக்கு மாற்றாகப் புத்தகங்களை அண்ணலுக்குப் படைப்போம். அண்ணல் பிறந்த நாளுக்கு வருகை தரும் நாம் புலப்படுத்துவது என்ன? நானும் ஆளுமை படைத்தவன் என்ற உணர்வைப் பறைசாற்றுவோம். விழிப்புற்றுள்ளோம்; தகைமை பெற்றுள்ளோம். இனி தளைப்பட்டவர் அல்ல என்ற தன்னிலை விளக்கம் பெற்றவர்களின் கூட்டுவலிமையைக் காட்டுவோம். எச்சமிச்சங்களை இறைஞ்சுபவராக இல்லாமல், பங்குதாரராய் நமது உரிமைக்குக் குரல் கொடுப்போம்.

அனைவரும் திரண்டு வாரீர்

விழாக்குழு :


ரா. கிருத்துதாசு காந்தி, ஜி.ஏ. ராஜ்குமார், வி. கருப்பன், ஈ. தருமர், ஜே. செங்குட்டுவன், ரா. தயாளன், ஜி. அரவிந்தன், ஏ. சிவாஜி, எம். கணேசன், ஈ. ஏகாம்பரம்



படிப்பகம்

www.padippakam.com

■ கவுதம சன்னா



காரல் மார்க்ஸ்

# அதிகார வலை - I

## தலித் அரசியலின் எதிர்காலம் - 10

அரசியல் விடுதலை என்பது அரசைக் கைப்பற்றி, தனதாக்கிக் கொள்ளும் நிகழ்வுப் போக்கில் ஒன்று என்பது, அரசியல் பற்றி அறிந்துள்ளவர்களுக்கு பாலபாடம். இது, பாலபாடம்தான் என்றாலும் நடைமுறையில் சாதிக்க, அந்தப் பருவத்திலேயே நடந்து முடிந்து விடுவதில்லை. பெரும்பாலும் வயதுபோன பிறகும் முடிவதில்லை என்பது உண்மை.

அப்படியே நடந்தாலும், அதாவது அரசைக் கைப்பற்றி விட்டாலும், தம்முடைய அதிகாரத்தை முழுமையாக செலுத்திவிட முடியும் என்பதற்கோ, தம்முடைய திட்டங்கள் எளிதில் நிறைவேறி விடும் என்பதற்கோ, எந்த உத்திரவாதமும் இல்லை. ஆனால், இப்பிரச்சினையை சரியாகப் புரிந்து கொண்டால், ஆச்சரியத்தைவிட அதிர்ச்சியே மேலோங்கும். பிறகு பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு முயற்சிகள் பிறக்கும். எனில், தலித் அரசியலுக்கு இது என்ன பரிமாணத்தை வழங்கும். அது, தேங்கிச்சுழல்வதற்கு இதில் எப்படி காரணத்தைத் தேட முடியும்?

II

1871இல் பாரிசில் நடைபெற்ற தொழிலாளர் புரட்சிக்குப் பிறகு உலகின் முதல் தொழிலாளர் அரசு அமைக்கப்பட்டு 'பாரிஸ் கம்யூன்' உருவானது. பொதுவுடைமை இயக்கத்தினர் இன்றும் பெருமைப்பட்டுக் கொள்ளும் இப்புரட்சியை கார்ல் மார்க்ஸ் எச்சரித்தார். பாரிசில் நடைபெறும் அப்புரட்சி ஒரு முதிர்ச்சியற்ற புரட்சி என்றும், சமுதாய நிலவரங்கள் தேவையான வளர்ச்சியைப் பெறாமலேயே புரட்சி உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதி எச்சரித்தார்.

பின்பு, அதன் மீதான எதிர் விமர்சனம் புரட்சியின் போக்கில் பலவீனத்தை உண்டாக்கி விடும் என்பதை உணர்ந்து அதை ஆதரித்தார். ஆனால், விதி வேலை செய்தது. மார்க்ஸ் எதிர்பார்த்தபடியே புரட்சியானது - கொடூரமாக ஒடுக்கப்பட்டு, புரட்சித் தலைவர்களும், புரட்சியாளர்களும் வேட்டையாடப்பட்டனர். புரட்சிகர அரசாங்கம் எழுபத்திரண்டு நாட்கள்மட்டுமே நீடித்து, வீழ்ந்து போனது.

புரட்சி அரசாங்கத்தின் தோல்வியை ஆராய்ந்து, மார்க்ஸ் முன்வைத்த காரணங்களில் ஒன்று - புரட்சிகர அரசாங்கம் அமைக்கப்பட்டாலும், நிர்வாக எந்திரத்தில் பழைய நபர்களே இருந்ததுடன், அந்த அதிகார வர்க்கத்தை அகற்றாதது - புரட்சி அரசின் தோல்விக்கு வழிவகுத்து விட்டது. ஏனெனில், அதிகார (எந்திர) வர்க்கத்தினர் பழைய சமூகத்தின் நீட்சியாகவே இருப்பதுடன், தங்களது அதிகாரத்தை அவர்கள் விடுவதில்லை என்று கருதினார்.

மார்க்சின் இந்த அவதானிப்புகளை, ரஷ்யாவின் நவம்பர் புரட்சிக்குப் பிறகு லெனின் புரிந்து கொண்டார். நவம்பர் புரட்சி முடிந்து சோவியத் அரசு அமைக்கப்பட்ட பிறகு, சோவியத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டது. அறிவிப்புகள் ஏராளமாக இருந்தாலும், அவற்றை மக்களிடையே செயல்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதம் எல்லாம் சேர்ந்து - புரட்சியை வேறு திசைக்கு இழுத்துச் சென்றதை உணர்ந்த லெனின், புரட்சியானது அதிகார வர்க்கத்தின் கைக்கு கை மாறுவதை உணர்ந்தார். பின்பு அவற்றைக் களைவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனின்றிப் போனதுடன், அவரது உடல் நலக் குறைவும் நிலைமையை மோசமாக்கிவிட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், அதிகார வர்க்க சர்வாதிகாரமாக மாறிப் போனது.



படிப்பகம்

www.padippakam.com

III

இந்த இரண்டு நிகழ்வுகளையும் சுட்டிக் காட்டிய அம்பேத்கர், இந்தியாவில் அதிகார வர்க்கத்தின் சிக்கலை ஆராய, இந்த வரலாற்று அனுபவங்களையே கவனத்தில் வைத்துக் கொண்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சாதி அமைப்பு முறையை ஒழித்துக்கட்டுவதற்குத் தடையாக இருந்த அமைப்புகளில், மிக முக்கியமானதாக அவர்களது அதிகார வர்க்கமே இருந்தது. அரசின் அனைத்து அதிகாரப் படிநிலைகளிலும் நீக்கமற நிறைந்திருந்த பார்ப்பனர்களைப் பகைத்துக் கொண்டு, எந்த சீர்திருத்தத்தையும் அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை. தொடர்ந்து, விடுதலைக்குப் பிறகு அந்த அதிகார வர்க்கத்திற்கு இசைவான காங்கிரஸ் அரசாங்கம், ஆட்சியில் அமர்ந்தவுடன் நிலைமை முன்னேறாமல் போனதில் வியப்பேதுமில்லை.

தமிழகத்தில், நீதிக் கட்சி ஆட்சியின் தோல்விக்கு அம்பேத்கர் கண்ட காரணங்களில் ஒன்று, அது அதிகார வர்க்கத்தில் பார்ப்பனர்களைக் குறைக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டார். மேலும், இக்கருத்தை உறுதி செய்யும் விதமாகத் தன்னுடைய அமைச்சரவையிலேயே அது ஒரு பார்ப்பனரை நியமித்துக் கொண்டது. அதனாலேயே அது விரைவாக சரிவைக் கண்டது.

IV

தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு சட்டசபையில் திட்ட வரவு-செலவு (Budget) அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, மிகப் பெரிய சர்ச்சை உண்டானது. பட்ஜெட் தொகையில் 97 சதவிகிதம் - ஊழியர்களுக்கான சம்பளமாக செலவு செய்யப்படுவதாகவும், மீதமுள்ள 3 சதவிகிதம் மட்டுமே திட்டச் செலவுகளுக்கு செலவழிக்கப்படுவதாகவும் முதல்வர் அறிவித்தார். அரசின் வருமானம், இப்படி ஊழியர்களின் ஊதியமாக செலவழிவதற்குக் காரணம் கருணாநிதிதான் என்று முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

கருணாநிதி, ஏற்கனவே மாநில அரசு ஊழியர்களின் சம்பளத்தை மத்திய அரசின் ஊழியர்களின் சம்பளத்துக்கு இணையாக உயர்த்தியதுதான் காரணம் என்று கூறப்பட்டது. கூடுதலாக, காவல் துறைக்கு ஏராளமான சலுகைகளும் வீட்டு வசதித் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. மக்களின் வரிப் பணத்தில் செயல்படும் ஓர் அரசு, அவர்களிடமிருந்து பெரும் பணத்தில் - வெறும் 3 சதவிகிதம் மட்டுமே அவர்களுக்கு செலவழித்து, மீதமுள்ள 97 சதவிகிதப் பணத்தை அவர்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் விந்தையை - எந்தத் தொழிற் சங்கமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

வாய் ஓயாமல் புரட்சி பேசும் இடதுசாரியினரும் அவர்களது தொழிற் சங்கமும்கூட, இந்த அவலத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அரசு ஊழியர்களின் ஒற்றுமையைப் பேணி அரசை நிலைகுலையச் செய்வதுடன், அரசை தமது கட்சிகள் கைப்பற்றிக் கொள்ள முடியும் என்ற அவர்களது கனவு, சமீப காலத்தில் கானலாகிப் போனது. போக்குவரத்துத் தொழிலாளர்கள் நடத்திய வேலை நிறுத்தம், ஜெயலலிதா அரசினால் கடுமையாக ஒடுக்கப்பட்டபோது, வேலையைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்களது சம்பளம் பறிபோனாலும் பாதகமில்லை என அரசின் காலடியில் போக்குவரத்துத் தொழிலாளர்களது சங்கங்கள் வீழ்ந்து, தங்களது வர்க்க நலனை - சம்பள நலனைக் காத்துக் கொண்டன.

அண்மையில் (2003), அரசு ஊழியர்கள் போராட்டம் இந்த வீழ்ச்சியின் உச்சம். ஒரு மாதமாக நீடித்த அவர்களது வேலை நிறுத்தத்திற்கான காரணங்களில் சம்பள உயர்வும் - போனஸ் தொகையை விட்டுக் கொடுக்க முடியாது என்பதைத் தவிர, பிரதானமாக எதுவுமில்லை. வெறும் சம்பள உயர்வுக்கான அவர்களது போராட்டம், 'எஸ்மா' - 'டெஸ்மா' என்று எதற்கும் பணிய மாட்டோம் என்ற அவர்களது வாய்வீச்சு - ஒரே ஒரு அரசாணை மூலம் காணாமல் போனது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களில் 1,79,000 பேர் இந்த ஆணை மூலம் பணி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன், வீரம் பேசிய தொழிற் சங்கங்கள் மீண்டும் வேலை தர வேண்டும் என்று கெஞ்சி மன்றாடிய அவலத்தை நாடு கண்டது.

பின்பு, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் 1,72,000 அரசு ஊழியர்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து பணியில் சேர்ந்த பிறகும், 6072 ஊழியர்கள் மீது முன்னணி வீரர்கள் (!) என்பதாக அரசு கருதி, நீதிபதிகளின் கருணைக்கு அனுப்பியது. நீதிபதிகளின் கருணையில் 999 பேர் தவிர மீதிப் பேர் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கண்ணீரும் கம்பலையுமாக தொழிலாளர்கள் வாழ்வைப் பறிகொடுத்தது போல அரற்றிய காட்சிகளை வைத்து, தொழிற் சங்கத்தினர் அறிக்கைகளை அடுக்கினார்கள்.

தேர்தலைக் கணக்கில் கொண்டு, இந்த 999 பேரை கருணை அடிப்படையில் ஜெயலலிதா அரசு மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொண்டது. அவர்களுக்கு சம்பள வெட்டு, ஊக்கத் தொகை வெட்டு, பதவி உயர்வு இல்லை என தண்டனைகள். போராடும் வீரர்களாக இருந்தவர்கள், புரணி பேசும் பயில்வான்களாகி உருமாறிப் போனார்கள்.

இப்படி அரசுத் தொழிலாளர்களின் வீழ்ச்சிக்கும், அவர்களுக்கு மக்கள் ஆதரவு இல்லாமல் போனதற்கும் காரணம் எளிமையானது. அரசு எந்திரம் மக்களை ஆள்வது மட்டுமல்ல, அது மக்களை உறிஞ்சும் அமைப்பு முறை. அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பது, மீண்டும் மக்கள் மீது வரியாக சுமத்தப்படுகிறது. இந்த சுழற்சி முறையில் பெரிதும் பாதிப்படைவது பெரும்பான்மை மக்கள்; பலனடைவதோ சிறுபான்மை அரசு ஊழியர்கள்.

ஒரு புரட்சிகர வர்க்கமாக அரசுத் தொழிலாளர்கள் மற்றும் அரசுத் துறை தொழிலாளர்கள் பரிணமிக்காமல் போனதற்கான காரணம், இவை மட்டுமல்ல. இந்தத் தொழிலாளர் அமைப்புகள் வெகு மக்களின் பிரச்சினைக்காக குரல் கொடுப்பதோ, அதற்காகப் போராட்டம் நடத்துவதோகூட இல்லை. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு ஆண்டும் ஏற்றப்படும் பேருந்து கட்டணத்தை எதிர்த்து - அத்துறை தொழிலாளர்களோ, கல்விக் கட்டண உயர்வைக் கண்டித்து ஆசிரியப் பெருமக்களோ - வரியேற்றத்தையும் இன்ன பிற நிதி சுமைகளை எதிர்த்து பெரும் ஊழியர்களோ, அதை முறியடிக்கும் அளவிற்கு இதுவரை போராடவில்லை. கடமைக்குச் சில அறிக்கைகளை வீசுவதோடு சரி. பல நேரங்களில் அதுவும் இல்லை.



பெரும்பான்மை மக்களின் நலனுக்குத் துளியும் போராடாமல், தங்கள் நலனுக்காக மட்டுமே போராடும்போது, வெகு மக்களின் ஆதரவு இல்லாததாலேயே - இந்த ஊழியர்களின் போராட்டம் தோல்வியைக் கவ்வியது. மேலும், இவ்வர்க்கத்திடம் புரையோடியிருக்கும் ஊழல், இவ்வர்க்கத்தின் மீது



படிப்பகம்

www.padippakam.com



**“அதிகார மய்யத்தையும் அரசையும் கைப்பற்றினால் மட்டும் போதாது. அதன் அதிகார வர்க்க அமைப்பையும் கைப்பற்றியாக வேண்டும்.”**

மக்களுக்கு இருந்த நம்பிக்கையை சிதைத்தது. இந்த ஊழலாலேயே இவ்வர்க்கம் போராடும் பலத்தையும் இழந்துவிட்டது.

தங்களது சம்பளத்தை சேமிப்புகளிலும், மிகை செலவுகளிலும் செலுத்திவிட்டு, அன்றாட செலவுகளுக்கு 'கிம்பளத்தை' நம்பி வாழும் பெரும்பான்மை ஊழியர்களுக்கு - ஒரு மாத கால வேலை நிறுத்தம், பெரும் நெருக்கடியை உண்டாக்கியது. எனவே, அவர்கள் போனஸ் தொகையைவிட வேலையை சீக்கிரம் தொடங்குவதிலேயே குறியாக இருந்தனர். இதனால் உண்டான மனநிலையும் தோல்வி விரைவாய் அவர்களை வந்தடையச் செய்தது. வெகுமக்களின் நலனைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத அவர்களிடம் மிதமிஞ்சி இருப்பது, நடுத்தர வர்க்க மனோபாவம் ஆகும். இது, அவர்களது வேலை முறையினாலேயே வந்தது. மேல் அதிகார அடுக்குமுறையின் படிநிலைகளில், ஒன்றையொன்று சீரழித்துக் கொள்ளும் முறையின் உளவியல் வெளிப்பாடு இது. 'குமஸ்தா குணம்' - ஒரு போரிடும் வர்க்க குணமல்ல.

பொதுவாக, அதிகார வர்க்கம் என்பது, 'முடிவுகளை எடுக்கும்' படிநிலையை மட்டும் குறிக்கப் பயன்படுகிறது. இதிலிருந்து தனியாகப் பிரித்து அரசு ஊழியர்கள் பார்க்கப்படுகின்றனர். ஆனால், மக்களிடம் பெருந்தொடர்பு வைத்திருப்பது மேற்படி அதிகார மய்யமல்ல. அதன் அதிகாரம் காகிதத்தின் வழிதான்; நடைமுறை சாத்தியமெல்லாம் அரசு ஊழியர் என்போரிடம்தான். அதிகார வர்க்க வலைப் பின்னலில் அவர்களும் ஓர் அங்கம். பிரிக்க முடியாத பிணைப்புகள் இவை. எனினும், ஒரு வர்க்கமாக, இந்த வர்க்கம் தோல்வி கண்ட வர்க்கமாக, மக்களுக்கு அந்நியமான வர்க்கமாக இன்று நிலவுகிறது. இந்த வீழ்ச்சி, இன்று நிகழ்ந்ததல்ல. இது, ஒரு நெடும் பயணத்தின் முடிவு.

இந்த உண்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத, தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தை முதன்மைப்படுத்தும் இடது சாரி தொழிற்சங்கங்கள், சம்பள உயர்வு முழக்கத்தில் சிக்கி, ஓயாமல் அரசு ஊழியர்களின் பின்னால் சுற்றியதன் மூலம், அணி திரட்டப்படாமல் சிதறிக் கிடக்கும் பெரும்பான்மை தொழிலாளர் அணி திரட்டலைக் கோட்டை விட்டது. இப்படி தவறான நம்பிக்கைகளில் திரிந்த இடதுசாரி தொழிற் சங்கங்கள், இன்று பலமிழந்து போனதன் மூலம் - அது சார்ந்த தங்களது கட்சிகளின் பலத்தையும் ஆழக் குழிதோண்டி புதைத்துள்ளது. அதன் பரிதாபமான வெளிப்பாடுதான், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்த உரிமை கோரி (21.3.2004) நடந்த ஒரு நாள் அடையாளப் போராட்டம். இனி, போராட்டம் என்பது அரசு மற்றும் தொழிலாளர் சங்கங்களைப் பொருத்தவரையில், ஒரு அடையாளமாகவே மாறிப்போனால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

V

இந்தப் பழைய காட்சிகள் இன்று நமக்கு உணர்த்துவது, விடுதலையை வென்றெடுக்க முயலும் எந்தவொரு அமைப்பிற்கும் மக்களுக்கும் - இது வழிகாட்டுவது என்ன? அதிகார மய்யத்தையும் அரசையும் கைப்பற்றினால் மட்டும் போதாது. அதன் அதிகார வர்க்க அமைப்பையும் கைப்பற்றியாக வேண்டும். ஏனெனில், அதிகார வர்க்க அமைப்பு அதனை வழிநடத்தியவர்களுக்கு ஏற்றபடி வடிவமைக்கப்பட்டது மட்டுமல்ல; அது தனக்கென தனித்த பண்பையும் பெற்றிருக்கிறது.

அதனால்தான் அதிகார அமைப்பில் நிரவியுள்ள ஆதிக்க வர்க்கம், சாதி எதுவானாலும் அதை ஒழிக்காமல் எதையும் சாதிக்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டுதான் அதிகார வர்க்க அமைப்பில் தலித்துகளைப் பங்கெடுக்கச் செய்வதன் மூலம் - அவ்வமைப்பில் நெகிழ்ச்சியை உருவாக்க முடியும். அதன் மூலம் மக்களின் விடுதலைக்குப் பயன்படும் விதத்தில் அதைப் பிறகு மாற்றிக் கொள்ள முடியும் என தலித் தலைவர்கள் எண்ணினார்கள். இதற்கான மெய்யியல் அடிப்படையை - அம்பேத்கர் அளித்த தோடு, அரசியல் சட்டத்தில் இதற்கான பாதுகாப்பையும் இட ஒதுக்கீடு அடிப்படையில் உறுதி செய்தார்.

ஆனால், இந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறியதா? அதிகார வலைப் பின்னலின் படிநிலைகளில் உறுப்புகளாக அமர்ந்த தலித்துகள், ஏதாவது மாற்றம் நிகழ்த்தினரா? இந்தச் சிக்கலில் உண்டான அனுபவங்கள், அம்பேத்கர் சுட்டிக்காட்டிய கூறுகள் - தலித் அரசியலுக்கு இன்னும் பாடமாகவில்லை. அதிகார வலை படிநிலை, அதனால் உண்டான உளவியல் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தாததால், தலித் அரசியலும் தனக்கான தேக்கத்தைத் தேடிக் கொண்டது. எப்படி? •

- பார்ப்போம்

## உரிமை விளக்கம்

(விதி 3 காண்க)

| | | |
|---|---|---|
| 1. இதழின் பெயர் | : | தலித் முரசு |
| 2. வெளியிடப்படும் காலம் | : | திங்களிதழ் |
| 3. வெளியிடுபவர் பெயர் | : | ஒய்.எஸ். ராஜ் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 30, விசாகத் தோட்டம் சைதாப்பேட்டை சென்னை - 600 015 |
| 4. வெளியிடப்படும் இடம் | : | 30, விசாகத் தோட்டம் சைதாப்பேட்டை சென்னை - 600 015 |
| 5. அச்சிடுபவர் பெயர் | : | ஒய்.எஸ். ராஜ் |
| இந்தியக் குடிமகனா | : | ஆம் |
| முகவரி | : | 46, விசாகத் தோட்டம் சைதாப்பேட்டை சென்னை - 600 015 |
| 6. அச்சகத்தின் பெயர் | : | அரிஜன முழக்கம் |
| 7. ஆசிரியர் பெயர் | : | புனித பாண்டியன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 203, ஜெயம் பிரிவு சித்ரா அடுக்ககம் சூளைமேடு நெடுஞ்சாலை சென்னை - 600 094 |
| 8. உரிமையாளர் | : | ஒய்.எஸ். ராஜ் |

மேற்கூறிய அனைத்துத் தகவல்களும் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

(ஒ-ம்) ஒய்.எஸ். ராஜ்
கையொப்பம்

www.padippakam.com

## மே தினத்தன்று வெளிவர இருக்கிறது

இந்திய வரலாறு, இந்திய மனம், இந்திய அரசியல் என அனைத்து வாழ்வுத் துறைகளிலும் 'பகவத் கீதை' வகித்து வரும் செல்வாக்கையும், நாட்டின் வளர்ச்சிக்கு அது எவ்வாறெல்லாம் தடையாக அமைகிறது என்பதையும் - விரிவாக ஆய்வு செய்யும் நூலாகிய

**பிரேம்நாத் பசாஸ்**

எழுதிய

# இந்திய வரலாற்றில் பகவத்கீதையின் பாத்திரம்

என்ற நூலை சூலூர் வெளியீடும், விடியல் பதிப்பகமும் இணைந்து வெளியிடுகிறோம்.

**960 பக்கங்கள், உயர்ந்த தாள், கெட்டி அட்டைக்கட்டு, விலை ரூ. 350/- முன்வெளியீட்டுத் திட்டத்தில், ரூ. 200/- க்கும் கிடைக்கும். தொகையை ஏப்ரல் 10க்குள் அனுப்ப வேண்டுகிறோம்.**

**சூலூர் வெளியீடு**
8, பால இல்லம்
நஞ்சப்பா குடியமைப்பு
சூலூர், கோயம்புத்தூர் - 641 402
தொலைபேசி : 0422 - 2681147

**விடியல் பதிப்பகம்**
11, பெரியார் நகர்
மசக்காளிபாளையம் (வடக்கு)
கோயம்புத்தூர் - 641 105
தொலைபேசி : 0422 - 2576772



## புரட்சியாளர் அம்பேத்கர் 114 ஆவது பிறந்த நாள் செய்தி

"சமூக ஆய்வாளர்கள், சமத்துவத்துக்கும் சமத்துவமின்மைக்கும் இடையில் உள்ள வேறு பாட்டைக் கவனிப்பதோடு நின்றுவிட்டார்கள். இந்த இரண்டும் தவிர, படிநிலைப் படுத்தப் பட்ட சமத்துவமின்மை என ஒன்று இருப்பதை எவரும் உணரவில்லை... சமத்துவமின்மை யால் பாதிக்கப்படுபவர்கள், ஒரு பொது எதிரியை எதிர்த்து, ஒரு பொதுவான தீமையை ஒழிக்கும் குறிக்கோளுடன் ஒன்று சேர்கிறார்கள்.

ஆனால், படிநிலைப் படுத்தப்பட்ட சமத்துவ மின்மையின் தன்மையும், அதனால் ஏற்படும் நிலைமையும் - இந்த இரண்டில் எதுவும் நடக்க இடமில்லாமல் செய்கின்றன. படிநிலைப் படுத் தப்பட்ட சமத்துவமின்மை முறை, அநீதியை எதிர்த்து பொதுவான அதிருப்தி ஏற்படாமல் தடுக்கிறது. எனவே, அது புரட்சிக்கு மய்யமாக உருவாக முடியாது.

இதனால் பாதிக்கப்படுபவர்களிடையே யும் சமத்துவமின்மை நிகழ்கிறது. இந்த முறை யின் நன்மைகளையும் தீமைகளையும் பெறு வதில் - அவர்களிடையே சமமான நிலை இல்லை. எனவே, இந்த முறையின் அநீதியை எதிர்த்து எல்லா வகுப்பினரும் பொதுவாக ஒன்று சேரும் வாய்ப்பில்லாமல் போகிறது."

*- டாக்டர் அம்பேத்கர்*

புரட்சியாளர் அம்பேத்கர் சுட்டிக் காட்டியபடி, பொது எதிரியை வீழ்த்த - ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் அனைவரும், அவருடைய 114 ஆவது பிறந்த நாளில் அணியமாக உறுதி ஏற்போம்.

**- ஆதித்தமிழர் பேரவை**

## அறிவாயுதம்

புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்துக் கருவூலங்கள் அடங்கிய, 17 தொகுப்பு நூல்கள் ஆங்கிலத்தில், மகாராட்டிர அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அதைப் போலவே, இந்திய அரசின் நல அமைச்சகம் - அம்பேத்கரின் நூல்களை, தமிழில் மொழி பெயர்த்து - இதுவரை 33 தொகுப்புகள் குறைந்த விலையில் வெளிவந்துள்ளன.


ஒடுக்கப்பட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், இயக்கங்கள், அம்பேத்கர் பெயரை மட்டுமே உச்சரித்துக் கொண்டிராமல், இயன்ற வரை அண்ணலின் நூல்களைப் படித்து - பிறருக்கும் பிரச்சாரம் செய்தல் அவசியம். இதுவே, நாம் அவருக்குச் செய்யும் உரிய மரியாதையாகும். இன்றே வாங்கிடுவீர்!

*கிடைக்குமிடம் : நியூ செஞ்சுரி புக் அவுஸ், 136, அண்ணா சாலை, சென்னை - 2*





•





விலை : ரூ. 400/-

*கிடைக்குமிடம் : கீழைக் காற்று, 10, அவுலியா சாகிப் தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2*

ஆங்கிலத்தில் அம்பேத்கர் எழுதிய அனைத்தும் - அம்பேத் கரின் நேர்காணல்கள், விவாதங்கள், அம்பேத்கரின் கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அவரின் அரியப் புகைப் படங்கள், அரசியல் நிர்ணய சபையில் அவர் ஆற்றிய உரை - ஒலி வடிவத்தில் வீடியோவில் அவரது முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# எது சாதியை ஒழிக்கும்?

■ டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

சமபந்தி விருந்தில் கலந்து கொள்ளாதவர்களையும் கலப்பு மணம் செய்யாதவர்களையும் - விமர்சிப்பதும் கேலிசெய்வதும் அல்லது எப்போதாவது சில சமயங்களில் சமபந்தி விருந்தை நடத்துவதும், கலப்பு மணவிழாவைக் கொண்டாடுவதும் வீண் வேலையாகும். சாஸ்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை அழித்தொழிப்பது தான் - சாதியை ஒழிக்கும் உண்மையான வழிமுறை. மக்களுடைய கருத்துகளும் நம்பிக்கைகளும் இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று வடிவமைக்கும் வேலையை, சாஸ்திரங்கள் இடைவிடாமல் செய்துவருகின்றன. இதை இனியும் நீங்கள் அனுமதித்துக் கொண்டிருந்தால், சாதியை ஒழிப்பதில் நீங்கள் எவ்விதம் வெற்றிபெற முடியும்?

சீர்திருத்தக்காரர்கள் பொதுவாக, சாஸ்திரங்களின் அதி காரத்தை எதிர்ப்பதில்லை. சாஸ்திரங்கள் புனிதமானவை; அடிப்படையான ஆதாரம் உடையவை என்று மக்களை நம்பும்படி விட்டுவிடுகின்றனர். அதே சமயத்தில் 'மக்களின் செயல்கள் பகுத்தறிவு இல்லாதவையாக இருக்கின்றன. மனிதத் தன்மையே இல்லாதவையாக இருக்கின்றன' என்று கூறி மக்களைக் கண்டிக்கின்றனர், விமர்சிக்கின்றனர். இது, சமூக சீர்திருத்தத்துக்கு ஒத்து வராத வழியாகும். மக்களின் செயல் கள் எல்லாம், சாஸ்திரங்கள் மக்களின் மனதிலே பதிய வைத் திருக்கும் நம்பிக்கைகளின் விளைவுகள்தான். எனவே, சாஸ் திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையைப் போக்கிக் கொள்ளாதவரை - மக்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. தீண்டாமையை ஒழிக்க நினைக் கிற 'மகாத்மா' காந்தி உள்ளிட்ட எந்த சீர்திருத்தக்காரர்களும் இதைப் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை.

சாஸ்திரங்கள் சொல்வதாக மக்கள் நம்புகிற கருத்து களை, உண்மையில் சாஸ்திரங்கள் சொல்லவே இல்லை என்று நீங்கள் ஆயிரம் விளக்கங்கள் தந்தாலும், ஆயிரம் வியாக்கியானம் செய்தாலும் அதனால் பலனேதும் இல்லை. சாஸ்திரங்களை மக்கள் எப்படிப் புரிந்து கொண்டு இருக் கிறார்கள் என்பதுதான் முக்கியம். புத்தரும் குருநானக்கும் எடுத்த நிலைப்பாட்டை நீங்களும் மேற்கொள்ள வேண்டும். சாஸ்திரங்களை நிராகரித்தால் மட்டும் போதாது. புத்தரும் நானக்கும் செய்ததைப் போல, சாஸ்திரங்களின் அதிகாரத்தை மறுக்க வேண்டும். சாதி புனிதமானது என்ற கருத்தை, இந்து மதம் இந்துக்களிடம் உருவாக்கி இருக்கிறது. இந்து மதமே அவர்களிடம் உள்ள குறை என்று, இந்துக்களிடம் சொல்வதற்கான துணிச்சல் உங்களிடம் இருக்க வேண்டும். அந்த துணிச்சல் உங்களுக்கு உண்டா?

நம் குறிக்கோள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம். அந்தக் குறிக்கோளை அடைவதற்கான சரியான வழிவகைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது, அதை விட முக்கியம். எனவேதான், சாதியை ஒழிப்பதற்கான வழி என்ன என்பதை வலியுறுத்திக் கூறினேன். சாதியை ஒழிப் பதற்கான உண்மையான வழி என்ன என்பதை நீங்கள் அறியாமல் இருந்தால், உங்கள் முயற்சிகள் பலனற்றுப் போகும். என் ஆராய்ச்சி சரிதான் என்றால், நீங்கள் மாபெரும் பணியை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இந்தப் பெரும் பணியைச் செய்து முடிக்க உங்களால் முடியுமா, முடியாதா என்பதை நீங்கள்தான் கூற வேண்டும்.

உண்மையில், இந்தப் பணி மிகக் கடினமானது என்பது, என் சொந்தக் கருத்து. நான் ஏன் இப்படி நினைக்கிறேன் என்பதை நீங்கள் அறிய விரும்பலாம். அதற்கு காரணங்கள் பல. அவற்றில் நான் முக்கியம் என்று கருதும் சில காரணங் களை மட்டும் கூறுகிறேன். சாதி ஒழிப்புக்குப் பார்ப்பனர்கள் காட்டுகிற பகைமை ஒரு காரணம். அரசியல் சீர்திருத்த இயக் கத்தின் முன்னணியில் பார்ப்பனரே இருக்கிறார்கள். சில நேரங்களில், பொருளாதார சீர்திருத்த இயக்கத்திலும் முன்னணியினராக இருக்கிறார்கள். சாதித் தடைகளைத் தகர்த்தெறிவதற்காக ஏற்கனவே எழுப்பப்பட்டிருக்கும் பெரும்படையின் பின்னால் செல்லும் - ஆதரவாளராகக் கூட அவர்கள் இல்லை.

வருங்காலத்திலாவது பார்ப்பனர்கள், சாதி ஒழிப்பில் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்ற நம்பிக்கைக்கு இட

படிப்பகம்

www.padippakam.com

முண்டா? இல்லை என்றே நான் கூறுவேன். ஏன் என்று நீங்கள் கேட்கக் கூடும். சமூக சீர்திருத்தத்தைப் பார்ப்பனர்கள் தொடர்ந்து புறக்கணிப்பதற்கு காரணம் எதுவும் இல்லையே என்றும் நீங்கள் வாதிடலாம்.

இந்து சமூகத்தின் பேரழிவுக்குக் காரணமாய் இருப்பது சாதியே என்பதை பார்ப்பனர்கள் நன்றாக அறிவார்கள். தீர்க்க தரிசனம் உடைய வகுப்பினர் என்ற முறையில், சாதியின் விளைவுகளைப் பற்றி அக்கறை இல்லாதவர்களாக பார்ப்பனர்கள் இருப்பார்கள் என்று கூறமுடியாது, என்றெல்லாம் நீங்கள் வாதிடலாம். நடுநிலை பார்ப்பனர்களும் இருக்கிறார்கள்; வைதீகப் பார்ப்பனர்களும் இருக்கிறார்கள். எனவே, சாதியை ஒழிக்க விரும்புகிற மக்களுடன் சேர்ந்து கொள்ள வைதீகப் பார்ப்பனர் மறுத்து விட்டாலும் கூட, நடுநிலை பார்ப்பனர்கள், சாதி ஒழிப்பில் தீவிரமாக இறங்கலாம் என்றும் நீங்கள் கூறலாம். இவை எல்லாம் உண்மை என்றே தோன்றுகிறது.

ஆனால், சாதி அமைப்பைத் தகர்த்தெறிவது பார்ப்பன சாதியை மிகக் கடுமையாகப் பாதிக்குமென்பதை மறந்து விடக்கூடாது. பார்ப்பன சாதியின் அதிகாரத்தையும் சிறப்பு உரிமைகளையும் அழிப்பதே இறுதியான குறிக்கோள் என்ற நிலையில், சாதி ஒழிப்பு போன்ற எந்த ஒரு இயக்கத்தையும் வழி நடத்திச் செல்ல பார்ப்பனர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது, அறிவுடைமை ஆகுமா? வைதீகப் பார்ப்பனர்களுக்கு எதிராக நடத்தப்படும் ஒரு இயக்கத்தில் - நடுநிலை பார்ப்பனர்கள் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகுமா?

என் கணிப்பின்படி, பார்ப்பனரிடையே வைதீகர், நடுநிலையாளர் என்ற வேறுபாடு இருப்பதாக எண்ணுவதே அபத்தம். இரு சாராருமே தாயாதிகள் தான். ஒரே உடலின் இரு கைகள். ஒரு கை பாதிக்கப்படும் போது, மற்றது அதைக் காக்கப் போராடவே செய்யும்.

**“ வைதீகப் பார்ப்பனர்களுக்கு எதிராக நடத்தப்படும் ஒரு இயக்கத்தில் - நடுநிலை பார்ப்பனர்கள் பங்கு கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகுமா? என் கணிப்பின்படி, பார்ப்பனரிடையே வைதீகர், நடுநிலையாளர் என்ற வேறுபாடு இருப்பதாக எண்ணுவதே அபத்தம். இரு சாராருமே ஒரே உடலின் இரு கைகள். ஒரு கை பாதிக்கப்படும்போது, மற்றது அதைக் காக்கப் போராடவே செய்யும். ”**

போப் ஆகிவிட்ட ஒரு மனிதர், புரட்சிக்காரன் ஆக விரும்பமாட்டார் என்றால், பார்ப்பனராகப் பிறந்தவன் புரட்சிக்காரன் ஆக நினைக்கவே மாட்டான். நீலக்கண்களை உடைய குழந்தைகளை எல்லாம் கொன்றுவிட வேண்டுமென பிரிட்டிஷ் நாடாளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது, எப்படி அர்த்தமற்றதோ அதுபோலவே - சமூகச் சீர்திருத்த விஷயங்களில், பார்ப்பனர்கள் புரட்சிகரமானவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதே ஆகும்.

சாதி ஒழிப்பு இயக்கத்துக்குத் தலைமை தாங்க, பார்ப்பனர்கள் முன் வருவார்களா - மாட்டார்களா என்பது, பெரிய பிரச்சனை ஒன்றும் இல்லை என்று உங்களில் சிலர் கூறலாம். ஒரு சமூகத்தில் அறிவாளிகளுக்குள்ள பங்கைப் புறக்கணிக்கும் போக்கு இது. வரலாற்றைப் படைக்கிறவன் மகத்தான தனி மனிதனே என்கிற கோட்பாட்டை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களோ இல்லையோ; ஒவ்வொரு நாட்டிலும் ஆளும் வர்க்கமாக இல்லை என்றாலும் கூட, அந்த நாட்டை ஆட்டிப் படைக்கும் அளவுக்கு செல்வாக்குடன் இருப்பது அறிவாளிகள் வர்க்கமே என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

என்னவெல்லாம் நடக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே உணருகின்ற ஆற்றல், அந்த வர்க்கத்துக்கு உண்டு. அந்த வர்க்கமே மக்களுக்கு அறிவுரை கூறி அவர்களை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் உள்ள வர்க்கம். எந்த நாட்டிலும் பரந்துபட்ட மக்கள் அறிவாளிகளைப் போன்ற சிந்தனையோடும் செயல்களோடும் வாழ்க்கையை நடத்துவதில்லை. பொதுமக்கள் அறிவாளிகளைப் பார்த்து, அது போல நடக்கும் இயல்பு கொண்டவர்கள். அவ்வாறே நடக்கவும் செய்கிறார்கள். ஒரு நாட்டின் 'தலையெழுத்து' முழுவதுமே அந்த நாட்டின் அறிவாளி வர்க்கத்தைச் சார்ந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அறிவாளி வர்க்கம் நேர்மையானதாக, சுதந்திரமானதாக, தன்னலம் அற்றதாக இருக்குமானால், நெருக்கடி நேருகிறபோது அந்த வர்க்கம் முன்முயற்சியில் இறங்கி, மக்களை வழிநடத்திச் செல்லும் என நம்பலாம்.



இந்தியாவில் அறிவாளி வர்க்கம் என்பது, பார்ப்பன சாதியின் மற்றொரு பெயராகவே இருப்பது, பரிதாபகரமான நிலை என்று நீங்கள் எண்ணக்கூடும். அறிவாளி வர்க்கம் என்பது, ஒரே ஒரு சாதிக்குள் அமைந்து இருப்பதற்காக நீங்கள் வருந்தக்கூடும். இந்த அறிவாளி வர்க்கம், நாட்டின் நலன்களிலும் விருப்பங்களிலும் அக்கறை காட்டுவதற்குப் பதிலாக, சாதி நலனின் பாதுகாவலனாக தன்னைத் தானே அறிவித்துக் கொண்டிருக்கிற - பார்ப்பன சாதியின் நலன்களிலும் விருப்பங்களிலும் அக்கறை காட்டி வருகிறதே என்று நீங்கள் வருந்தக்கூடும். இவை எல்லாம் வருத்தம் தரக்கூடியவைதான்.

ஆனாலும், இந்துக்களின் அறிவாளி வர்க்கமாக பார்ப்பனர்களே இருக்கிறார்கள் என்பதே மறுக்க முடியாத உண்மை. பார்ப்பன சாதி, அறிவாளி வர்க்கமாக மட்டும் இருக்கவில்லை. இந்துக்களில் மற்ற சாதியினர் மத்தியில் பெருமதிப்புக்குரிய வர்க்கமாகவும் இருக்கிறது. பார்ப்பனர்கள் 'பூதேவர்'கள் (பூமியில் உள்ள கடவுள்கள்) என்று இந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டு உள்ளது. பார்ப்பனர்கள் மட்டுமே இந்துக்களுக்குக் குருவாக இருக்க முடியும் என்றும் இந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டு உள்ளது.

மற்ற சாதியினரைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் இது போன்ற ஒரு அறிவாளி வர்க்கம், சாதிச் சீர்திருத்தத்துக்கு எதிரியாக இருக்கும் போது, சாதி அமைப்பைத் தகர்த்தெறிவதற்கான இயக்கத்தில், வெற்றி வாய்ப்புகள் எட்டாக்கனி என்றே எனக்குத் தோன்றுகிறது.

---

**'தலித் முரசு' சார்பாக, விரைவில் வெளிவர இருக்கும் டாக்டர் அம்பேத்கரின் மிக முக்கிய நூலான - 'சாதியை ஒழிக்க வழி என்ன?' என்ற நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிட்டுள்ளோம்.**



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கக் கூடாது - ஏன்?

■ பிருந்தா காரட்

பாரதிய ஜனதா கட்சியை மற்ற எல்லா கட்சிகளிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுவது எது? பா.ஜ.க.வின் உள்ளார்ந்த ஆர்.எஸ்.எஸ். உறவும், இவ்விரு அமைப்பின் ஒருங்கிணைந்த லட்சியமான இந்து ராஷ்ட்டிரமும்தான். இவர்களின் லட்சியம், இந்திய சமூகத்தின் பன்முகத் தன்மைக்கு அச்சுறுத்தலாகவும் குறிப்பாக, பெண்களைக் கடுமையாக பாதிப்பதாகவும் உள்ளது. முதலில், இந்து ராஷ்ட்டிரம் என்ற கோட்பாட்டில் பெண்களுக்கென தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை ஆர்.எஸ்.எஸ். இன் பல்வேறு வெளியீடுகள் - வரையறுத்து உறுதி செய்துள்ளன. இதன் மய்யக் கருத்து என்ன?

உண்மையான இந்து குடும்பம் என்பது, சிவன் - பார்வதி மற்றும் அவர்களது இரு மகன்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. தாய் என்ற முறையில் குடும்பத்தைப் பராமரிப்பது மட்டும்தான் - ஒரு பெண்ணின் அடிப்படைப் பணியாகச் சொல்லப்படுகிறது. பெண்கள் வேலைக்குச் செல்வது, பொது பிரச்சனைகள் குறித்துப் பேசுவது, அவர்கள் சுதந்திரக் குடிமக்களாக வாழ்வது ஆகிய உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ்.இன் கோட்பாட்டுத் திட்டத்தில், பெண்களுக்கு வேறு எந்த இடமும் கிடையாது.

அரசை நிர்வகிப்பதன் மூலமும் அரசதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் - பா.ஜ.க. தனது கொள்கைகளைப் பல வழிகளிலும் செயல்படுத்த முனைகிறது. 'இந்தியா ஒளிர்கிறது' என்ற பா.ஜ.க. அரசின் பொய்ப் பிரச்சாரத்திலும்கூட, பெண்களின் முன்னேற்றத்திற்கு அரசு என்ன செய்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைக்கூட அவர்களால் தரமுடியவில்லை என்பது, மிகவும் வெட்கக்கேடானது.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், ஆயிரக் கணக்கான மதக் கலவரங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், குஜராத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடியின் தூண்டுதலின் பேரில் நடைபெற்ற இனப் படுகொலை, வேறு எப்போதும் நடந்திராத ஒன்று. அரசாங்கத்தின் துணையுடன் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக விலங்காண்டித்தனமான முறையில் இதுவரை இப்படியொரு வன்முறையை எவரும் நிகழ்த்தியதில்லை. இதில், குறிப்பாக, பெண்கள் குறிவைக்கப்பட்டு - அவர்கள் மீது பாலியல் வன்கொடுமைகள், நிர்வாணப்படுத்திக் கொடூரமாகத் தாக்குதல், அருவெறுப்பான வார்த்தைகளால் பெண்களை இழிவுப்படுத்துதல் ஆகியவை இந்திய வரலாறு கண்டிராத ஒன்று.



எல்லா மதவெறி அமைப்புகளும் வைத்துள்ள அளவுகோலின் படியே, சங் பரிவாரும் பெண்களை சமூகத்தின் சொத்தாகவே கருதுகிறது. எனவே, பெண்களைத் தாக்குவது மற்றும் இழிவுபடுத்துவது - அப்பெண்கள் சார்ந்திருக்கும் சமூகத்தைக் கேவலப்படுத்தும்; அதன் மூலம் 'சரியான பாடத்தை' அந்த சமூகத்திற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற மோசமான எண்ணத்திலேயே பெண்கள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர்.

முஸ்லிம்கள் மீது வெறுப்பைத் தூண்டுவதற்காக, பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் தாக்கப்பட்டதாக - மிகக் கேவலமான ஒரு பொய்யை 'சங்பரிவார்' பரப்பியது. இந்த வகையில், பெண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்குதலுக்கு ஆட்பட்டனர். பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்களுக்கு, கொடூரமாக கொலை செய்யப்பட்ட பெண்களின் குடும்பங்களுக்கு - இன்னும் நீதி கிடைக்கவில்லை. மோடி அரசைக் கண்டித்தும், குற்றவாளிகளைக் கைது செய்யாத அரசு பதவி விலக வேண்டும் என்று உச்ச நீதிமன்றமே வலியுறுத்தியும்கூட, அரசு, கொலைகாரர்களையும் பாலியல் வன்முறையைச் செய்த குற்றவாளிகளையும் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தவில்லை.

பிரதமரும் அவரது மய்ய அரசும், எதிர்க் கட்சிகள் ஆட்சி செய்யும் மேற்கு வங்காளம் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களுக்கு உண்மை அறியும் குழுக்களை அனுப்பி, அங்குள்ள சட்ட ஒழுங்கு பிரச்சனை குறித்து ஆய்வு செய்கிறது. ஆனால், பிரதமர் வாஜ்பேயி விதிமுறைகளை மீறி, மோடி அரசாங்கத்தைக் காப்பாற்றவே முயலுகிறார். மேலும், சிறுபான்மையின மக்களுக்கு எதிரான தாக்குதல் குஜராத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. உமாபாரதி முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, மத்தியப் பிரதேசத்தில் ஜாபுவா உள்ளிட்ட மலையின மக்கள் வாழும் பகுதிகளில் கிறித்துவ மக்களுக்கு எதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

ஒரிசாவில் மிக அண்மையில் ஏழு தலித் பெண்கள் - மீண்டும் இந்து மதத்திற்கு மாற மறுத்ததற்காக, பஜ்ரங்தள் என்ற மதவெறி அமைப்பால் மொட்டை அடிக்கப்பட்டனர். பெண்கள் ஒற்றுமையைத் தடுக்கும்



படிப்பகம்

வகையில், மதத்தின் பெயரால் இந்து பெண்களை சிறுபான்மை பெண்களுக்கு எதிராகத் திருப்பி - சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மீதான தாக்குதலைத் தொடுக்கிறார்கள். பெண்களை அதிகாரப்படுத்துவதாகச் சொல்லும் பா.ஜ.க. மற்றும் சங்பரிவாரங்களின் கொள்கைத் திட்டங்கள், பெண்களுக்கு எதிரான மேற்கூறிய உண்மைகளை மறைக்கவே பயன்படுகின்றன.

பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டவரைவு தோல்வி அடைய, பிரதமரும் அவருடைய அரசுமே தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும். நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதல் முறையாக, எதிர்க்கட்சிகள் இச்சட்டம் நிறைவேற - அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாக எழுத்து மூலம் தெரிவித்தன. இருப்பினும், அரசு இதை நிராகரித்து விட்டது. அதுமட்டுமல்ல, பெண்களைப் புண்படுத்தும் வகையில் மாற்றுத் திட்டம் என்று ஒன்றை அறிவித்தது. அவர்களின் மாற்றுத் திட்டத்தின் படி, பெண்களுக்கு என 180 இடங்கள் ஒதுக்கப்படும்; அது இரு உறுப்பினர் கொண்ட தொகுதியாக அறிவிக்கப்படும். ஒரு பெண்ணால், ஒட்டுமொத்த தொகுதியையும் நிர்வகிக்க முடியாதாம்.

கருத்திணக்கம் ஏற்படவில்லை என்ற பேரில், ஆளும் கட்சியினர் வாய்மொழி எதிர்ப்பு என்று கூறி இச்சட்டத்தைப் படுகுழிக்குத் தள்ளிவிட்டார்கள். 'பொடா' அல்லது வேறு எத்தனையோ சட்டங்களுக்கு கருத்திணக்கம் இல்லாமலேயே அரசால் சட்டங்களை இயற்ற முடிகிறது. ஆனால், பெண்கள் இட ஒதுக்கீட்டு சட்டவரைவில் மட்டும் இரண்டு நிலை எடுக்கிறது பா.ஜ.க. அரசு. பெண்கள் அமைப்புகளிடையேயும், நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களிடையேயும் பலமுறை பிரதமர் வாக்கெடுப்புக்கு பெண்கள் சட்டவரைவை அறிமுகப்படுத்துவதாகக் கூறியுள்ளார். ஆனால், அதற்குரிய நேரம் வரும்போது தனது பொறுப்பை அவர் தட்டிக் கழிக்கவே செய்தார்.

தொடர்ச்சியாக வாஜ்பேயி அரசு வெளியிடும் 'பட்ஜெட்' பெண்களின் நலன்களில் அக்கறை காட்டுவதாகவே இல்லை.



பெட்ரோல் டீசல் தவிர அத்தியாவசியப் பொருட்களான, அரிசி, தானியம், சர்க்கரை, எண்ணெய் போன்றவைகூட குடும்ப பட்ஜெட்டைப் பாழ்படுத்தி விடுவதாகவே அமைந்து விடுகிறது. விலைவாசியால் ஏற்படும் கடும் சுமைகளைப் பெண்களே சுமக்க வேண்டியிருக்கிறது. சமூகத் துறைக்கென செலவழிக்கப்படும் பணத்தைக் குறைப்பதாலும், தனியார் மயமாக்கலும் - பெண்களையே பெரிதும் பாதிக்கிறது. அரசின் இன்றியமையாத - குடிநீர் வழங்குதல், துப்புரவுப் பணி, மருத்துவம் மற்றும் பள்ளிகளுக்கு ஆகும் செலவு; அதற்கான கட்டணம் பல மடங்கு அதிகரித்துள்ளது. மருத்துவத்துறை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றை தனியார் மயமாக்கியது. எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. மய்ய அரசு அளித்துள்ள பட்ஜெட்டில், பெண்களுக்கென திட்டங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன.

வாஜ்பேயி அரசு (1999 - 2002) மூன்று ஆண்டுகளில் பெண்கள் திட்டங்களுக்கு என செலவழிக்கப்பட்ட தொகை, பொதுவாக செவழிக்கப்படும் தொகையுடன் ஒப்பிட்டால், அது 1.02 சதவிகிதத்திலிருந்து 0.94 சதவிகிதம், கடைசியாக 0.87 சதவிகிதம் என குறைந்து விட்டது. ஆனால் அரசு, பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு என 500 கோடி வரை செலவு செய்ய முடிகிறது. பெண்களுக்கு வருவாய் ஈட்டும் திட்டத்திற்கென ஆகும் செலவு 153.70 கோடி ரூபாய்தான். பெண்களை அதிகாரப்படுத்துவதற்கான சிறு சேமிப்புக் குழுவையும், அதற்கான மானியத்தையும் அரசு ரத்து செய்து விட்டது.

வாஜ்பேயி அரசில் உழைக்கும் பெண்களின் பொருளாதார உரிமைகளுக்கு எதிரான தாக்குதலில், மிகவும் பாதிக்கப்படுவது - பெரும்பான்மையாக உள்ள தலித், மலையினப் பெண்களே! பசி, பட்டினி மற்றும் வறுமை ஆகியவை பெண்களையும் பெண் குழந்தைகளையும் கடத்தி விற்பதில் முடிந்திருக்கிறது. கிராமத்தில் பெண்களுக்கு அரசு வேலைக்கான உத்திரவாதம் அளிக்காததே முக்கிய காரணமாகும். மத்திய அரசின் பணிகளில்கூட, பெண்கள் மிகவும் குறைந்த அளவு கூலியையே பெற்று வருகின்றனர். 'உலகத் தொழிலாளர் அமைப்பு' அய்.எல்.ஓ. பல்வேறு பரிந்துரைகள் அளித்த பிறகும் - அமைப்பு சாராத தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எந்தப் பாதுகாப்பும் இன்றி கோடிக்கணக்கான பெண்கள் இதில் வேலை செய்து வருகின்றனர்.

தொன்மையான பழக்கங்கள் மரபுகள் என்ற பெயரில், பெண்களுக்கு எதிரான பிற்போக்குத்தனமான வழக்கங்களையும், பெண்களுக்கு எதிரான வன்முறையையும் பா.ஜ.க. ஆதரிக்கிறது. எடுத்துக்காட்டாக, ராஜஸ்தானில் உடன்கட்டை ஏற்றப்பட்ட ரூப் கன்வர் வழக்கில், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் - உடன் கட்டையை ஆதரித்துப் பேசியுள்ளனர். மேலும், பா.ஜ.க. அரசின் கடந்த அய்ந்தாண்டுகளில், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை 15 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இவ்வாறு, பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு வரையறையே இல்லை.

**❝ பொடா' அல்லது வேறு எத்தனையோ சட்டங்களுக்கு கருத்திணக்கம் இல்லாமலேயே அரசால் சட்டங்களை இயற்ற முடிகிறது. ஆனால், பெண்கள் இட ஒதுக்கீட்டு சட்டவரைவில் மட்டும் இரண்டு நிலை எடுக்கிறது. ❞**

பா.ஜ.க.வின் ஆறு ஆண்டு கால ஆட்சி, பெண்களின் உரிமைகளுக்கு எதிராகவே இருந்துள்ளது. இது, அவர்களை அதிகாரமற்றவர்களாகவே ஆக்கி விட்டது. இந்தத் தேர்தல், அரசையும் ஆளும் கட்சியையும் கண்டிக்கும் ஒரு வாய்ப்பை பெண்களுக்கு அளிக்கிறது. ஆட்சியாளர்கள் அளித்த பொய்யான வாக்குறுதிகளுக்கு பதில் சொல்லும் காலம் இது. எனவே, பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிகளை வெளியேற்றுங்கள் - பெண்களின் உரிமைகளைக் காப்பாற்றுங்கள். ●

நன்றி : Communalism Combat



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தலித்துகள் × ம.க.இ.க.

*''உன் எதிரி யாரெனச் சொல்
நீ யாரென நான் சொல்கிறேன்''*
- காரல் மார்க்ஸ்

முதலாளியத்தையும் ஏகாதிபத்தியத்தையும் இம்மண்ணில் இருந்து விரட்டி அடித்துவிட்டு, பாட்டாளி வர்க்கத்திடம் அதிகாரத்தைக் கொடுத்து ஆட்சி செய்யவைப்பதே - தங்களுடைய லட்சியம் எனப் பல்லாண்டுகளாக புரட்சிகர கம்யூனிஸ்டு இயக்கங்கள் சொல்லி வருகின்றன. ஆனால், இந்நாட்டின் உண்மையான பாட்டாளிகளான தலித் மக்கள், ஆட்சி அதிகாரத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தாலே - அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவதூறுகளை அள்ளி வீசுகின்றனர். ம.க.இ.க.வின் பிரச்சார பீரங்கியான 'புதிய ஜனநாயகம்' மார்ச் 2004 இதழில், ''சேரிகளை இழிவுபடுத்தும் தலித் தலைவர்கள்'' என்று தலைப்பிட்டு - கிருஷ்ணசாமி, திருமாவளவன் படங்களை கேலிச் சித்திரமாக வரைந்து கட்டுரை வெளியிட்டுள்ளது. பாட்டாளி வர்க்கங்களின் சர்வாதிகாரம் பற்றி வாய்கிழிய பேசும் இவர்களின் பார்வை எப்படி இருக்கிறது? அரசியல் அரங்கத்தில் தலித் அடையாளத்துடன் நிற்க முனையும் எவரையும் இவர்கள் ஆதரிக்க மறுப்பது, பட்டவர்த்தனமாகியுள்ளது.

சாதிக்கு எதிராக, சமத்துவ சிந்தனையுடன், சமூக நீதியை நிலைநாட்ட - தலித் தலைவர்களும், இயக்கங்களும் தீவிரமாக முனைகின்ற போதெல்லாம், அவர்களின் எழுச்சியை, அத்துமீறலைக் கொச்சைப்படுத்துவது - சாதி இந்துக்களின் மனோநிலை. ஆர்.கே.யின் கட்டுரையும் அதன் அடியொற்றி, குறைந்த பட்சஅறிவு நாணயமும், நேர்மையுமின்றி ஆத்திரத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. வானத்திற்குக் கீழ் நடைபெறும் எல்லா சமூக அநீதிகளுக்கும் - தாங்கள் மட்டுமே தீர்வு சொல்லுகின்ற வல்லாண்மை படைத்தவர்கள் என்ற தன்னகங்காரத் தொனியுடனேயே அது அமைந்திருக்கிறது.

அக்கட்டுரையின் ஒரு சில வரிகளைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம், ஒட்டுமொத்த கட்டுரையின் வன்மத்தையும், தலித்விரோதப் போக்கையும் ம.க.இ.க.வின் விஷமத்தனத்தையும் புரிந்து கொள்ளலாம்: ''தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் நிலவுரிமை, பொது இடங்களில் சம உரிமை, குடிநீர், இடுகாடு, பொதுப் பாதை, கோயில் நுழைவு, தேநீர்க் கடைகளில் தனி டம்ளர்கள் போன்றவை, தீண்டாமை, பெண்களுக்கு எதிரான ஆதிக்க சாதிகளின் பாலியல் வன்முறை, கொத்தடிமை முறை மற்றும் சாதிய ஒடுக்கு முறைகள். இப்படிப் பல பிரச்சனைகளில் நக்சல்பாரி இயக்கங்கள் உயிரைக் கொடுத்துப் போராடி வருகின்றன.''

அடேங்கப்பா! என்ன ஒரு அர்ப்பணிப்பு! மயிர்ச் சிலிர்க்க வைக்கும் ஒப்படைப்பு வார்த்தைகள். தலித் பிரச்சனைகளில், புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் செயல்பாட்டை தலித்துகளும் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். மறக்க முடியாத கசப்பான வரலாற்று நினைவுகளின்




வழியே - 'தோழர்களே' உங்களை கவனமாகக் கண்காணித்துக்கொண்டுதான் வருகிறோம். கம்யூனிஸ்டு இயக்கங்கள் செய்து வருகின்ற துரோக வரலாற்றை, அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியுமா?

தலித்துகள் உஞ்சனையில், மேலவளவில் பட்டப்பகலில் கண்டந்துண்டமாய் வெட்டியெறியப்பட்டபோது, பரமக்குடியிலும், செங்கல்பட்டிலும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானபோது, தாமிரபரணி நதியில் அடித்து சாகடிக்கப்பட்டபோது, புளியங்குடியில் தூங்கும் போது கழுத்தறுத்து உயிரைப் பறித்தபோது, திண்ணியத்தில் மலத்தை வாயில் திணித்தபோது, கவுண்டன் பட்டியில் சிறுநீரை வாயில் ஊற்றிக் குடிக்க வைத்தபோது, கீழ ஊரப்பனூரில் மலத்தைக் கரைத்து முகத்தில் தெளித்தபோது - எல்லா பிரச்சனைகளுக்கும் நானே 'அண்ணாவி' என தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் ம.க.இ.க., செய்து கிழித்ததுதான் என்ன?

சேரிகளின் மரண ஓலங்களைக் கேட்டு ஓடோடி வந்து தோள்கொடுத்த தோழர்கள் எத்தனை பேர்? இவர்கள் விவரித்திருக்கும் கூறுகளிலாவது சாதி ஒழிப்பு பற்றிய கண்ணோட்டம் இருக்கிறதா? 'நாங்கள் இந்துக்கள் அல்ல' என்று புரட்சியாளர் அம்பேத்கரின் வழிகாட்டுதலின்படி, சாதிக்கு வெளியே தலித்தாக நிமிர்ந்து நிற்கும் இயக்கங்கள், சாதியை ஒழிக்குமா? சாதியின் வெளிப்பாடான கேடுகளைப் பட்டியலிடும் இவர்களின் செயல்பாடு - சாதியை ஒழிக்குமா?

டாக்டர் கிருஷ்ணசாமி - அந்நிய ஏகாதிபத்திய தொண்டு நிறுவனங்கள் பெற்றெடுத்த சொந்தப் பிள்ளையாம்; திருமாவளவனோ அந்த நிறுவனங்கள் சுவிகரித்துக் கொண்ட தத்துப்பிள்ளையாம். வரலாற்றுப் பார்வையிலிருந்து உற்று நோக்கும்போது, அன்று 'அரிஜன்' அதாவது 'விபச்சாரியின் குழந்தைகள்' என தலித் மக்களுக்குப் பெயர் சூட்டிய காந்தியின் நயவஞ்சக சொல்லாடலுக்கும், இன்று தலித் தலைவர்களைப் பார்த்து - 'தத்துப் பிள்ளை', 'சொந்தப்பிள்ளை' என்ற சொல்லாடலுக்கும் பெரிய வேறுபாடுகள் எதுவும் இல்லை. சாதி இந்துக்கள் எப்போதும் ஒரே மாதிரிதான் சிந்திப்பார்கள் என்பதற்கு, ம.க.இ.க.வும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அன்று, தலித் மக்களின் 'தலைவர்', 'ரட்சகர்', 'விடுதலையாளர்' என எவ்வாறு காந்தி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு - தலித் மக்களைக் கவர்ந்திழுக்க வஞ்சக வலை விரித்தாரோ, அதே போன்றுதான் இன்று, ம.க.இ.க.வும் தன்னை சேரி மக்களின் ரட்சகன் என கூறிக்கொண்டு - 'தமிழ் மக்கள் இசைவிழா' நடத்தி பம்மாத்துக் காட்டுகிறது. காந்தியின் துரோகத்தனமும், காங்கிரஸ் கட்சியின் வேடத்தனமும் அன்று அம்பலப்படுத்தப்பட்டு சந்தி சிரித்தது போல இன்று, ம.க.இ.க. வும் தன் உண்மையான மனங்கவர்ந்த


படிப்பகம்

பார்ப்பனிய கொடூர முகத்தை அடையாளம் காட்டியுள்ளது.

அண்மையில் மதுரையில் நடைபெற்ற 'தலித் கலை விழா'வில் 'தலித் கலை விழாவைப் புறக்கணியுங்கள்' என்ற வாசகம் அடங்கிய துண்டறிக்கை ஒன்றை விநியோகித்தது. விழாவிற்கு வந்திருந்த தலித் மக்களின் எதிர்ப்பைக் கண்டு ஓடி ஒளிந்தது. தலித் மக்களை 'ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள், கைக் கூலிகள் என்று இவர்கள் புகழாரம் சூட்டுவது ஒன்றும் புதிதல்ல. காந்தியும், காங்கிரசும், புறக்கணித்த சைமன் குழுவை வரவேற்றதால் - புரட்சியாளர் அம்பேத்கரை சாதி வெறியர்களும், இந்து சனாதனவாதிகளும் சேர்ந்து - அவரை 'ஏகாதிபத்தியத்தின் அடிவருடி, தேச துரோகி' என வசைபாடினார்கள். இன்று அதே பார்ப்பனக் கூட்டம்தான் தலித் இயக்கத் தலைவர்களையும் கொச்சைப்படுத்துகிறது.

மேலும், அந்தக் கட்டுரையில், ''சாதி ஒழிப்பிற்கான அடிப்படையோ, நடைமுறையோ, கண்ணோட்டமோ இவர்களிடம் கிடையாது'' எனக் கண்டுபிடித்து ஆர்.கே. எழுதியுள்ளார் இந்து கொடுங்கோன்மையின் அவமானத்தையும், இழிவையும், அசிங்கத்தையும் எதிர்த்து தலித்துகளை அரசியல் சக்தியாக அணிதிரட்டியிருக்கும் திருமாவளவனிடமும் - கிருஷ்ணசாமியிடமும் சாதி ஒழிப்புக்கான செயல் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

தலித் மக்களைக் கண்டு பரிதாபப்படும் ம.க.இ.க.விடம் அது இருக்கிறதா? தமிழகத்தில் எத்தனை ஊர்களில் 'தோழர்கள்' சாதியை ஒழித்திருக்கிறார்கள்? சாதி ஆதிக்கம் செலுத்தும் இந்துக்களிடம், சாதி - தீண்டாமையை இன்னும் நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் பகுதிகளில், இவர்களால் சாதிவெறியை ஒழிக்க முடிந்திருக்கிறதா? சாதி ஒழிப்பு குறித்து சேரி மக்களிடம் போதனை செய்யும் இவர்கள், சாதி ஆதிக்கம் செலுத்தும் சாதி இந்துக்களின் தெருக்களில் போய்ப் பிரச்சாரம் செய்ததுண்டா? கோயில் கருவறைக்குள் நுழைவதற்கு இருக்கும் துணிச்சல், சேரிக் கருவறைக்குள் நுழைந்து படுகொலை செய்யும் சாதி இந்துக்களை எதிர்ப்பதில் இல்லையே.

இருந்திருந்தால், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலத்தில் - 'தேர்தலை நடத்திப்பாரா மாப்பிள்ளை' என அரசுக்கே சவால் விட்டுக் கொண்டிருக்கும் கள்ளர்கள் வசிக்கும் பகுதியில் சென்று, சாதி ஆதிக்கத்தை ஒழித்திருப்பார்களே! மேலவளவு படுகொலையைத் தடுத்து நிறுத்தியிருப்பார்களே! சாதி இந்து பார்வையுள்ளவர்களிடம் இதை எதிர்பார்க்க முடியாதுதான்.

**“ அம்பேத்கர் தெளிவாகச் சொன்னார்: போப் புரட்சி செய்ய மாட்டார்; புரட்சி செய்பவன் போப்பாக இருக்க மாட்டான். ”**

ஆர்.கே.யின் கட்டுரை - தலித் மக்களுக்கான அமைப்பையும், தலித் மக்களுக்கான தலைமையையும் அழித்தொழிக்கும் சிந்தனையைக் கொண்டிருக்கிறது. பொது அரசியல் தளத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட தலித் மக்கள், இதுவரை ஓட்டு வங்கிகளாக இருந்தவர்கள் - இன்றளவும் ஒரு அரசியல் சக்தியாக மாறி விடக் கூடாது என்பதில், ம.க.இ.க.வுக்கும் பெருத்த கவலை உள்ளது.


தலித் கலைவிழாவை புறக்கணியுங்கள்!

மார்க்சியம் பற்றி பாய்ந்து, பாய்ந்து பேசுபவர்களுக்கு 'தலித்' என்ற தனித்துவத்தை, அந்த அடையாள அரசியலை சகித்துக் கொள்ள முடியவில்லை. முதலில், இவர்கள் அம்பேத்கரை தலைவராக ஏற்றுக் கொள்கிறார்களா? ஒரு புறம் தாங்கள் எதிர்க்கும் கருணாநிதி, ஜெயலலிதா, வாஜ்பேயி என அரசியல் கட்சியினரையே அட்டைப்படமாக வெளியிடும் இவர்களின் பத்திரிகை - புரட்சியாளர் அம்பேத்கர் படங்களைத் தாங்கி வந்துள்ளனவா? மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் இவர்களுக்கு இணையாக அம்பேத்கரை நிறுத்தியது உண்டா?

வாய்ப்பு, வசதி உடையவர்களின் ஆக்கிரமிப்பாக மட்டுமே இந்திய அரசியல் இருக்கும் போது, இவ்விரண்டும் மறுக்கப்பட்ட தலித் மக்கள் - தேர்தல் அதிகாரம், ஆட்சி என்ற ஆடுகளத்தில் நுழைந்து விடக்கூடாதாம். புரட்சியாளர் அம்பேத்கர், தேர்தல் பாதையை ஒருபோதும் புறக்கணித்தது இல்லை என்பது 'தோழர்'களுக்குத் தெரியுமா? தலித் மக்கள், தங்கள் தலைவர்களின் செயல்பாடுகளுக்கு ஏற்ப அவர்களை ஏற்றுக் கொள்வதும், புறக்கணிப்பதும் அம்மக்களுக்கு இருக்கின்ற பிரச்சனை.

ஆனால், அத்தலைவர்களிடம் ஒரே யொரு ஆக்கப்பூர்வமான தன்மையைக் கூட கண்டு, அதைப் பாராட்டத் துணிவில்லாத ம.க.இ.க.வுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஆர்.கே., தலித் அரசியல் பார்வையில் இருந்து தன்னுடைய கருத்துகளைச் சொல்லாமல், ம.க.இ.க.வின் அரசியல் நிலைப்பாட்டிலிருந்து சொல்லியிருக்கிறார். தலித் அரசியலுக்கும், ம.க.இ.க. அரசியலுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இரண்டும் இரு வேறு துருவங்கள். அப்படியிருக்க, தலித் இயக்கங்களையும், தலித் தலைவர்களையும் தான்தோன்றித்தனமான முறையில் விமர்சனம் செய்ய - இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

பல்வேறு அரசியல் கட்சிகளிலும், பார்ப்பனத் தலைமை இருப்பது போலவே - ம.க.இ.க.வுக்கும் மருதையன் எனப் பெயர் மாற்றிக் கொண்ட ருக்மாங்கதன் என்ற பார்ப்பனர்தான் தலைமை வகிக்கிறார். ஆனால், பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் என்று வாய்கிழிய பிரச்சாரம் செய்கிறார்கள். கேவலம், சவாலுக்காகக்கூட அந்தத் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காதவர்களா, சாதியை ஒழிக்கப் போகிறார்கள்? அம்பேத்கர் தெளிவாகச் சொன்னார்: 'போப் புரட்சி செய்ய மாட்டார்; புரட்சி செய்பவன் போப்பாக இருக்க மாட்டான்.'

கருணாநிதியும், ஜெயலலிதாவும், தமிழக அரசியல் களத்திலிருந்து தலித் இயக்கத் தலைவர்களைப் புறந்தள்ளி ஒதுக்கியதைக் கண்டிக்காத ம.க.இ.க., தலித் தலைவர்கள் தமிழக அரசியல் களத்தில் நுழைவதைத் தடை செய்ய முயலுகிறது. 'தலித்' என்ற தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பதால்தான் - தலித் எதைச் செய்தாலும் அதைப் பரிகசிக்கும் ஆபாசத்தில் ஈடுபடுகிறார்கள்.

தலித் மக்களின் எதிரணியில் மறைமுகமாக ஒளிந்திருந்த ம.க.இ.க., தற்பொழுது வெளிப்படையாக 'நானும் எதிரி'தான் என்று அடையாளம் காட்டியுள்ளது. சாதி இந்துக்களை மட்டுமல்ல, கொஞ்சமும் நாகரீகமற்ற, பிற்போக்குத்தனமான பார்ப்பனத் தலைமையைக் கொண்ட ம.க.இ.க.வையும் சேர்த்து, இனி தலித் மக்கள் சமரசமின்றி எதிர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

– சமரன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# "மரண தண்டனையை முற்றாக நீக்குக"

## உரத்து ஒலிக்கும் மார்ட்டள்ளி மக்களின் உரிமைக் குரல்

■ **பூங்குழலி**

ஏம்மா, உங்க ஆளுங்க சாகப்போறாங்கன்னதும் இப்படித் துடிக்கிறீங்களே... எங்க ஆளுங்க 22 பேரு செத்தப்போ - எங்களுக்கு எப்படி இருந் திருக்கும்? அத யோசிச்சீங்களா?''

''ஆமாய்யா! உசிரு ஒண்ணுதான்! ஆனா உங்க ஆளுங்க செத்தா அரசாங்கத்துல பணம் கொடுக்கு றாங்க, பிள்ளைகளுக்குப் படிப்பு கொடுக்குறாங்க, வேலை வாங்கித் தராங்க, எங்க ஆளுங்க செத்தா என்ன செய்யறாங்க? அதான் நாங்களே ஒரு வழி யைத் தேடிக்கிறோம். நீங்க உங்க வழியப் பாருங்க, எங்கள எங்க வழியப் பார்க்க விடுங்க...''


செல்வமேரி - ஞானப் பிரகாசத்தின் மனைவி


கமலாமேரி - பிலவேந் திரனின் மனைவி

இயல்பாய் ஒலித்த இந்த உரிமைக்குரல், ஒடுக் கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த குரலாய் ஓங்கி ஒலித்தது, மார்ட்டள்ளியில். 18.3.2004 அன்று கர் நாடக மாநிலத்தின் எல்லையோர கிராமமான மார்ட் டள்ளியில் - 'மரண தண்டனைக்கு எதிரான மக்கள் மாநாடு' நடைபெற்றது. கர்நாடக மற்றும் தமிழக அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் இப்பகுதியில் நடந்த அந்த மாநாட்டிற்கு, சுற்றியுள்ள கிராம மக்களை செல்லவிடாமல் தடுக்க - அதிரடிப் படையினர் பலவாறு முயன்றனர். அப்படி ஒரு முயற் சியில், காவல் துறை அதிகாரி ஒருவருக்கும், மலை கிராமப் பெண்ணான மாரிக்கும் நடந்த உரையாடலே நாம் மேற்கண்டது. மாரியின் கணவரும் மகனும் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.


வின்செண்ட் டிசோசா


வி.பி. குணசேகரன்

இத்தகு அச்சுறுத்தும் சூழலிலும், அஞ்சாமல் மக்கள் ஒன்றிணைந்து நிற்கக் காரணம் என்ன? 1993 ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலம் பாலாறு அருகே வெடி குண்டு வெடித்து - காவல்துறையினர் உட்பட 22 பேர் பலியாயினர். இந்த வெடிகுண்டு சம்பவத்திற்குப் பிறகு, கர்நாடக - தமிழக எல்லையோர மலை கிரா மங்களில் அதிரடிப்படை நடத்திய வெறியாட்டம் கொஞ்சநஞ்சமல்ல. கண்ணில் கண்டவர்களை யெல்லாம் சித்திரவதைக் கூடத்திற்கு இழுத்துக் கொண்டுபோய் நினைத்துப் பார்க்கவும் இயலாத அளவிற்கு சித்திரவதை செய்தனர்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 136 நபர்களில், 48 பேர் கைது செய்யப்பட்டனர். இது போக மேலும் 3 வழக்குகளையும் சேர்த்து மொத்தம் 127 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 12 பேர் பெண்கள். 4 வழக்குகளிலும் முதல் குற்றவாளியான வீரப் பன் தவிர, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலரும் இறந்து விட்டதாக அறிவித்தனர். உண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவி மக்களையும் அவ்வழக்குகளில் சேர்த்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும், கர்நாடக - தமிழக எல்லையோரங்களில் உள்ள மலை கிராமங்களில் வாழும் அடித்தட்டு மக்களே. இவர்கள் கைதுக்குப் பிந்திய இந்த 8 ஆண்டுகளில், பல குடும்பங்கள் சிதறுண்டு போயின. கணவனைக் கொன்று மனைவியைக் கைது செய்ததால், அநாதை களாக்கப்பட்ட குழந்தைகள் ஏராளம். தாங்கள் ஏன் கைது செய்யப்பட்டோம்? என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அப்பாவிகளே - இவ்வழக்கில் சேர்க்கப் பட்டிருந்தனர். 8 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித விசாரணையும் இன்றி மைசூர் சிறையில் அடைக் கப்பட்டனர்.

கன்னட நடிகர் ராஜ்குமார் விடுதலைக்குப் பிறகு, 'மக்கள் உரிமைக் கூட்டமைப்பு', 'மக்கள் கண்காணிப்பகம்', 'தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கம்' போன்ற அமைப்புகளின் சீரிய முயற்சியால், இம்மூன்று வழக்குகளின் விசாரணை துரிதப்படுத்தப் பட்டது. 'தடா' நீதிமன்றத்தால் 2002 ஆம் ஆண்டு தீர்ப் பும் வெளியிடப்பட்டது. சிறப்பு நீதிமன்றத்தில் நடந்த 4 வழக்குகளில் ஒரு வழக்கில் அதிகபட்ச தண்டனையே அய்ந்து ஆண்டுகள்தான் என்ப தாலும், கைது செய்யப்பட்டவர்கள் ஏற்கனவே 8 ஆண்டுகள் சிறையில் கழித்திருப்பதால், அனை வரையும் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது.

பாலாறு வெடிகுண்டு வழக்கில் கைதானவர் களில், 40 பேர் உட்பட 107 பேர் எவ்வகையிலும் இவ்வழக்குகளுக்குத் தொடர்பில்லாதவர்கள் என விடுதலை செய்யப்பட்டனர். 7 பேர் சிறையிலிருந்த காலம் வரை போதுமென்று விடுவிக்கப்பட்டனர். பாலாறு வழக்கில், 8 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதில் சைமன், பிலவேந்திரன் இருவருக்கும் மற்றொரு வழக்கிலும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று வழக்குகளிலும், அவர்களின் தண்டனையைக் குறைக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறை யீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் பாலாறு வழக்கு தவிர மற்ற இரண்டு வழக்குகளையும் தள்ளுபடி செய்து, அனைவரையும் விடுதலை செய்தது. பாலாறு வழக்கில் 8 பேரில் 4 பேரை விடுதலை செய்தும், எஞ்சிய நால்வருக்கு மரண தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தது. மரண தண்டனை விதிக் கப்பட்ட நால்வரில் - சைமனும் பிலவேந்திரனும், அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மற்றொரு வழக்கில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

உலகெங்கும் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கும் இவ்வேளையில், ஆயுள் தண்ட


படிப்பகம்

னையை மரண தண்டனையாக மாற்றி உச்ச நீதிமன்றம் வெளியிட்டிருக்கும் இத்தீர்ப்பு, மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இத்தனைக்கும் சிறப்பு நீதிமன்றம், இவ்வழக்கில் ஏன் மரண தண்டனை தேவையில்லை என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளது:

''இந்தத் தொடர் வழக்குகள் அனைத்தையும் தீர விசாரித்து அறிந்த தகவல்களின் அடிப்படையில், மரண தண்டனை விதிப்பதற்கு எல்லா வகையிலும் தகுதியான 'அரிதிலும் அரிதான' வழக்குதான் இது என்ற முடிவுக்குதான் வரவேண்டியிருக்கிறது. எனினும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், அரசு தொடுத்த வழக்கின் படியே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 'தடா' சட்டத்தின் கீழும் நிகழ்த்தியிருக்கிற குற்றங்களானது, எவ்வித உள்நோக்கத்துடனும் செய்யப்படவில்லை.

அவர்கள் தங்கள் வாழ்க்கையை குற்றவாளிகளாகத் தொடங்கவில்லை. குற்ற செயல்களின் மூலம் ஒரு எதிர்மறைப் புகழை அடைந்தவர்களும் இல்லை. முதல் குற்றவாளி (வீரப்பன்) மட்டுமே அத்தகு குற்றவாளியாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, குற்றச் செயல்களின் மூலம் ஒரு எதிர்மறைப் புகழை அடைந்தவர். பிறகு அவர் மக்களிடையே ஒரு அச்சத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்தவர்களில் சிலரை - தனது உதவிக்கு அமர்த்திக் கொண்டு அவர்களை வற்புறுத்தி தன் வசப்படுத்திக் கொண்டார்.

ஆக, குற்றம் சாட்டப்பட்டவர்களில் இந்நால்வரும் அத்தகு வழிமுறையின் மூலம் முதல் குற்றவாளியின் கூட்டத்தில் இணைந்து, அவரது வழிகாட்டுதலின்படி குற்றச் செயல்கள் புரிந்தவர்கள். ஆதலால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் அளவிற்கான ஆதாரங்கள் இல்லை என்ற முடிவிற்கு வந்து தீர்ப்பை அளிக்கிறேன்...''

இவ்வழக்கை மட்டுமல்ல, இதற்கு தொடர்புடைய மேலும் மூன்று வழக்குகளையும், மொத்தம் நானூறுக்கும் மேற்பட்ட சாட்சிகளையும் நேரடியாக விசாரித்த நீதிபதியே இவ்வளவு தெளிவாகக் கூறிய பிறகும், உச்சநீதிமன்றம் நால்வருக்கு மரண தண்டனை விதித்துள்ளது. இந்த மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியும், பொதுவாக மரண தண்டனையை முற்றிலும் ஒழிக்க வேண்டும் எனவும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட பிலவேந்திரன், ஞானப் பிரகாசம், சைமன், மாதையன் நால்வருமே மார்ட்டள்ளியையும் அதன் அருகிலுள்ள சந்தனப்பாளையம், ஒட்டர்தொட்டி கிராமங்களையும் சேர்ந்தவர்கள். மார்ட்டள்ளி போன்ற ஓர் உள்ளடங்கிய கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சொந்த மண்ணில் இம்மாநாடு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டது, அதிரடிப்படையினரின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. மாநாட்டை நடக்கவிடாமல் செய்ய, பல விதங்களிலும் அவர்கள் முயன்றனர்.




மாநாடு நடக்கவிருந்த இடம் ஒரு தேவாலயத்தின் மய்தானம். அந்த தேவாலயத்தின் பங்குத் தந்தை அருட்திரு. வின்சென்ட் டிசோசாவை அதிரடிப்படையினர் கடுமையாக மிரட்டினர். அந்த மிரட்டல்களுக்கு அவர் சிறிதும் அஞ்சவில்லை. உறுதியாக நின்று மாநாட்டு ஏற்பாடுகளில் கலந்து கொண்டதுடன், மாநாட்டைத் தலைமையேற்றும் நடத்திக் கொடுத்தார்.

பிலவேந்திரனின் மனைவி கமலா மேரி, ''இந்த தைரியம் எங்களுக்கு முன்னமே வந்திருந்தால், எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம். இனிமேல் ஒரு உயிர்கூட போக நாம் அனுமதிக்கக் கூடாது'' என உறுதிபட சொன்னார். மக்களை நேரடியாக மிரட்டியது போதாதென்று, அவர்களை திசை திருப்புவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது அதிரடிப்படை.

''தன் சுயநல விடுதலைக்காக நாகப்பாவை பலி கொடுத்ததாக'' தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை குற்றம் சாட்டி - 'நாகப்பா பிரிவால் வாடும் குடும்பத்தினர்' என்ற பெயரில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. ஒட்டியவர்கள் அதிரடிப்படை 'வீரர்கள்'. இதில் வேடிக்கை என்னவெனில், மாநாட்டிற்கு அடுத்த இரண்டு நாட்களில் வர இருந்த கன்னட வருடப்பிறப்பிற்கு நாகப்பாவின் மருமகன், கொளத்தூர் மணிக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். நிலைமை இவ்வாறிருக்க, அதிரடிப்படையினரே பொய்ப் பெயரில் இச்சுவரொட்டியை அச்சடித்திருந்தனர் என்பது அம்பலமாகியது.

மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் பொருளாளர் பேராசிரியர் கல்யாணி, ''சதாசிவம் கமிஷன் அறிக்கை வெளிவரும்போது, அதிரடிப்படையினர் பலருக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது உறுதி. எனவே, அதிரடிப்படையினரே! நன்றாகக் கேளுங்கள், இந்த நால்வருக்காக மட்டுமல்ல, உங்களுக்காகவும்தான் கேட்கிறோம் - ஒட்டுமொத்தமாக மரண தண்டனையே ஒழிக்கப்பட வேண்டும்'' என்று உரையாற்றினார்.

புதுவை கோ. சுகுமாரன், வழக்கு பற்றிய ஒரு நுணுக்கமான தகவலை எடுத்துரைத்தார்: ''இவ்வழக்கில் ஒரு காவல் துறை அதிகாரியின் சாட்சியம் ஒன்றை மட்டுமே வைத்து மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அடையாள அணிவகுப்பு கூட நடத்தப்படவில்லை. நீதிமன்றத்தில் அடையாளம் காட்டியதோடு சரி. இப்படி ஒரு பலவீனமான சாட்சியை வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு, நாளை இவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரியவரும்போது - இவர்கள் உயிருக்கு யார் பொறுப்பு?''

'மக்கள் காண்காணிப்பகம்', 'சிக்ரம்', 'மக்கள் சிவில் உரிமைக் கழகம்' - தமிழ் நாடு, கர்நாடகம், 'தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கம்', 'சோக்கோ அறக்கட்டளை', 'மக்கள் உரிமைக் கூட்டமைப்பு' ஆகியவை முன்னின்று நடத்திய இம்மாநாட்டில், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, கர்நாடக மாநில மனித உரிமை அமைப்பினரும் கலந்து கொண்டு குரல் கொடுத்தனர்.

ஆக, இம்மாநாடு மொழி எல்லைகளைக் கடந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக உரத்து ஒலித்திருக்கிறது. இம்மக்களின் துணிவும் ஒற்றுமையுமே - அவர்களுக்கான விடிவைப் பெற்றுத் தரும் என்பதில் அய்யமில்லை. அத்தகு விடிவை நோக்கிய அவர்களின் போராட்டத்திற்குத் துணை நிற்பது, மனித உரிமைப் போராளிகள் ஒவ்வொருவரின் கடமையாகும். ●



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## சமூகத்தின் அச்சாணி




அக்கால தலித் தலைவர்கள் பற்றியும், இக்கால தலித் இயக்கங்கள் பற்றியும் வெளியிட்டு, சமூக உணர்வைத் தூண்டி விடும் 'தலித் முரசு' - ஓர் உன்னதமான இதழ். இதைப் படிக்கப் படிக்க பேராவலாக இருக்கிறது. பள்ளிகொண்டா கிருஷ்ணசாமியைப் பற்றி ஏபி. வள்ளிநாயகத்தின் விரிவான பதிவு, மிகவும் தேவையான ஒன்று. ரொம்பவும் தத்ரூபமாக எழுதி வருகிறார். 'தலித் முரசு' நம் சமூகத்தை ஒன்றுபடுத்தும் அச்சாணியாக இருக்கும் என நம்புகிறேன்.

மு. சந்திரசேகரன், *அரக்கோணம்*

■ 'பகுத்தறியுங்கள்' தலையங்கத்தைப் படித்துவிட்டு, பார்ப்பனர்கள் பாய்ந்து பிராண்டுகிறார்கள். முற்போக்கு முகவாண்மையர்கள், இன்னமும் தவறாக வியாக்கியானம் செய்து வருகின்றனர். உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அம்பேத்கர், பெரியார் பாதையில் சரியான வழிகாட்டும் 'தலித் முரசு' தன் பணியைத் தொடரட்டும்.

த. தமிழரசி, *பழனி*

■ செருப்பணிந்து தெருவிற்குள் வந்தால், ஒரு தலித்தைக் கை நீட்டி அடிக்கிற ஆதிக்க சாதியே! காலங்காலமாக கடைப்பிடித்து வந்த உன்நாட்டார் தெய்வ வழிபாட்டு முறையைத் தடை செய்கிறதே பார்ப்பனக் கூட்டம், அதற்கு எதிராக என்ன செய்வாய்? என்று மக்களை உசுப்புவதற்குத் தான் இந்தக் கிடா வெட்டு. நீங்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், மக்களின் நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்து கிடாவெட்டு நடைபெறவில்லை.

குருசாமி மயில்வாகனன்
*சிவகங்கை*

■ சங்கராச்சாரிக்கு பதிலடி கொடுத்துள்ள யாழன் ஆதியின் ஒவ்வொரு வரியும் மிக அருமை. நம்மவர்கள் காஞ்சி சங்கரனை சந்திப்பது மிகக் கேவலமானது.

க. நாத்திக நந்தனார், ஓட்டேரி

■ நான் 1927 இல் மலேசியாவில் பிறந்தவன். எமது மூதாதையர்கள் தமிழகத்திலிருந்து ஆங்கிலேயர்களால் 180 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு செல்லப்பட்ட அடிமைகள். மு. வரதராசு அவர்களின் பேட்டி கண்டேன். 'மலேசியாவில் சாதி வெறி' என்று அவர் கூறியிருப்பது - நூற்றுக்கு நூறு உண்மையானது.

தியாகி மலேயா **சக்தி மோகன்**
*திருவொற்றியூர்*

■ அசோக் போயர் கட்டுரை கருத்தாழமிக்கது. பார்ப்பனியத்தை மட்டுமே குறைகூறுவது, பொறுப்பைத் தட்டிக் கழிப்பது என்ற சுய ஆய்வு மிகச் சரியானது.

**ஏ.எம். ரசூல் மொகிதீன்**
*வடலூர்*

■ நமது தலைவர்களுக்கு சிலை வைப்பது, மண்டபம் கட்டுவது, பெயர் சூட்டுவது மட்டுமே சமூகப் பணி என்று கூறுபவர்கள், மக்களை மூடப்பழக்கங்களில் இருந்து விடுவிக்க - பகுத்தறிவைப் புகட்ட என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? குறைந்தபட்சம் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நூலகத்தையாவது இவர்கள் அமைக்க முன்வர வேண்டும்.

பே. மாரியப்பன், *மீன்துள்ளி*

■ பிரதமர் வாஜ்பேயியின் இந்துத்துவ பண்பினை, நூற்றுக்கு நூறு வழுவாமல் - 'ஆரியம் ஒளிர்கிறது' என்று ஓவியம் தீட்டியிருப்பது, எந்த இதழாளரும் செய்யாதது. மலேசியத் தோழர். மு. வரதராசு செவ்வியில் பல அதிர்ச்சியூட்டும் அரிய செய்திகளைக் காணமுடிந்தது.

மு. அந்தாலனார், *கள்ளக்குறிச்சி*

■ தலித் மக்களின் அமைப்புகளையும், சான்றோர்களையும் கொச்சைப்படுத்தும் - ஆதிக்க மனோபாவம் கொண்ட 'தினமலரை' இனி, தலித்துகள் தீண்டாதிருப்போம்.

மருதநிலன், நெல்லை

### எதிர்பார்ப்பின்றி வாதாடியவர்

'தலித் முரசு' மார்ச் இதழில் வழக்குரைஞர் கே. சந்துரு அவர்களின் பேட்டியைப் படித்தேன். நான் வேலூர் ஊரிஸ் கல்லூரியில் பொருளாதாரத் துறை மூன்றாம் ஆண்டு மாணவன். நான் மூளைவாதத்தினால் ஊனமுற்ற மாணவன். என்னால் வேகமாக எழுத முடியாது. தேர்வு எழுத Scribe கேட்டதற்கு, பல்கலைக் கழகம் மறுத்துவிட்டது. வழக்குரைஞர் சந்துரு அவர்களை, என்னுடைய பேராசிரியர் இளங்கோவன் மூலம் தொடர்பு கொண்டேன். பணம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல், என்னை நேரில் பார்க்காமலேயே உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, எனக்குத் தேர்வு எழுத உதவியாளர் ஒருவரை நியமிக்க ஆணை பெற்றுத் தந்தார் சந்துரு. அவரது பேட்டியின் மூலம் எங்களைப் போன்றவர்கள், அவரது வாழ்க்கைப் போராட்டத்தை அறிந்து கொள்ள வகை செய்துள்ளீர்கள்.

ஈ. திருநாவுக்கரசு, *ஊரிஸ் கல்லூரி, வேலூர்*

■ மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை, காயங்களை, வெளிவுலகிற்கு உறைக்கும்படி உணர்த்தி - தரமான கட்டுரைகள், செய்திகள், கவிதைகள் எனப் பல்வேறு வகையிலும் மனிதம் பற்றி விவாதிக்கும் 'தலித் முரசு' மிகச் சிறந்த சமூகக் கடமையினைச் செய்து வருகிறது.

**ப.க. ராசா ராவணன்**
*சிவகிரிப்பட்டி*

■ 'ஆரியம் ஒளிர்கிறது' அட்டைப்படம் மிகச் சிறப்பு. யாழன் ஆதியின் கவிதை வரி, மின்சாரம் பாய்ச்சுவது போல் உள்ளது. 'பகுத்தறியுங்கள்' தலையங்கம், கிருத்துதாசு காந்தியின் 'தினமலரின் தீண்டாமைத் தினவு', 'இந்தியா ஒளிர்கிறதா, நாறுகிறதா?' ஆகியவை மிக மிகச் சிறப்பாக உள்ளது.

**த.மு. தமிழமுதன்**
*வேப்பலைப்பட்டி*

■ மாவீரன் இமானுவேல் சேகரன் நூல் விமர்சனத்தை தய். கந்தசாமி, தலித் விடுதலைக்கான சரியான பார்வையில் ஆய்வு செய்துள்ளார். சாதிப்பிரிவுகளைக் கடந்து பணியாற்றிட, இதுபோன்ற மனந்திறந்த விமர்சனங்கள் தேவைப்படுகின்றன.

கோ. நீலமேகம், *தியாகராயர் நகர்*

■ இதுநாள்வரை மற்ற தோழர்களிடம் வாங்கிப் படித்து வந்த தலித் முரசை, இனி எனக்கு சொந்தமாக்கிக் கொண்டேன். மார்ச் இதழ் அட்டை அற்புதம். அருமையான தலையங்கம். சிறப்பான கட்டுரைகள், மொத்தத்தில் 'தலித் முரசு' ஒளிர்கிறது.

அ. தமிழ்ச் செல்வன், *தருமபுரி*



படிப்பகம்

www.padippakam.com



# தோழர் அம்பேத்கர் மிகப் பெரிய தைரியசாலி

தலைவரவர்களே, தோழர்களே, 1925 ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல; மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்து வந்திருக்கிறது என்பதால். ஆனால், வடநாட்டில் அப்படியல்ல. வட நாட்டில் இருக்கிற இந்த பேதத்தைப் பற்றி, இழிசாதித் தன்மையைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. சூத்திரன், பஞ்சமன் என்றால், ஏதோ 'திவான் பகதூர்', 'ராவ் பகதூர்' பட்டம் என்பது போன்ற பட்டம் என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிற மக்கள் வாழும் நாடு அது. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால், கடினமான காரியமாகும்.

ஆனால், அங்கேயே 1927, 1928லேயே அம்பேத்கர் சுயமரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார். நாசிக்கில் கூடிய ஒரு மாநாட்டிலே ராமாயணத்தைப் போட்டுக் கொளுத்தியிருக்கிறார். 1930 இல் என்று நினைக்கிறேன் - 'தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்திலே இருப்பது தவறு; இந்து மதந்தான் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக்கியது' என்பதாகச் சொல்லி, 'அனைவரும் முஸ்லிம் ஆகவேண்டும்; நானும் முஸ்லிம் ஆகப் போகிறேன்' என்று அவர் சொன்னார். எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதைக் கண்டித்தார்கள். மாளவியா, விஜயராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம், 'அம்பேத்கர் அவர்களே, உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள், என்பதாகத் தந்தி கொடுத்தார்கள்.

அப்போது தோழர் அம்பேத்கர் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், 'நீங்கள் ஒண்டியாகப் (தனியாகப்) போகக்கூடாது; குறைந்தது ஒரு லட்சம் பேரோடு மதம் மாறவேண்டும்; அப்போதுதான் முஸ்லிம் மதிப்பான். இல்லாவிட்டால், தனியாக



அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்க மாட்டான். உங்கள் தாழ்த்தப்பட்ட இனம் நசுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கும். முஸ்லிம் ஆகிவிட்டால், இந்து மதத்தின் இழிவு பற்றி நீங்கள் பேசினால், 'முஸ்லிம் இந்து மதத்தைப் பற்றி பேசுவதா?' என்பதாகக் கிளப்பிவிடுவார்கள். ஆகையால், ஒரு லட்சம் பேரோடு தாங்கள் போகும்போது - நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்' என்பதாகத் தந்தி கொடுத்தேன்.

அதற்கப்புறந்தானே - பயந்து கொண்டு, ஆதித் திராவிட மக்களுக்கு காங்கிரஸ்காரர்களும் ஏதோ நன்மை செய்வதாக வந்தார்கள். 'மதம் மாறுவேன்' என்று மிரட்டிய தோழர் அம்பேத்கர் அவர்கள், ஆதித் திராவிட மக்களுக்குப் பெரும் அளவுக்கு நன்மை செய்து கொடுத்திருக்கிறார்.

இன்னும், தோழர் அம்பேத்கர் அவர்களின் தைரியத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். லண்டனில் காந்தியார், 'நான் இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னபோது, 'நீங்கள் எங்கள் இனத்தின் பிரதிநிதியல்ல' என்று அம்பேத்கர் அவர்கள் சொன்னார். காந்தியார் திரும்பவும், 'இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னவுடன், அம்பேத்கர் அவர்கள், 'பத்துத் தடவை சொல்லுகிறேன், நீங்கள் எங்கள் பிரதிநிதி அல்ல என்று. திரும்பத் திரும்ப வெட்கமில்லாமல் பிரதிநிதி என்று சொல்லுகிறீர்கள்; நீங்கள் உங்களுடைய 'மகாத்மா' பட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள்' என்பதாகச் சொன்னார். காந்தியார் பேசாமல் உட்கார்ந்து விட்டார். பின்பு, இந்திய நாட்டுப் பத்திரிகைகள் அம்பேத்கரைக் கண்டபடி தாக்கின. ஆனால், அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அவருடைய தைரியத்திற்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். அவர் மந்திரியாக இருக்கும்போது, ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு கூட்டத்தில் பேசும்போது, 'கீதை - முட்டாள்களின் பிதற்றல்' என்று சொன்னார். கீதைக்கு இந்த நாட்டில் எவ்வளவு விளம்பரம் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். காந்தியாரிலிருந்து, ஆச்சாரியாரிலிருந்து - பெரிய பெரிய அய்க்கோர்ட் ஜட்ஜுகள், இன்னும் பெரிய மனிதர்கள் என்பவர்களெல்லாம் கீதையைப் புகழ்வதையே வேலையாகக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; கீதைக்கு வியாக்கியானம் கூறுவது, கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது என்பது - ஒரு மதிப்பு, கவுரவம் என்பதாக இந்த நாட்டில் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரும் விளம்பரமான நிலையிலிருக்கிற கீதையை, 'முட்டாள்களின் பிதற்றல்' என்று அம்பேத்கர் சொன்னார். முட்டாள்களுடையது என்றாலே மோசம்; அதிலும் அந்த முட்டாள்களுடைய பிதற்றல் என்று கீதையை மிகவும் இழிவுபடுத்திக் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள், இப்போது கொஞ்ச நாட்களாக பவுத்தக் கொள்கையில் சேரப்போவதாகச் சொல்லி வருகிறார். உண்மையில், பவுத்தம் ஒரு உயர்ந்த மார்க்கமாகும். அது, ஆரியத்தை - அதன் கலாச்சாரத்தைக் கண்டிப்பதற்கு என்றே எழுந்ததாகும். ஆரியத்தின் சாதிப்பிரிவையும், வேத, புராண, இதிகாசத்தைப் பற்றியும் பவுத்தம் கண்டிக்கிறது; அவைகளை ஒத்துக் கொள்வதில்லை. அதே மாதிரி, பவுத்தம் கடவுள் என்பதாக ஒன்றைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அதுபோலவேதான் 'ஆத்மா' என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லி, 'ஆத்மா'வை மறுத்திருக்கிறது.

*சென்னையில், 13.5.1952 அன்று ஆற்றிய உரை. 'விடுதலை' 16.5.1952*

**“ நீங்கள் எங்கள் இனத்தின் பிரதிநிதியல்ல' என்று அம்பேத்கர் அவர்கள் சொன்னார். காந்தியார் திரும்பவும், 'இந்திய மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறேன்' என்று சொன்னவுடன், அம்பேத்கர் அவர்கள், 'பத்து தடவை சொல்லுகிறேன், நீங்கள் எங்கள் பிரதிநிதி அல்ல என்று. திரும்பத் திரும்ப வெட்கமில்லாமல் பிரதிநிதி என்று சொல்லுகிறீர்கள்; நீங்கள் உங்களுடைய 'மகாத்மா' பட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறீர்கள்' என்பதாகச் சொன்னார். காந்தியார் பேசாமல் உட்கார்ந்து விட்டார். ”**

www.padippakam.com

DALITH MURASU, Tamil Monthly, Postal Regd. No.
Dn./19/03-05 Posted at Patrika Channel RMS/1 Egmore




Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15, Editor : Punitha Pandiyan